# பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின நிருபம்



## A. பவுல் தன்னை அறிமுகப்படுத்துகிறார் (1:1-7)

1. இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரன் (1:1)

- பவுல் தன்னை ஓர் ஊழியக்காரன் என்பதை குறிக்க "அடிமை" என்ற பதத்தை பயன்படுத்துகிறார்.
  - ➢ அந்நாட்களில் அடிமையானவன் ஒரு மனிதனாக அல்ல ஒரு உடைமையாகவே கருதப்பட்டான்.
  - ➢ பவுல் கிறிஸ்துவின்மேல் உள்ள அன்பினிமித்தம் தன்னை ஓர் ஊழியக்காரன் என்றும் அவர் சித்தம் செய்யும்படியாக தன்னை அடிமையாக்கியும் கொண்டார்.
  - ❖ *நம்மை அவர் சித்தம் செய்யும்படியாக அடிமையாக ஒப்புக்கொடுத்துள்ளோமா?*

2. அப்போஸ்தலன் (1:1)

- அப்போஸ்தலன் என்பதன் பொருள் "ஒரு குறிப்பிட்ட வேலைக்காக அனுப்பப்பட்டவன்"
  - a. அப்போஸ்தலருக்கு உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை கண்ட அனுபவம் தேவை.
  - ➢ 1 கொரி 9:1-2, கலா 1:1, அப் 9:1-9 - பவுல் தமஸ்குவுக்கு செல்லும் வழியில் கண்டார்.
  - b. அப்போஸ்தலர்கள் நேரடியாக சத்தியத்தை கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டவர்கள்
  - ➢ நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன் (1 கொரி 11:23)
  - ❖ *உயிர்தெழுந்த கிறிஸ்துவை கண்ட அனுபவம் நம்மிடம் உண்டா?*

3. சுவிசேஷப் பிரசங்கி (1:1 -4)

- நியாயப்பிரமாணங்களுக்காக வைராக்கியமாக இருந்தவர். ஆனால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதும் சுவிசேஷத்திற்க்காக வைராக்கியம் பாராட்டினார்.
  - ➢ 1 கொரி 15:1-4 --- சுவிசேஷம் (நற்செய்தி) என்பது: கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்து,அடக்கம்பண்ணப்பட்டு,மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். இன்று தம்மை விசுவாசிக்கும் எவரையும் இரட்சிக்க வல்லவராய் இருக்கிறார் என்பதாகும்.
  - ❖ *சுவிசேஷம் அறிவிக்க நமக்கு வைராக்கியம் உண்டா?*

<u>பவுல் இந்த சுவிசேஷத்தை கீழ்கண்டவாறு கூறுகிறார்</u>

a. தேவனுடைய சுவிசேஷம் (1:1) - மனிதனால் அல்ல தேவனால் அருளப்பட்டது.
b. தமது குமாரனுடைய சுவிசேஷம் (1:9) - கிறிஸ்து தேவனுடைய குணங்களை உடையவர்.
c. கிறிஸ்துவின் சுவிசேஷம் (1:16) - இரட்சகரான கிறிஸ்துவை மையமாககொண்டது.
d. என் சுவிசேஷம் (16:25-26) - தனது ஊழியத்தில் திருச்சபைக்கும், தேவதிட்டத்தில் புறஜாதிகளுக்கும் தாம் கொடுத்த முக்கியத்துவத்தை காட்டுகிறார்.
   - ➢ *சுவிசேஷம் என்பது புதிய ஒரு செய்தி அல்ல பழைய ஏற்பாட்டிலேயே அநேக தீர்க்கதரிசிகளால் சொல்லப்பட்ட செய்தியே! ஆனால் சொல்லப்பட்ட அந்த செய்தியை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. (1பேது1:10-12)*

### i) ரோமாபுரி சபையின் இயல்பு

1. யூதர்கள் மற்றும் புறஜாதிகள் நிறைந்த சபை
   - a. 16:3-16ல் பவுல் குறிப்பிட்டுள்ள பெயர் பட்டியலில் யூதர்கள் மற்றும் புறஜாதிகள் பெயர்களை காணலாம்.
   - b. கடிதத்தில் இருசாராரையும் குறிப்பிடுகிறார்
     - ➢ 4:1-3 - யூதர்கள்
     - ➢ 1:13; 11:13; 15:15,16; - புறஜாதிகள்
   - c. செய்தி இருசாராருக்கும் அடங்கியுள்ளது
     - ➢ 1:18-3:31 - புறஜாதிகளின் பாவத்தையும், யூதர்களின் தோல்வியையும் விளக்குகிறார்.
     - ➢ 15:5-12 - யூதர்கள் மற்றும் புறஜாதிகளின் தேவையையும், ஒருவருக்கொருவர் ஏற்றுக்கொள்வதையும், இருசாராரும் சேர்ந்து கர்த்தரை துதிப்பதையும் குறிப்பிடுகிறார்.
2. சபையின் ஆரம்பம்
   - a. பெந்தேகோஸ்தே நாளில் யூதர்களும், ரோமில் இருந்து வந்தவர்களும் வசனத்தை கேட்டுவிட்டு போய் சபையை ஆரம்பித்திருக்கலாம் (அப் 2:10)
   - b. சிதறிப்போன விசுவாசிகள் சுவிசேஷத்துடன் அநேக இடங்களுக்கு சென்றதுபோல ரோமாபுரிக்கும் சென்று சபையை ஆரம்பித்திருக்கலாம் (அப் 8:4 11:19-21)

3. பவுல் மற்றும் ரோமாபுரி விசுவாசிகள்
   a. பவுல் இவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்ததுமில்லை, இவர்களை பார்த்ததுமில்லை (1:13)
   b. ஆனாலும் அங்குள்ள சில விசுவாசிகளின் பேர்முதலாய் அறிந்திருந்தார் (16:3-9)
   c. அவர்களில் சிலர் பவுலின் உறவினராகவும், அவருடன் சேர்ந்து ஊழியம் செய்தவர்களாகவும் இருந்தனர்.

**ii)** கடிதத்தின் நோக்கம்
   a. பவுலின் வருகையை குறித்து முன்னறிவிக்க (15:28-32)
      - ஆனால் பவுலின் இந்த விருப்பம் நிறைவேறவில்லை (அப் 19:21)
   b. ஊழியக்காரியாகிய பெபேயாளை ஏற்றுக்கொள்ளும்படியாக (16:1,2)
      - இந்த கடிதத்தை பெபேயாள் எடுத்து சென்றிருக்கலாம்
   c. சுவிசேஷத்தை குறித்ததான தெளிவான சத்தியத்தை எடுத்துரைத்து அவர்களை ஸ்திரப்படுத்த (16:25)
   d. கள்ள தீர்க்கதரிசிகளுக்கு எதிர்த்துநிற்கபடியாக (16:17-19)

**iii)** கடிதம் எழுதப்பட்ட இடம்: கொரிந்து
   a. பெபேயா கொரிந்துபட்டணத்தின் துறைமுகப்பட்டணமாகிய கெங்கிரேயாவைச் சேர்ந்தவள் (16:1)
   b. கொரிந்துவோடு சம்பந்தப்பட்ட இரு நபர்கள்
      - பவுலை உபசரித்த காயு (16:23; 1 கொரி 1:14)
      - பட்டணத்து உக்கிராணக்காரன் எரஸ்து (16:23; 2 தீமோ 4:20)

**iv)** கடிதம் எழுதப்பட்ட காலம்: கி.பி 55-58
   a. பவுல் கொரிந்துவில் இருந்த மூன்று மாத காலத்தில் எழுதப்பட்டது (15:24-31; அப் 19:21; 20:1-3).
   b. தனது மூன்றாம் மிஷினரி பிரயாணத்தின் இறுதியில்… எருசலேமில் உள்ள விசுவாசிகளுக்கு உதவியாக தர்மபணத்தை எடுத்துச்செல்வதற்கு முன்பாக எழுதப்பட்டது.

**v)** கடிதத்தின் கருப்பொருள்
- இரட்சிப்பு – தேவன் பாவியை விசுவாசத்தினாலே கிறிஸ்துவுக்குள் நீதிமானாக்குகிறார்.
- இந்த புஸ்தகத்தின் ஒவ்வொரு பகுதியும் கருப்பொருளையும் (இரட்சிப்பு), சுவிசேஷத்தினுடைய வேறுபட்ட குணாதிசயங்களையும் காட்டுகிறது.

பவுலின் வாழ்த்துதல் (1:1-7)

1. சுவிசேஷத்தின் ஆசிரியர் - தேவன் (வச.1)
   நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷம் (1 தீமோ 1:11)

<u>தேவனிடத்திலிருந்து வருகிற செய்தி…</u>
- தேவனுடைய வாக்குத்தத்தம் - இரட்சகர் இயேசுகிறிஸ்து (1:2)
- தேவனுடைய கிரியை – ஒருவனை மாற்றக்கூடிய வல்லமையுடையது (1:16)
- தேவனுடைய நீதி – சுவிசேஷத்தினால் வெளியாக்கப்பட்டுள்ளது (1:17)

2. சுவிசேஷத்தின் பொருள் - கிறிஸ்துவைப்பற்றியது (1:5)

<u>கிறிஸ்துவின் சுபாவம்</u>
   a. மனுஷீகம்
      - மாம்சத்தின்படி பிறந்தவர் - மனுஷரூபமாக காணப்பட்டவர் (யோவான் 1:14)
      - உயிர்த்தெழுந்தபின்பும் மாம்சத்தில் இருந்தவர் (லூக்கா 24:39)
   b. தெய்வீகம் - தேவனுடைய குமாரன் அதாவது தேவனுக்கு சமமானவர் (யோவா 5:17,18)
      - தேவகுமாரன் மனுஷகுமாரனாகவும் இருக்கிறார் (எபி 1:8)
      - அவர் பிறந்தபோது சாஸ்திரிகள் பணிந்துகொண்டனர் (மத் 2:11)
      - சிலுவையில் மரித்தபோது நூற்றுக்கு அதிபதி தேவனுடைய குமாரன் என அறிந்துகொண்டான் (மத் 27:54)
      - உயிர்த்தெழுதலில் நிருபிக்கப்பட்டார் (1:4)

3. சுவிசேஷத்தின் பயனாளி (1:2) - ரோமாபுரியார் மற்றும் எல்லா விசுவாசிகளுக்கும்
   a. யூதர் மற்றும் கிரேக்கர் (1:16)
      - யூதர் (கலா 2:15,16) - இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.

- புறஜாதி (எபே 3:3) - புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே ஒரே சரீரத்திற்குள்ளானார்கள்.

b. கிரேக்கர் மற்றும் அந்நியர் (1:14)
- கிரேக்கர் - நாகரீகமுள்ளவர்கள், கிரேக்க மொழியானது இப்போதுள்ள ஆங்கிலத்தைப்போல பிரசித்திப்பெற்றது. அநேக தத்துவ ஞானிகளை கொண்டவர்கள்.
- அந்நியர் - நாகரீகம் இல்லாதவர்கள் (அப் 28:2)

c. ஞானி மற்றும் மூடர் (1:14)
- உலகமானது தன்னுடைய ஞானத்தினால் தேவனை அறியமுடியாது (1 கொரி 1:21)
- பேதைகளை ஞானியாக்குகிறார் (சங் 119:130; அப் 4:13)
  - ❖ சுவிசேஷம் அனைத்து தரப்பு மக்களுக்குமே.

4. சுவிசேஷத்தின் வாய்க்கால் (1:1,4)

a. அப்போஸ்தலர்கள்

b. தீர்க்கதரிசிகள்

c. பரிசுத்த வேதாகமங்கள்

இப்பொழுதோ தேவன் தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவரையும் பயன்படுத்துகிறார்.

5. சுவிசேஷத்தின் நோக்கம் (1:7)

விசுவாசித்துக்குக் கீழ்ப்படியவேண்டும்.

<u>சுவிசேஷத்திற்கு கீழ்படியும்போது...(1:2,3)</u>
- தேவனுக்கு பிரியராக மாறுகிறோம்
- பரிசுத்தவான்களாகிறோம்
- கிருபையும், சமாதானமும் கிடைக்கிறது.

## B. <u>ரோமாபுரியாரை சந்திக்கவேண்டும் என்ற பவுலின் விருப்பம் (1:8-17)</u>

1. ரோமாபுரி சபையாருக்காக ஸ்தோத்திரம் செலுத்துகிறார்: (1:8)
   - அவர்களுடைய விசுவாசம் உலகம் எங்கும் பரவியதற்காக ஸ்தோத்திரம் செலுத்துகிறார். (இப்படி பரவிய சாட்சி பவுலின் ஊழியத்தை எளிதாக்கியது).
   - உங்களெல்லாருக்காகவும் - 16 ம் அதிகாரத்தில் 25 பேருக்கும் மேலான பெயர்களை குறிப்பிடுகிறார்.
2. ரோமாபுரி சபையாருக்காக ஜெபிக்கிறார் (1:9-10.)
   - இடைவிடாமல் ஜெபிக்கிறார் (வச. 9)
   - ரோமாபுரி செல்லவும் அங்குள்ள சபைகளுக்கு ஊழியம் செய்யவும்வேண்டும் என்ற குறிப்பிட்ட தேவையை முன் வைத்து ஜெபிக்கிறார் (வச. 10-12)
3. ரோமாபுரி செல்ல வேண்டும் என்ற திட்டம் (1:11-13)

- பவுல் ரோமாபுரியாரை பார்க்க வாஞ்சித்துவந்தார் ஆனால் அநேகந்தரம் தடைபட்டார் (1:13; 15:22-23).
  - தேவன் தடுத்திருக்கலாம் (அப் 16:7)
  - பிசாசு தடுத்திருக்கலாம் (1 தெச 2:17,18)
  - பிற இடங்களில் சுவிசேஷம் அறிவிப்பதற்கான அவசியம் (15:20-22)
  - எதிர்பாராத சூழ்நிலைகள் (15:28-31, அப் 21:17-36). எருசலேமுக்கு போனதும் கைதாகிறான்.

❖ தடைகள் வரும்போதெல்லாம் அதிகமான ஜெபம் அவசியமாயிருக்கிறது (1 கொரி 16:7,9).

- பவுல் ரோமாபுரியாரை சந்திக்க விருப்பம் கொண்டதின் காரணம்
  1. ரோமாபுரியாரை ஸ்திரப்படுத்த (வச.10)
  2. ரோமாபுரியார் மூலமாக பவுல் ஆறுதலடைய (வச. 11)
  3. ரோமாபுரியாருக்கு சுவிசேஷம் அறிவிக்க (வச. 13)
  4. ஸ்பானியாவுக்கு ரோமாபுரியாரால் வழிவிட்டனுப்பப்படவும் (15:24)

❖ ஆனால் கைதியாகத்தான் ரோமாபுரி சென்றார். அநேக சமயங்களில் நமது விருப்பம் அல்ல, தேவனுடைய சித்தமே நடைபெறும்.

4. சுவிசேஷம் அறிவிப்பதில் காணப்படும் மூன்று காரியங்கள் (1:14-16)

a. <u>சுவிசேஷத்தின் ஆரம்பம் (வச.1,16)</u>
- சீசரிடமிருந்து (ரோம அரசன்) வரும் எந்தஒரு செய்தியும் ரோமர்களின் உடனடி கவனத்தை பெறும். ஆனால் சுவிசேஷமோ தேவனிடத்திலிருந்து வந்ததும் அவருடைய குமாரனைப்பற்றியதாகும்.

b. <u>சுவிசேஷத்தின் வல்லமை (வச.16 – லூக்கா 24:46,47)</u>
  - இது இரட்சிப்பதற்கு வல்லமையுள்ளது
  - ரோமில் வல்லமை காணப்பட்டாலும் அது பாவம் நிறைந்த சாக்கடையே. பாவம் நிறைந்த ஒரு மனிதனை மாற்றுவது சுவிசேஷமே என்பதை உணர்ந்திருந்தார். தன்னை மாற்றிய சுவிசேஷம் ரோமையும் மாற்றும் என்பது அவருக்கு தெரியும்.
  - ஆகவே வெட்கப்படாமல் அறிவிக்கவேண்டும்

c. <u>சுவிசேஷத்தின் எல்லை (வச. 13,15)</u>
  - எல்லா இடத்திற்க்கும் (15:19-24 - அப் 1:8)
  - எல்லா மக்களுக்கும (1:14,16 – மத் 28:20)

<u>சுவிசேஷ பிரசங்கி (யோவா 20:21)</u>
  - இதற்காகவே பிரித்தெடுக்கப்பட்ட பவுல் (1:1)
  - இதற்காகவே நியமிக்கப்பட்டவன் (2 தீமோ 1:11)
  - பவுலை உண்மையுள்ளவனென்று எண்ணி ஒப்புக்கொடுத்தார் (1 தீமோ 1:12)
    - ➢ ஆகவே பவுல் தன்னை சுவிஷேத்திற்கு கடனாளி என்று கூறுகிறார் (1:14)
    - ➢ இது தனது கடமை என்கிறார் (1 கொரி 9:16,17)

## C. <u>புறஜாதி மக்களின் அவபக்தி (அ) பாவநிலை (1:18-32)</u>

இப்பகுதியானது பரிணாமக்கொள்கைக்கு (குரங்கில் இருந்து வந்தவன்) முற்றிலும் மாறானது. எப்படியெனில், கடவுளின் படைப்பில் மேன்மையான இடத்தில் இருந்த மனிதன் வீழ்ச்சியடைந்து மிருகங்களைவிடவும் கேவலமான நிலைக்கு ஆளானான் என்றே போதிக்கிறது.

a. மனுஷருடைய அவபக்தி (1:18) – தேவனைக்குறித்தும், அவருடைய ஆள்த்துவம், அவருடைய செயல்பாடு, மற்றும் அவருடைய பண்புகளைக் குறித்ததான அலட்சியம்,

b. மனுஷனுடைய அநியாயம் (1:18) - நீதிநெறிகளையுடைய வாழ்க்கையை குறித்ததான அலட்சியம், சகபாலினத்தை தவறாக பயன்படுத்துதல்.
  - அவபக்தியானது அநியாயமான வாழ்க்கைக்கு நேராக நடத்தும்
  - அவபக்தியானது தேவனிடமிருந்து நம்மை விலக்கும்

1. <u>தேவன் தன்னை வெளிப்படுத்துகிறார் (1:19-20)</u>

சிருஷ்டிப்பின் மூலமாக தேவன் தன்னை வெளிப்படுத்துகிறார் (1:19,20; சங் 19:1).
- ➢ படைத்தவர் ஒருவர் உண்டு என்று..,
- ➢ அவர் நித்தியமானவர் மற்றும் வல்லமையுள்ளவர் என்று..,
- ➢ அவர் நம்மெல்லோருக்கும் தேவன் மட்டுமல்ல அவர் நம்மிடமிருந்து ஆராதனையை எதிர்பார்க்கிறார்.

- உண்டாக்கப்பட்டவைகளின் மூலமாக தேவன் இருக்கிறார் என்பது தெளிவாய் காணப்படும்.
  - ➢ இயற்கையின் படைப்பில் தேவனுடைய பங்கு (ஏசாயா 40:26)
  - ➢ மனிதனுடைய படைப்பில் தேவனுடைய பங்கு (யோபு 35:10,11)
  - ➢ நம் வாழ்வாதாரத்தில் தேவனுடைய பங்கு (அப் 14:17)
- இஸ்ரவேலின் பரிசுத்தர் படைத்தார் என்று... மனிதன் (ஏசாயா 41:20)
  - ➢ கண்டு...
  - ➢ உணர்ந்து...
  - ➢ சிந்தித்து...
  - ➢ அறிவார்கள்...

<u>முடிவுரை</u>
1. சகலத்தையும் சிருஷ்டித்த தேவன் ஒருவர் உண்டு (ஏசா 40:26)
2. அவர் நித்தியமானவர் - சிருஷ்டிப்புக்கு முன்பும், இப்போதும், இனியும் (சங் 90:1-2; 102:24-27)
3. அவர் சர்வ வல்லமையுள்ளவர் - சிருஷ்டித்தது மாத்திரமல்ல, அகிலத்தை இயங்கச்செய்கிறார் (எரே 10:12,13)
4. சர்வ ஞானி – ஞானமாய் சிருஷ்டித்தார் (நீதி 3:19,20; சங் 104:24)
5. அக்கரையுள்ள தேவன் - நாம் ஜீவிப்பதற்கான சகலத்தையும் தருகிறவர் (அப் 14:17; சங் 145:16,17)

2. மனிதனின் பிரதியுத்ரம் (1:21-23)

a. தேவனுடைய வெளிப்பாட்டை மறுதலிக்கிறவனாக காணப்பட்டான்.

- சாக்குபோக்கு சொல்லாமல் தேவனை மனிதன் அறிவதற்காக வெளிப்பாடு கொடுக்கப்பட்டது (1:20)
- மனிதன் தேவனை அறிந்தான் (1:21)
- ஆனாலும் தெய்வத்தை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதில்லை (1:28).

b. தேவனை ஆராதிப்பதில் தவறிப்போனான் (1:21)

- தேவனை மகிமைப்படுத்துவது என்பது தேவன் யார் என்பதையும், அவர் எப்படிப்பட்டவர் என்பதையும் உணருவதாகும்.
  - ➢ சிருஷ்டிக்கர்த்தர்
  - ➢ எப்போதும் நம்மை ஆசீர்வதிக்கிறவர்
- தேவனுடைய கருணை மற்றும் தயவு இவைகளுக்காக நன்றி செலுத்தவேண்டும்.
- மனுஷர் நோக்கிப்பார்க்கிற (பாடியிருக்கிற) அவருடைய கிரியையை நீர் மகிமைப்படுத்த நினையும் (யோபு 36:24)
- அநேக சங்கீதங்கள் கர்த்தரை துதிக்கிற சங்கீதங்களே!

c. தேவனுடைய சத்தியத்தை பொய்யாக மாற்றினர் (1:25; எரே 2:11)

- தெய்வத்தை விட்டுவிட்டு சிருஷ்டிக்கப்பட்டவைகளை வணங்க ஆரம்பித்தான் (1:25)
- மனிதன் தெய்வத்தை மனிதன், பறவைகள்இ மிருகங்கள்இ ஊரும் பிராணிகள் சாயலிலும் வணங்கும் அளவிற்கு தரம் தாழ்ந்துபோனான் (1:23).

  வேதம் விக்கிரகஆராதனையை கண்டிக்கிறது
  - ➢ மனுஷருடைய சித்திரவேலையும், கற்பனையும் தேவனாகாது (அப் 17:29; எரே 16:20)
  - ➢ பொன், வெள்ளி, கல் இவைகள் தேவனாகாது (அப் 17:29; எரே 2:27; ஏசா 44:15-17)
  - ➢ சிருஷ்டிப்புகள் தேவனாகாது (சங் 106:19-22)

  ஏன் மனிதர்கள் பொய்யை விரும்புகிறார்கள்?
  - ➢ அவர்களுடைய தெய்வம் எந்தவொரு ஒழுக்கநெறிகளையும் கோரிக்கையாக முன்வைப்பதில்லை. அவர்களின் பாவ வாழ்க்கையை கண்டிப்பதுமில்லை (எரே 10:5)
  - ➢ ஆனால் மெய்யான தெய்வம் பாவத்தின்மீது கோபமுள்ளவராக இருக்கிறார் (எரே 10:10; 4:4)

d. ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழ ஆரம்பித்தான் (1:24-27)

- தேவன் நியாயத்தின் நெறிகளைத் தற்காத்து, தம்முடைய பரிசுத்தவான்களின் பாதையைக் காப்பாற்றுகிறார் (நீதி 2:8).
- மனிதன் உண்மையான கடவுளை விட்டுவிட்டு பொய்யை பின்னற்றினதால் அவர்களின் விருப்பப்படி வாழ…
  - ➢ தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார் (1:24).
  - ➢ தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார் (1:26).
  - ➢ தேவன் அவர்களைக் கேடானசிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார் (1:28).

e. மனிதன் அநீதியுள்ளவனும் துன்மார்க்கனுமாயினான் (1:28-31)

- இந்த வேதபகுதியில் நமது சமுதாயத்தில் காணப்படுகிற அனைத்து பாவங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது.

f. தேவனுடைய நியாயத்தீர்ப்பை புறக்கணித்தான் (1:32)

- பாவத்திற்கு தண்டனை உண்டு என்ற தேவனுடைய நியாயத்தீர்ப்பை, அறிந்தும் பாவத்தை செய்தனர். மற்றவர்களையும் இப்பாவத்தை செய்ய தூண்டினர்.
- பாவத்தின் நிமித்தமாக மிருகத்தைவிட கீழான மனிதனுக்கு சுவிசேஷம் எவ்வளவு அவசியமாகஇ அவசரமாக இருக்கிறது.

கெட்ட செய்தி

- தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள் (1:27).
- இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்கள் (1:32)

நல்ல செய்தி

- சுவிசேஷமானது இப்படிப்பட்ட மக்களையும் இரட்சிக்க வல்லமையுள்ளதாய் இருக்கிறது.

உதாரணங்கள்

- தெசலோனிக்கேயர் ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, விக்கிரகங்களைவிட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பினார்கள் (1 தெச 1:9)
- கொரிந்தியரில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தார்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டார்கள் (1 கொரி 6:9-11).

## D. பாவிகளுக்கான (அநீதிமான்களுக்கான) தண்டனை (1:32-2:16)

1. தேவனுடைய வெளிப்பாடு: தேவனுடைய நீதி மற்றும் அவருடைய கோரிக்கைகள்

- கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுகிறவர் (சங் 11:7)
- பாவிகளின்மீது கோபபடுகிறவர் (ரோமர் 1:18; எரே 4:4; 17:4)
- மனிதன் இதை நன்றாய் அறிந்திருக்கிறான் (1:32)
- மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதின் மூலம் (2:1) நீதியினுடைய நிபந்தனை அவனுக்கு தெரியும்
- மனிதனுடைய சட்டத்தின்படியும், மனசாட்சியின்படியும் வாழவேண்டும் என்ற ஒழுக்க உணர்வோடு காணப்படுகிறான்.
- இந்த உணர்வானது எது சரி, எது தவறு என்பதை சுட்டிகாண்பிக்கிறது.
- அதுவே அவனை தண்டிக்கக்கூடிய அளவுகோலாயிருக்கிறது.

2. மனிதனுடைய பிரதியுத்ரம்

- மனிதன் குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை அவன் செய்கிறான் (2:1)

3. தண்டனை: நியாயத்தீர்ப்பு

a. செய்த தவறுக்கு நியாயத்தீர்ப்பு சரியே - தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பு (1:32)

b. நியாயத்தீர்ப்பை மனிதன் ஒத்துக்கொள்கிறான் - அவனுக்கு தெரியும்; மற்றவர்களை நியாயந்தீர்க்கிறான் (1:32; 2:1)

c. நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கிறது (2:2,3) - தேவன் விசாரிக்கவேண்டிய அவசியம் இல்லை, சாட்சி தேவையில்லை, சத்தியத்தை அறிந்துகொள்ள ஆதாரத்தை கேட்கவேண்டியதுமில்லை.

- நியாயத்தீர்ப்பு கொடுப்பதில் தேவன் தவறு இழப்பதில்லை
  - அப்பாவி தண்டிக்கப்படுவதில்லை
  - குற்றவாளி தப்புவிக்கப்படுவதுமில்லை

d. நியாயத்தீர்ப்பு செய்த தவறுக்காக மட்டுமல்ல மனந்திரும்பாததற்கும், இருதய கடினத்திற்கும் (2:4,5; எரே 7:24-26,32)

- மனிதன் தனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக்கொள்ளுகிறான் (2:5) காரணம் பாவம் பெருகும்போது தேவகோபமும் பெருகுகிறது.

e. நியாயத்தீர்ப்பில் பட்சபாதமில்லை - யூதனோ, கிரேக்கனோ அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார் (2:6-11).

  - கிரியை என்பது தனிப்பட்ட முறையில் மனிதன் செய்யும் செயல்கள் மட்டுமல்ல தேவனுடைய சத்தியத்திற்கு நேரான அவனுடைய மனப்பாங்கும்கூட…
  - இருவகையான மனப்பாங்கு - தேவனுடைய வழியை தேடுதல்; தேவனுடைய சத்தியத்தை புறக்கணித்தல்

a. மனிதன் அறியப்பட்டிருக்கிற சத்தியத்தின்படி நியாயந்தீர்க்கப்படுவான் (2:11-15)

- யூதர்கள் மோசேயின் பிரமாணத்தின்படி நியாயந்தீர்க்கப்படுவார்கள் (2:12)
- புறஜாதிகள் இருதயத்தில் எழுதியிருக்கிற பிரமாணத்தின்படியும், மனசாட்சியின்படியும் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (2:14,15)

b. இரகசியங்கள் நியாயந்தீர்க்கப்படும்

- கிரியைகள் மட்டுமல்ல நம் வார்த்தைகளும் நியாயந்தீர்க்கப்படும் (மத் 12:36)
- நம்முடைய யோசனைகள் மற்றும் சிந்தைகள் நியாயந்தீர்க்கப்படும் (சங் 7:9; 44:21; எரே 11:20; 16:17; எசே 11:5)

நியாயத்தீர்ப்பின் நாள் ஒன்று உள்ளது (2:5,16)

- இது ஒரு மரண வார்த்தை (1:32 - மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்கள்)
- நியாயத்தீர்ப்பு மரணத்திற்கு பின்பு உள்ளது (எபி 9:27)
- இது இரண்டாம் மரணம் (1:29-32; வெளி 21:8)

கெட்ட செய்தி

- உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களானார்கள் (3:19)

நல்ல செய்தி

- கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை (8:1).

## E. யூதர்களின் பாவம் (2:17-29)

1. தேவனுடைய வெளிப்பாடு - தேவனுடைய ஆள்த்துவம் மற்றும் அவருடைய தெரிந்தெடுப்பு

- இஸ்ரவேலர் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனம் (உபா 10:15; ரோம 9:4,5)
- அவர்களுக்கு தேவனை குறித்தும் அவருடைய சித்தத்தை குறித்தும் அறிவதற்கு சந்தர்ப்பங்கள் இருந்தும் அவர்கள் தாங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்கிற சாட்சியிலே தவறிபோனார்கள்.
- அவர்களுக்கு நியாயப்பிரமாணம், விருத்தசேதனம் கொடுக்கப்பட்டது - இது அவர்களுடைய பிரித்தெடுத்தலை காட்டுகிறது.
    - மற்றும் யூதர்கள் என்ற பெயர் இருந்தது - இது அவர்களுடைய குணத்தை காட்டுகிறது.

நம்மோடு ஒப்பிட்டால்...

- ➢ நியாயப்பிரமாணம் - பரிசுத்த வேதம்
- ➢ விருத்தசேதனம் - ஞானஸ்நானம்
- ➢ யூதர்கள் - கிறிஸ்தவன்

**a.** நியாயப்பிரமாணம் (2:17-24)

- தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது (3:2)
    - ➢ நியாயப்பிரமாணத்தினால் தேவனுடைய சித்தத்தை அறிகிறான் (2:18)
    - ➢ நியாயப்பிரமாணத்தினால் நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கிறான் (2:18)
    - ➢ நியாயப்பிரமாணத்தினால் தேவனுடைய அறிவை பெறுகிறான் (2:19,20)

இஸ்ரவேலின் பிரதியுத்ரம்

- ➢ பெருமை (2:19,20) - தாங்கள்தான் மேன்மையானவர்கள் என்ற எண்ணம்
- ➢ மீறுதல் (2:21-23; மல் 3:8) - நியாயப்பிரமாணத்தை மீறிநடத்தல்
- ➢ மாய்மாலம் (2:21-23) - நியாயப்பிரமாணத்தை உபதேசிக்கிறார்கள் ஆனால் அதன்படி நடப்பதில்லை.

**b.** விருத்தசேதனம்: (2:25-29)

- விருத்தசேதனம் - இது ஆபிரகாமுக்கும், அவனுடைய சந்ததிக்கும் தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு சரீரபிரகாரமான அடையாளம்.
- இவர்கள் தேவனுடைய ஜனம் என்பதற்கான அடையாளம்.
- ஆனால் இருதயத்தின் விருத்தசேதனத்தையே தேவன் முக்கியப்படுத்துகிறார் (உபா 10:15,16)

2:25

- ➢ நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு விருத்தசேதனம் பிரயோஜனமுள்ளது.
- ➢ நியாயப்பிரமாணத்தை மீறுகிறவர்களுக்கு விருத்தசேதனம் விருத்தசேதனமில்லாமையாயிற்றே (விருத்தசேதனம் பண்ணியும் பிரயோஜனம் இல்லை)

2:26

- விருத்தசேதனமில்லாதவன் நியாயப்பிரமாணத்துக்கேற்ற நீதிகளைக்கைக்கொண்டால், அவனுடைய விருத்தசேதனமில்லாமை விருத்தசேதனம் என்றெண்ணப்படுமல்லவா?
    - ➢ தேவனுக்கு முன்பாக யூதனும், புறஜாதியும் சமமே...

2:27

- விருத்தசேதனமில்லாதவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்
- விருத்தசேதனமுள்ளவன் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்
    - ➢ இங்கே யூதர்கள் புறஜாதிகளைவிட கீழானவர்களே!

இஸ்ரவேலின் பிரதியுத்ரம்

- இருதயத்தில் விருத்தசேதனம் இல்லாமை (எரே 9:26; அப் 7:51)
    - ➢ இஸ்ரவேலர் இருதயத்தில் விருத்தசேதனம் இல்லாதவர்கள்
    - ➢ புறஜாதிகள் மாம்சத்தில் விருத்தசேதனம் இல்லாதவர்கள்

**c.** யூதர்கள் (2:28,29)

- யூதர்கள் என்ற பெயர் யூதா என்ற பெயரிலிருந்து வந்ததாகும்

- யூதா என்பதற்கு துதி என்பது அர்த்தமாகும்
- யூதர்களின் வாழ்க்கையானது…
  a. அவர்கள் கர்த்தருக்கு துதியை கொண்டுவரவேண்டும்
     - ➢ யூதா பிறக்கும்போது அவனது தாய் கர்த்தரைத் துதிப்பேன் என்று சொல்லி, அவனுக்கு யூதா என்று பேரிட்டாள் (ஆதி 29:35)
  b. மற்றவர்கள் அவனை புகழனும் (துதிக்கனும்)
     - ➢ அவனது தகப்பன் தனது மரணத்தின்போது அவனை ஆசீர்வதித்து, "யூதாவே, சகோதரரால் புகழப்படுபவன் நீயே" என்றான் (ஆதி 49:8)
  c. அவனது வாழ்க்கை தேவனால் புகழப்படவேண்டும் (ரோமர் 2:29)

இஸ்ரவேலின் பிரதியுத்ரம்

- தேவனுக்கு துதியை அல்ல தூஷனத்தை கொடுத்தார்கள் (2:23,24; எசே 36:20-22)
- மற்றவர்கள் அவனை புகழாமல் குற்றப்படுத்தினார்கள் (2:27)
- இப்படிப்பட்ட இஸ்ரவேல் தேவனால் எப்படி புகழப்படுவான்.

கெட்ட செய்தி

- நியாயத்தீர்ப்பானது முதலாவது யூதர்களுக்கே (2:9)

நல்ல செய்தி

- தேவவல்லமையான சுவிசேஷம் முதலாவது யூதர்களுக்கே (1:16)

❖ நானும் இஸ்ரவேலன் என்னை தேவன் இரட்சித்தார் என்று தன்னை ஒரு உதாரணமாக சொல்லுகிறார் (ரோமர் 11:1)

## F. தேவனுக்கு முன் எல்லாரும் குற்றவாளிகள் (3:1-20)

- பவுல் இந்த கடிதத்தை வாசிப்பவர்கள் சார்பாக சில கேள்விகளை கேட்கிறார்.
- பின்பு 9ம் வசனத்தில் அவர்களுக்கு முன்பாக தமது கேள்வியை வைக்கிறார்.

1. விருத்தசேதனம் பெற்று ஒரு யூதனாக இருப்பதுவே சிறந்ததே.
   பின் தேவனுடைய உடன்படிக்கையின் மக்களாக இருப்பதின் விசேஷம் என்ன?
   - தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது (3:2).
   - ➢ உண்மையான ஆசீர்வாதம் என்பது நிபந்தனையோடுகூடிய கீழ்படிதலே (ரோமர் 10:5 - இவைகளைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான்)
   - ➢ முற்பிதாக்கள், நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசனம் இவைகளெல்லாம் தேவனைப் பற்றியும் அவருடைய சித்தத்தைப் பற்றியும் அறியும்படி கொடுக்கப்பட்டுள்ளது.
2. தேவனுடைய உண்மையை குறித்து நமக்கு நம்பிக்கை உண்டு; சிலருடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்குமோ? (3:3,4)
   - தேவனுடைய குணாதிசயமாகிய உண்மை, நீதி இவைகள் மனுஷனுடைய பிரதியுத்திரத்தை சார்ந்து இல்லை. சிலர் மட்டுமல்ல எல்லாருமே தவறாக இருப்பினும் அது தேவனுடைய குணாதிசயத்தை மாற்றாது, பாதிக்காது.
   - தேவனுக்கு முன்பாக நிற்கும்போது மனிதனுடைய பாவமும், தேவனுடைய நீதியுமுமே வெளிப்படும் (சங் 51:4; நெகே 9:33)
3. நம்முடைய அநீதி தேவனுடைய நீதியை விளங்கப்பண்ணினால் என்ன சொல்லுவோம்? தேவன் நம்மீது கோபமாய் இருப்பாரோ?
   - தேவன் முழுஉலகத்தையும் நியாயந்தீர்ப்பது என்பது தேவன் அநீதியை பொறுத்துக்கொள்பவர் அல்ல என்பதை காட்டுகிறது (சங் 96:13).
   - தேவனுடைய நீதி மனிதனுடைய அநீதியோடு ஒத்துபோவதற்கு அல்ல கண்டிப்பதற்கே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.
4. இரண்டு கேள்விகள் இங்கே வருகிறது (3:7,8)
   - பொய்யினாலே அவருக்கு மகிமையுண்டாக விளங்கினதுண்டானால்…?
   - நன்மை வரும்படிக்குத் தீமைசெய்வோமாக. (பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று. 5:20)
   - ➢ பவுலின் இந்த சத்தியத்தை நாம் தவறாக புரிந்துகொள்ளக்கூடாது.
   - ➢ நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது (6:14).
   - ➢ நன்மை செய்வதற்கு தீமையை ஆதரிக்ககூடாது. உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் (மத்-5:37).
   - ➢ கிருபையானது பாவத்திலிருந்து திரும்புகிறவர்களுக்கு மட்டுமே.

5. இப்போது பவுலின் கேள்வி: அவர்களைப்பார்க்கிலும் நாங்கள் (இஸ்ரவேல் - பவுலையும் சேர்த்து) விசேஷித்தவர்களா? (3:9)

   பவுலின் பதில்: எவ்வளவேனும் விசேஷித்தவர்களல்ல. யூதர் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்கள் (3:9)

   - ➢ நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்கள் (3:19)
   - ➢ தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை (3:20).

- ஆக இஸ்ரவேல் தேவனுக்கு முன்பாக குற்றவாளிகள்.

<u>உலக மக்களின் பாவநிலை (3:10-20)</u>

மனிதனுடைய பாவநிலையை குறித்து உள்ள 14 காரியங்களை பழைய ஏற்பாட்டிலுள்ள 6 வசனங்கள் நமக்கு வெளிப்படுத்துகிறது.

- சங்கீதம் 14:1-3 - 3:10-12
- சங்கீதம் 5:9 - 3:13
- சங்கீதம் 140:3 - 3:13
- சங்கீதம் 10:7 - 3:14
- ஏசாயா 59:7-8 - 3:15
- சங்கீதம் 36:1 - 3:16-18

பொதுவாக மனிதனின் பாவம்

- எல்லாரும் பாவிகள் (3:9)
- ஒருவனும் நீதிமான் இல்லை (3:10-12)

மனிதனின் தீவீரமான பாவம்

- பேச்சு (3:13-14) - ஆக்கினைக்குள்ளான வாய் மனந்திரும்பினால் இயேசுவே கர்த்தரென்று அறிக்கை செய்யும்.
- நடக்கை (3:15-16) - பாவம் செய்ய தீவிரிக்கும் கால்கள் மனந்திரும்பினால் சுவிசேஷம் அறிவிக்க செல்லும்.
- சிந்தை (3:17,18) – ஆவியின் சிந்தை சமாதானத்தை பெறும் (ரோமர் 8:6).

<u>கெட்ட செய்தி:</u> உலகத்தார் எல்லாரும் பாவிகள் (3:19), அவருக்கு முன்பாக ஒருவனும் பதில் சொல்ல முடியாது (யோபு 9:2,3)

<u>நல்ல செய்தி:</u> பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (1 தீமோ 1:15)

## G. <u>இரட்சிப்பின் நற்செய்தி</u> (3:21-31)

இந்த ஆறு வசனங்களில் இரட்சிப்பினுடைய அநேக முக்கியமான உபதேசங்களை காணலாம்

1. தேவநீதியின் வெளிப்பாடு (3:21,26)
   - தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது (3:21)
   - கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார் (சங் 11:7)
   - ➢ தேவன் தம்முடைய கிரியையை சிருஷ்டிப்பின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்
   - ➢ பரிசுத்தர், மனிதனை நியாயந்தீர்க்கிறவர் என்பதை நீதியான தண்டனையின் செயலின் மூலம் வெளிப்படுத்துகிறார்.
   - ➢ இரட்சகர் என்பதை சுவிசேஷத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார்.
     - ❖ தேவன் பாவத்தை கண்டித்து தண்டிக்கிறவராக இருந்தாலும் பாவியை விடுவித்து ஏற்றுக்கொள்ளுகிறவராக இருக்கிறார்.
2. இரட்சிப்பு இயேசுகிறிஸ்து மூலமாக வருகிறது (3:22,24,26)
   - இயேசு என்றால் இரட்சகர் என்று பொருள் (மத் 1:21)
3. நீதிமானாக்கப்படுதல் (3:24)
   - நீதிமானாக்கப்படுதல் என்பதின் பொருள் நியாயாதிபதிகள் நீதிமானை நீதிமான் என்றும் குற்றவாளியைக் குற்றவாளி என்றும் தீர்ப்பதாகும் (உபா 25:1-3).
   - இது நீதிமன்றத்தில் பயன்படுத்தக்கூடிய சொல். இது மனிதனை சட்டத்தின்படி ஏற்றுக்கொள்வதாகும்.
   - மனிதன் பாவமில்லாதவன் என்பதினால் அல்ல. பாவம் செய்த மனிதனுக்காக கிறிஸ்து மரித்திருப்பதினால்… (1 பேதுரு 2:24)
   - நீதியானது… பாவம் தண்டிக்கப்படவேண்டும் என கூறுகிறது ஆகவே, தேவன் நம்முடைய பாவங்களை ஏற்றுக்கொண்டார். இதன் அடிப்படையில் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன ஆகவே, இனி நமக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை (8:1) மட்டுமல்ல தேவன் நீதிமான்களாக்கின நம்மீது குற்றஞ்சாட்டுகிறவன் யார்? (8:33)

- தேவன் நம்மை நீதிமான் என்று அறிக்கைசெய்து, ஏற்றுக்கொண்டார்.

4. மீட்கப்படுதல் (3:24)
   - மீட்கப்படுதல் என்பதின் பொருள் மீட்புபணம் கொடுத்து விடுவிக்கப்படுதல் என்பதாகும்.
   - இது அடிமைச்சந்தையில் பயன்படுத்தக்கூடிய வார்த்தையாகும்
   - ஒருவன் அந்நியனிடத்தில் விலைபட்டுபோனால், அவனையும் அவனுக்குரியதையும் அவன் சகோதரன் மீட்கலாம் (லேவி 25:47-50)
   - நாம் தேவனோடு ஐக்கியமாயிருப்பதற்காக சிருஷ்டிக்கப்பட்டோம் ஆனால் நமது பாவத்தினால் அந்த ஐக்கியத்தை இழந்துபோனோம் (3:23). இதனால் பாவத்திற்கு அடிமையானோம் (யோவான் 8:34)
   - நம்மை மீட்கும் பொருளாக தம் ஜீவனையே நமக்காக தந்தார் (மத் 10:45; தீத்து 2:14)
   - இப்போது அவருடைய ஐக்கியத்துக்குள்ளாக திருப்பப்பட்டுள்ளோம் (5:1,2)
5. பாவநிவர்த்தி (3:25; 1 யோவான் 2:2)
   - இது தேவாலயத்தோடு தொடர்புடைய வார்த்தை
   - பலிகள் தேவனை அவருடைய கோபத்திலிருந்து திருப்பி அவரை பிரியப்படுத்தி, சாந்தப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது.
   - பலிகள் என்பது மனிதன் செய்த பாவத்திற்கான பரிகாரமாக இருந்தது (லேவி 4:34,35; 5:13).
   - மனுஷருடைய அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவன் கோபமுள்ளவராய் இருக்கிறார் (1:18). ஆனால் கிறிஸ்து நமது பாவபரிகாரியாக இருந்து, நமது பாவத்தை மன்னித்து தேவனுடைய கோபத்தை மாற்றி அவரை பிரியப்படுத்தினார். தேவனும் மனிதன்மேல் பிரியமானார் (லூக்கா 2:14)
6. இரத்தத்தினால் (3:25)
   - கிறிஸ்து பாவமன்னிப்புண்டாகும்படி நமக்காக இரத்தம் சிந்தினார் (மத் 26:27,28)
   - மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே (லேவி 17:11).
   - குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் (1 பேதுரு 1:19)
     - அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் - தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார் (ரோமர் 5:9).
     - கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டிருக்கிறோம் - மீட்பின் தொகை செலுத்தப்பட்டிருக்கிறது (1 பேதுரு 1:19).
     - கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தமானது கிருபாதார பலியாக சிந்தப்பட்டது - பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டார் (3:25).
7. இப்போது (ஆங்கிலத்தில் வச.21 - இப்போது; வச.26 - தற்போது)
   - சரித்திரத்தின்படி இரட்சிப்புக்கான கிறிஸ்துவின் வேலையெல்லாம் சிலுவையிலே முடிந்துவிட்டது.
   - இது அந்த நாட்களில் வாழ்ந்தவர்களுக்கு மாத்திரம் அல்ல, சர்வலோகத்திற்க்கும் பொருந்தும் (1 யோவான் 2:2)
   - பழைய ஏற்பாட்டில் செலுத்தப்பட்ட பலிகளெல்லாம் கிறிஸ்துவின் பலிக்கு நிழலாய் காணப்பட்டது (எபி 10:1,2)
8. நியாயப்பிரமாணமில்லாமல் ஆனால் நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசனங்களின் சாட்சியோடு (3:21)
   - நியாயப்பிரமாணத்தை செய்கிற மனுஷன் நியாயப்பிரமாணத்தால் பிழைப்பான் (10:5). ஆனால் எந்த மனிதனாலும் முழுமையாக கடைபிடிக்கமுடியவில்லை (9:31)
   - நியாயப்பிரமாணம் பாவத்தையும் (3:20), பலிகள் பாவபரிகாரம் தேவை என்பதை உணர்த்துகிறது
   - தீர்க்கதரிசிகள் இரட்சகருடைய வருகையையும், அவர் செய்யக்கூடிய இரட்சிப்பின் கிரியைகளையும் முன்னமே அறிவித்திருக்கிறார்கள் (ஏசாயா 53)
9. கிருபையினாலே (3:24)
   - தகுதியில்லாதவனுக்கு தயவு காட்டுவதே கிருபை
   - கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது (11:6)
   - கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும் (4:4).

- நம்முடைய தகுதியினாலேதான் இரட்சிப்பு என்று சொன்னால், தேவன் அங்கீகரிக்கக்கூடிய அளவுக்கு நம்முடைய நீதி இருக்கிறதா?
- கிருபையினாலே நமக்கு இரட்சிப்பு கிடைத்தது மட்டுமல்ல பாவமன்னிப்பின் நிச்சயமும் உள்ளது.
- கிருபையினாலே எவ்வளவு பெரிய பாவியும் இரட்சிக்கப்படமுடியும், காரணம் பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று (5:20) - உ.ம் பவுல் (1 தீமோ 1:15,16)

10. எல்லாருக்கும் (3:22)
    - எல்லாரும் பாவிகள் (3:23)
    - நீதிமானாக்கப்படுதல் என்பது விசுவாசிக்கிற எல்லோருக்குமே வித்தியாசமே இல்லை (கலா 3:28)
    - எல்லோருக்கும் தேவன் ஒருவரே (3:29,30)
11. இலவசமாக (3:24)
    - இரட்சிப்பு இலவசம்தான், ஆனால் மலிவானது அல்ல அதின் கிரயத்தை மனிதனால் செலுத்தமுடியாது.
    - இதற்கான விலைக்கிரயமாக கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் சிலுவையில் சிந்தப்பட்டது (1 பேதுரு 1:18,19).
    - நீதிமானாக்கப்படுதல் என்பது தேவனால் கொடுக்கப்படுகிற ஒரு பரிசு.
    - நீதிமான் என்ற சான்றிதழை பெறுவதற்கு தகுதியானவன் ஒருவனும் இல்லை (3:10)
    - மேன்மைபாராட்டவும் இடமில்லை (3:27)
12. விசுவாசத்தால் (3:22,25,26,30)
    - ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும் (4:5).
    - இயேசு கிறிஸ்துவின்மேல் ஒரு மனிதன் வைக்கும் தனிப்பட்ட விசுவாசமே அவனை நீதிமானாக்குகிறது.
    - கடவுளை தேவைகளுக்காக நம்புவது என்பது வேறு! நீதிக்காக விசுவாசிப்பது என்பது வேறு.

    <u>இரட்சிப்பிற்கான விசுவாசத்தின் படிகள்</u>
    - உங்களுடைய பாவநிலையை அறியவேண்டும் (1 யோவான் 1:8; லூக்கா 18:9-14)
    - உங்களுடைய பாவத்திற்காகதான் கிறிஸ்து மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என விசுவாசிக்கவேண்டும் (1 கொரி 15:3,4)
    - சிறு ஜெபத்தின் மூலமாக நான் உம்மை விசுவாசிக்கிறேன் ஆண்டவரே என அவரிடம் உங்களை ஒப்புக்கொடுங்கள் (யோவான் 9:35-38; ரோமர் 10:10-13)

## H. <u>ஆபிரகாமின் விசுவாசம்</u> (4:1-25)

- எந்த காலத்திலேயும் நீதிமானாக்கப்படுதல் விசுவாசத்தினாலேதான் என்பதை விசுவாசிகளின் தகப்பனான ஆபிரகாமை உதாரணமாக கொண்டு பவுல் இங்கே இதனை விளக்குகிறார்.
- ஆதியாகமம் 15:6ல் ஆபிரகாமைப் பற்றிய மிகப்பெரிய சாட்சியை காணலாம் - ஆபிரகாம் தனக்கு ஒரு வாரிசு வேண்டும் என விரும்பினான்.தேவன் அவனுக்கு ஒரு குமாரனை வாக்குபண்ணியிருந்தார். ஆனாலும் அந்த வாக்கு இன்னும் நிறைவேறாதிருக்கும்போது தேவன் உன் சந்ததி வானத்து நட்சத்திரங்களைப்போல இருக்கும் என்றார். அதை அவன் விசுவாசித்தான்.அதை அவனுக்கு நீதியாக எண்ணினார்.
- ஆபிரகாமின் விசுவாசத்தின் பரிமாணங்களைக் குறித்து இப்பகுதியில் காணலாம்.

1. விசுவாசத்தின் அவசியம் (4:1-5)
    - ஆபிரகாம் கிரியையினாலே அல்ல,விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டான்.
    - தாவீதும் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்பட்டான் என்பதையும் இப்பகுதியில் காணலாம்.
    - எபிரெயர் 11ம் அதிகாரத்தில் அநேக பரிசுத்தவான்கள் நீதிமான்களாக மாறினது அவர்களுடைய விசுவாசத்தினாலேயே.
2. தேவனுடைய மன்னிப்பில் விசுவாசம் (4:6-8)
    - ஆபிரகாமின் வாழ்க்கையிலும் இது பொருந்தும். ஆபிரகாம் ஒரு தேவபக்தியுள்ள மனிதன்தான் ஆனாலும் அது அவனை நீதிமானாக்கவில்லை.

- ஆபிரகாமுக்கு தேவனுக்குமுன்பாக மேன்மைபாராட்ட எதுவுமில்லை (4:2), காரணம் அவன் தன்னைத்தானே பாவி என்பதை அறிந்து பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைத்து நீதிமான் ஆனான் (4:5)
- தாவீது தன்னுடைய பாவத்தையும், தான் எவ்வளவு மோசமானவன் என்பதையும் அறிந்தான்.
- பாவமன்னிப்புக்காக தன் பாவத்தை உண்மையான மனந்திரும்புதலோடு தேவனிடம் அறிக்கைசெய்தான் (சங் 32:1-5).
- நமக்கும் அதுதான் சத்தியம் (1 யோவான் 1:9)
- துன்மார்க்கனை நீதிமான் என்று தீர்க்கமாட்டேன் என்றவர் (யாத் 23:7), நாம் கிறிஸ்துவின்மீது வைக்கும் விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுகிறோம்.

3. நீதிமானாக்கப்படுதல் விருத்தசேதனத்தினாலேயோ நியாயப்பிரமானத்தினாலேயோ அல்ல (4:9-17)

a. <u>விருத்தசேதனத்தினால் அல்ல (4:9-12)</u>

- விருத்தசேதனம் கட்டளையாக கொடுக்கப்பட்டது ஆதி 17:10ல் தான். ஆனால் ஆபிரகாம் நீதிமான் ஆனது 15:6ல்.
- ஆபிரகாம் விருத்தசேதனம் பண்ணப்படும்போது வயது 99. (ஆதி 17:23-27) ஆக, ஆபிரகாம் விருத்தசேதனம் பெறும்முன்பாகவே நீதிமானாகிவிட்டான் (15:6), அதாவது 14 வருடத்திற்கு முன்பே...
- அப்படியானால் விருத்தசேதனம் எதற்கு? தேவன் தாம் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவார் என்பதற்கு அது ஒரு அடையாளமே! (4:11)
- நமக்கும் தேவன் இருதயத்தின் நுனித்தோல் விருத்தசேதனத்தை தந்துள்ளார் (கொலோ 2:10-12) அதற்கு அடையாளமாக பரிசுத்த ஆவியை பெற்றுள்ளோம் (எபே 1:13,14).

b. <u>நியாயப்பிரமாணத்தினால் அல்ல (4:13-16)</u>

- நியாயப்பிரமாணமானது மோசேயின் காலத்தில் கொடுக்கப்பட்டது. அதாவது ஆபிரகாமிற்கு வாக்குப்பண்ணப்பட்டு 430 வருடத்திற்கு பின்பே கொடுக்கப்பட்டது (கலா 3:17).
- விருத்தசேதனத்திற்கும், நியாயப்பிரமாணத்திற்கும் முன்பு வாழ்ந்த ஆபிரகாம் மட்டுமல்ல, விருத்தசேதனத்திற்கும், நியாயப்பிரமாணத்திற்கும் பின்பு வாழ்ந்த தாவீதும் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் (4:6-8).
- யூதர்கள் ஆபிரகாமை தங்களின் தேசதந்தையாக கருதுகிறார்கள் (யோவான் 8:33). ஆனால் பவுல் இவ்வாறு சொல்லுகிறார்: ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன் - நீ யூதனோ புறஜாதியோ, விருத்தசேதனம்பண்ணப்பட்டாயோ இல்லையோ (4:11,12)

4. தேவ வல்லமையில் விசுவாசம் (4:17-21)

- மனிதனால் கூடாத காரியங்களைகூட தேவனால் செய்யமுடியும் என்பதை ஆபிரகாம் விசுவாசித்தான் (4:17).
  - ➢ இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவர்
    - உ.ம்: வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். வெளிச்சம் உருவாவதற்கு முன்னமே "வெளிச்சம்" என பெயரிட்டு அழைக்கிறார்.
  - ➢ மரித்தோரை உயிர்ப்பிக்கிறவர்
- தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கும் இந்த வல்லமை அவசியம் என்பதை விசுவாசித்தான்.
  - ➢ நூறுவயதுள்ள அவனது சரீரம் செத்துப்போன நிலையானாலும் மற்றும் சாராளுடைய கர்ப்பம் செத்துப்போன நிலையானாலும் சரி, அவற்றிலிருந்தும்கூட தேவனால் குழந்தையை தரமுடியும் என்பதை விசுவாசித்தான் (4:19)
  - ➢ ஈசாக்கை பலிபீடத்தில் பலியிட்டாலும் தேவன் அவனை மரித்தோரிலிருந்துதெழுப்ப வல்லவராயிருக்கிறார் என விசுவாசித்தான் (எபி 11:17-19)

<u>நம்முடைய ஆவிக்குரிய நடைமுறை வாழ்வில்...</u>

- அதே வல்லமை பாவத்தில் மரித்த நிலையில் காணப்படும் மனிதனுக்கு புதுஜீவனை கொடுக்கிறது (எபே 2:1); சுவிசேஷமானது இரட்சிப்பு உண்டாவதற்கு தேவபெலனாயிருக்கிறது (1:16).
- அந்த வல்லமை நாம் சிறப்பான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ உதவுகிறது (எபே 1:19)
- அந்த வல்லமை நமது கிறிஸ்தவ ஊழியத்திலும் பெலப்படுத்துகிறது (1 தீமோ 1:12; 2 தீமோ 4:16,17; பிலி 4:12,13)

5. தேவனுடைய வாக்குத்தத்தத்தில் விசுவாசம் (4:13,20,21)
- ஆபிரகாமுக்கு உண்டான வாக்குத்தத்தம் - உலகத்தைச் சுதந்தரிப்பான் (வச. 13)

தேவன் ஆபிரகாமிற்கு கொடுத்த வாக்குத்தத்தங்கள் (ஆதியாகமத்திலிருந்து)
- நான் உனக்கு ஒரு தேசத்தை காண்பிப்பேன் (12:1)
- பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (12:3; 18:17)
- உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போல பெருகப்பண்ணுவேன் (15:5)
- உன் கர்ப்பப்பிறப்பே (சாராள் மூலமாக 17:19) உனக்குச் சுதந்தரவாளி (15:4)
- என் உடன்படிக்கையை அவனுக்கும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன் (17:19).

வாக்குத்தத்தத்திற்கும் கட்டளைக்கும் வித்தியாசம் இருக்கிறது
- கட்டளையில் பெற்றுக்கொள்பவருக்கு பொறுப்பு இருக்கிறது
- வாக்குத்தத்தத்தில் கொடுப்பவருக்கு பொறுப்பு இருக்கிறது
- வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறார் (எபி 10:23)
- நம்முடைய நம்பிக்கை என்பது தேவனுடைய உண்மையில் (வாக்குத்தத்தத்தில்) அசைவில்லாமல் உறுதியாயிருப்பதாகும் (எபி 10:23).
- ஆபிரகாம் தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பினான் (4:21)
- இது தேவனுடைய வல்லமை மட்டுமல்ல வாக்குத்தத்தமுமாய் இருக்கிறது (4:20; ஆதி 17:19);
  - ➢ இந்த வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கு ஈசாக்கு பிறப்பான் என்பதை வலியுறுத்தியது.
  - ➢ இந்த வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கு ஈசாக்கின் முடிவு சாம்பலாயிருக்காது என்பதை வலியுறுத்தியது (எபி 11:17-19)

அந்நேரத்திலே ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாக கிடைத்தவை…
- ➢ கானான் தேசம், அவனது மகன் ஈசாக்கு மற்றும் அவனது சந்ததி

இப்போதும் ஆபிரகாமின் வாக்குத்தத்தமானது நிறைவேறுகிறது
- ➢ ஆபிரகாமின் சந்ததியில் கிறிஸ்து பிறந்தார் (கலா 3:16; மத் 1:1)
- ➢ ஆபிரகாமிற்கு உண்டான ஆசீர்வாதம் புறஜாதிகளுக்கும் கிடைத்தது (கலா 3:8,14)
- ➢ ஆவிக்குரிய சந்ததிகளோடு உண்டான பரலோக நகரம் (எபி 11:9,10,13,14)

❖ ஆபிரகாமைபோல நாமும் விசுவாசத்தினாலே தேவனுடைய வாக்குத்தத்தத்தை சுதந்தரிக்கவேண்டும் (எபி 6:12-15).

ஆபிரகாமுடைய விசுவாசத்தின் சுபாவம் (4:18-21)
- விசுவாசமானது மனிதனுடைய சாத்தியங்களுக்கு அப்பாற்பட்டது (வச.19).
  - ➢ நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான் (வச.18).
  - ➢ அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை (வச.19)
  - ➢ அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், முழு நிச்சயமாய் நம்பி (வச.20,21)

கிறிஸ்துவில் விசுவாசம் (4:23-25)
- ஆபிரகாமுடைய விசுவாசத்தின் முக்கியமாக எண்ணப்பட்டது வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட சந்ததியாகும் (ஆதி 17:19)
  - ➢ வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட சந்ததி என்பது கிறிஸ்துவை குறிக்கிறது (கலா 3:16)
- ஆபிரகாமுக்கு, கிறிஸ்து தன்னுடைய சந்ததியில் பிறந்து சகல ஜனங்களுக்கும் ஆசீர்வாதமாக இருப்பார் என்கிற விசுவாசம் இருந்தது (கலா 3:8; யோவான் 8:56)
- தாவீதுக்கும் கிறிஸ்துவை குறித்ததான அறிவு இருந்தது (மத் 22:41-44; அப் 2:30,31)
- தீர்க்கதரிசன புஸ்தகத்திலே கிறிஸ்துவின் வருகையை குறித்ததான அநேக தீர்க்கதரிசன வசனங்களை காணலாம் (ரோமர் 15:12; 1 பேதுரு 1:10,11)

❖ இப்போதோ நம்முடைய இரட்சிப்பிற்காக கிறிஸ்து பிறந்து, மரித்து உயிர்ந்தெழுந்திருக்கிறார் ஆகவே மனிதனானவன் தனது இரட்சிப்பிற்காக கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்தாகவேண்டும் (3:26; 1 பேதுரு 1:20,21)

## I. கிறிஸ்துவின் மூலமாக கிடைத்த ஆசீர்வாதங்கள்:(5:1-11)
- நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். இந்த இரட்சிப்பு என்னப்பட்ட பார்சலோடு தேவன் சில ஆசீர்வாதங்களையும் தந்திருக்கிறார்.
- இது வெறுமெனே சட்டரீதியாக உண்டானதல்ல, இது ஒரு அனுபவமாயிருக்கிறது.
- நீதிமான் என்பது தேவனால் கிடைக்கப்பெற்று, தேவனோடு உள்ள உறவில் வாழும் ஒரு புது வாழ்க்கையாகும்.

- கடந்த காலம் – கிறிஸ்து நமக்காக மரித்தார் (ரோமர் 5:8)
- எதிர்காலம் - நமக்காக வெளிப்படயிருக்கிற மகிமை (5:2;8:18)

இந்த இரண்டிற்கும் மத்தியில்தான் கிறிஸ்துவோடு உள்ள இந்த வாழ்க்கையை பெற்றிருக்கிறோம்.

1. தேவனோடு உள்ள புதிய உறவு (5:1,2)

ஒரே அர்த்தமுடைய மூன்று காரியங்களை இந்த பகுதியில் காணலாம்.

**a.** தேவனோடு ஒப்புரவாகுதல் (வச.10,11)

- இது உறவின் உண்மையை காட்டுகிறது.
- இதன் அர்த்தமானது மாறுபட்ட கருத்துகளையுடைய இரு நபர்களிடையே ஏற்படும் இணக்கத்தை காட்டுகிறது. இருவரையும் ஒரே நிலைக்கு கொண்டுவருவதாகும்.
- முன்பு தேவனுக்குச் சத்துருவாய் இருந்த நாம் இப்போது ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம் (5:10)

**b.** தேவனோடு சமாதானம்

- இது தேவனோடுள்ள உறவின் இனிமையான அனுபவமாகும்.
- அவரோடு பேசவும், அவரிடத்திலிருந்து கேட்கவும் முடியும்.
- பயத்தின் தடை கிடையாது, ஆதாமைப்போல குற்றவுணர்வும் இல்லை (ஆதி 3:8-10)

**c.** தேவனிடத்தில் பிரவேசம்

- இது தேவனோடுள்ள உறவின் சிலாக்கியமாகும்
- அதன் அர்த்தமானது இராஜாவின் சமூகத்தில் பிரவேசிக்கும்போது நம்மை ஒருவன் நடத்திக்கொண்டு போவான் அதுபோல கிருபையினாலே நாம் இராஜசமூகத்தில் இருக்கிறோம்.
- ஒரு யூதன் தேவனிடம் சேர தடையாக இருந்தது திரைச்சீலை; புறஜாதிக்கோ தேவாலயத்தின் குறிப்பிட்ட சுவர்வரை மட்டுமே அனுமதி. ஆனால், கிறிஸ்துவின் மரணத்தால், திரைச்சீலை கிழிக்கப்பட்டது (லூக்23:45) பகையான நடுச்சுவர் தகர்த்துப்போடப்பட்டது (எபே 2:14)
- யூதனோ, புறஜாதியோ யாராயினும் கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது தேவனிடத்தில் பிரவேசிக்கும் சிலாக்கியம் பெறுகிறோம்.
- இது "பொது வழி அல்ல தடை செய்யப்பட்டபகுதியாகும்" - கிறிஸ்துவின் மக்களுக்காக.

2. மகிமையான நம்பிக்கை (5:2)

- நம்பிக்கை என்பது நன்மையான ஒன்றை எதிர்நோக்கி உறுதியுடன் காத்திருப்பதாகும்.
- நாம் அவரைப்போல இருப்போம் என்பதே என்பதே நம்முடைய நம்பிக்கை (1 யோவான் 3:1,2).
  - கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக அவர் நம்மை அழைத்தார். (2 தெச 2:14)
  - அவர் நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார் (பிலிப் 3:21).
  - மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம் (1 கொரி 15:49).
- இந்த நம்பிக்கையானது நாம் சந்தோஷப்படவும், பெருமையடையகூடியதாகவும் இருக்கிறது.
- கிரேக்க வார்த்தையின் அர்த்தம் என்னவெனில் உள்ளான சந்தோஷம் மட்டுமல்ல நமது உறுதியின் வெளிப்பாடாகவும் இருக்கிறது.
- நாம் நம்முடைய எதிர்காலத்தில் உறுதியாயிருக்கிறோம் என்பதை எங்குவேண்டுமானாலும் சொல்லமுடியும்.

3. உபத்திரவத்தில் சந்தோஷம் (5:3,4)

  - உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு - இயேசு கிறிஸ்து (யோவான் 16:33)
  - அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் - பவுல் (2 தீமோ 3:12).
  - உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே - அப்போஸ்தலர்கள் அதனை நினைவுபடுத்துகின்றனர் (1 பேதுரு 5:9).
- இந்த உலக மக்கள் உபத்திரவத்தை பயமாக, விரக்தியாக, வெறுப்பாக, பொறாமையாக பார்க்கிறார்கள்.

- ஆனால் நமக்கோ அது கிறிஸ்தவ குணங்களையும், மகிமையான வழிக்கு நேராகவும் நடத்துகிறது.
- விடாமுயற்சி என்பது செயலற்ற பொறுமை அல்ல அதற்குபதிலாக உபத்திரவத்தை மேற்கொள்ளவேண்டும் என்கின்ற எண்ணத்தை நம் சிந்தையில் பதித்துக்கொள்வதாகும்.
- இதை நாம் எப்போது புரிந்துகொள்கிறோமோ அப்போதுதான் சந்தோஷத்துடனும், விடாமுயற்சியுடனும் இருக்கமுடியும்.
- நாம் தேவனுக்காக பாடுபடுகிறோம் (1 பேதுரு 4:13-16; 1 கொரி 15:30,31,58)
- முடிவிலே நமக்காக மகிமையானது காத்துக்கொண்டிருக்கிறது (8:18)

<u>பவுலின் பாடுகளை குறித்து பார்க்கலாம்</u> (2 கொரி 11:23-28; 1 கொரி 15:30,31)

1. நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன்,
2. அதிகமாய் அடிபட்டவன்,
3. அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன்,
4. அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன்.
5. யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்;
6. மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன்,
7. ஒருதரம் கல்லெறியுண்டேன்,
8. மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன்,
9. கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்.
10. அநேகந்தரம்பிராயணம்பண்ணினேன்;
11. ஆறுகளால் வந்த மோசங்களிலும்,
12. கள்ளரால் வந்த மோசங்களிலும்,
13. என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும்,
14. அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும்,
15. பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும்,
16. சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும்,
17. கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்;
18. பிரயாசத்திலும்,
19. வருத்தத்திலும்,
20. அநேகமுறை கண்விழிப்புகளிலும்,
21. பசியிலும்,
22. தாகத்திலும்,
23. அநேகமுறை உபவாசங்களிலும்,
24. குளிரிலும்,
25. நிர்வாணத்திலும் இருந்தேன்.
26. இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது.
27. எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்?
28. நான் அநுதினமும் சாகிறேன்;

- இவையெல்லாவற்றையும் பவுல் "அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம்" என்று குறிப்பிடுகிறார் (2 கொரி 4:17)
- இவையெல்லாம் கொடிய உபத்திரவங்களே! ஆனால் வரக்கூடிய மகிமையோடு ஒப்பிடும்போது இவைகள் லேசானவைகளே…

<u>குணாதிசயம்: உலகத்தில் இந்த வார்த்தையானது ஒரு உலோகமானது நெருப்பிற்குள் சென்று சுத்திகரிக்கப்படுவதை குறிக்கிறது.</u>

- உபத்திரவங்கள் மூலமாக பாதுகாக்கப்பட்டு, இப்போது நம்முடைய விசுவாசமானது சுத்தபொன்னாய் விளங்குகிறது (1 பேதுரு 1:6-7).
- உபத்திரவங்கள் நம்மை இவ்வுலகத்தின் அசுத்தங்களிலிருந்து விலக்குகிறது (1 பேதுரு 4:1,2)
- உபத்திரவமானது புறம்பான மனிதனை அழித்து, உள்ளான மனிதனை புதிதாக்குகிறது (2 கொரி 4:16)

➢ இங்கு பவுல் தேவனுக்காக அர்ப்பணிக்கப்ட்டது தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

➢ பவுலின் சிந்தையானது மேலானவையான நித்தியஜுவனுக்குரியதாக இருக்கிறது.

- ➢ பவுலின் குணாதிசயமானது பூமியில் வாழ்வதைவிட பரலோகத்தில் வாழ்வதற்கு ஏதுவான பக்குவப்பட்டிருக்கிறது.
- ➢ இந்த குணாதிசயமானது அவனது நம்பிக்கையை வலுப்படுத்துகிறது.
- ➢ நம்பிக்கை உபத்திரவத்தை இலகுவாக்குகிறது.
  - ஆகவே நம்பிக்கையிலே மேன்மைபாராட்டுகிறதுபோல உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம் என்கிறார் பவுல் (5:2,4).

4. தேவனுடைய அன்பு (5:5-8)
   - நம்பிக்கை என்பது குருட்டு விசுவாசம் அல்ல.
   - அது தேவன் தமது அன்பின் நிமித்தமாக நமக்கு தரக்கூடியதும், நாம் இப்போது நமது இருதயத்தில் அனுபவிக்கிறதுமாய் இருக்கிறது. இது ஒரு பரலோக அனுபவமாயிருக்கிறது.
   - இது பரிசுத்த ஆவியின் செயலாயிருக்கிறது (எபே 1:13,14)

<u>தேவன் நம்மிடத்தில் அன்பாயிருக்கிறார் என்பதை எப்படி அறிந்துகொள்வது?</u>

- கல்வாரி அதை வெளிப்படுத்துகிறது (5:8) - நிகழ்காலத்தில் சொல்லப்பட்டுள்ளதை கவனிக்கவும்.
- அவர் நம்மை நேசிக்கும்போது நம்மிடம் அவர் எதையும் எதிர்ப்பார்ப்பதில்லை.
  - ➢ நாம் பெலனற்றவர்களாயிருந்தோம் (வச.6)
  - ➢ அக்கிரமக்காரராக இருந்தோம் (வச.6)
  - ➢ பாவிகளாயிருந்தோம் (வச.8)
  - ➢ சத்துருக்களாயிருந்தோம் (வச.10).
- மிகப்பெரிய அளவில் கிறிஸ்து நம்மை நேசித்தார் - நாம் பாவிகளாயிருக்கையில் தம் ஜீவனையே நமக்காக தந்தார்.
  - ➢ நம்மைப்போலவே பிறனையும் நேசித்தல் - பெரிய அன்பு (லேவி 19:18; மத் 22:39)
  - ➢ சத்துருக்களை நேசித்தல் - மேலான அன்பு (மத் 5:43,44)
  - ➢ சகோதரனுக்காக ஜீவனை கொடுப்பது - உயர்ந்த அன்பு (யோவான் 15:13)
  - ➢ சத்துருவுக்காக ஜீவனை கொடுப்பது - உயர்ந்த அன்பிலும் மேலான அன்பு (5:8,10)
- சத்துருவுக்காக ஜீவனை கொடுப்பது என்பது நம்மைவிட அதிகமாக சத்துருவை நேசிப்பதாகும்.
- இந்த அன்பு நமது நம்பிக்கைக்கு நிச்சயத்தை கொடுக்கிறது. கர்த்தர் நமக்காக எல்லாவற்றையும் கொடுப்பது இந்த அன்பினால்தான் (8:32).

5. இரட்சிப்பின் நிச்சயம் (5:9,10)
   - ஒரு விசுவாசியின் இரட்சிப்பு என்பது இப்போதும், நித்தியத்திலும் உறுதியானது மற்றும் பாதுகாப்பானது.
   - "அதிக நிச்சயமாமே" என்கிற வார்த்தையானது நமது சந்தேகத்தை விலக்குகிறது.
   - இந்த சத்தியத்தை வலியுறுத்த தர்க்கரீதியாக இரண்டு வேறுபாடுகள் மூலமாக நிரூபிக்கலாம்.
     a. வச.8-10 - இங்கே நமது இரண்டு நிலைகளை பற்றியும், அவைகளை கர்த்தர் எப்படி நம்மிடமிருந்து விலக்கினார் என்பதையும் காணலாம்.
        நாம் பக்தியில்லாதவர்களும் பாவிகளுமாய் தேவகோபாக்கினைக்கு பாத்திரமாய் இருந்தோம் (1:18) ஆனால் தேவன் நம்மை நீதிமானாக்கினார்.
        தேவன் நம்மை ஒப்புரவாக்கும் போது நாம் சத்துருக்களாய் காணப்பட்டோம் இப்போதோ...
        - ➢ தேவனுடைய பிள்ளைகள் (8:14-15)
        - ➢ கிறிஸ்துவின் சிநேகிதர்கள் (யோவான் 15:15)
        - ➢ கிறிஸ்துவின் சகோதரர்கள் (எபி 2:11)

        கிறிஸ்து சத்துருக்களுக்காக மரித்தார் எனில் சிநேகிதனுக்காக வாழமாட்டாரா?
        ஆகவே நம்முடைய இரட்சிப்பானது அதிக நிச்சயத்தை உடையது.
     b. வச.10 - இங்கே கிறிஸ்துவின் இரண்டு நிலைகளை பற்றியும், அவைகள் மூலமாக நமக்கு கிடைத்த ஆசீர்வாதத்தையும் காணலாம்.
        - ➢ நாம் கிறிஸ்துவின் மரணத்தினாலே (தாழ்மையான நிலை) ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம்.
        - ➢ ஆசீர்வாதமானது அவருடைய ஜீவனாலே (மகிமையான நிலை) - இது அதிக நிச்சயம்.

உயிர்தெழுந்த இரட்சகரின் வாழ்க்கையானது நம்முடைய வாழ்க்கையின் ஆதாரமாயிருக்கிறது.

- இயேசு சொன்னார்: நான் பிழைக்கிறபடியினால் நீங்கள் பிழைப்பீர்கள் (யோவான் 14:19).
- நமக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராய் இருக்கிறார் (எபி 7:25)
- கிறிஸ்து நமக்குள் பிழைத்திருக்கிறார் (கலா 2:20)
- அவருடைய வருகையில் நாமும் உயிர்த்தெழுந்து ஜீவனுக்குள் பிரவேசிப்போம் (1 கொரி 15:20-23)

நம்முடைய இரட்சகர் உயிரோடிருப்பதால் நாம் நம்முடைய இரட்சிப்பில் உறுதியாய் இருக்கமுடியும்.

<u>அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள் மற்றும் கிறிஸ்துவின் மூலமாகதான் கிடைக்கிறது.</u>

- தேவனோடு சமாதானம் (5:1)
- தேவனிடத்தில் பிரவேசிக்கும் சிலாக்கியம் (5:2)
- ஒப்புரவாகுதல் (5:11)
- மகிமையான நம்பிக்கை (2 தெச 2:14)
- உபத்திரவத்தில் சந்தோஷம் (ரோமர் 8:17,18)
- தேவனுடைய அன்பு (5:8)
- இரட்சிப்பின் நிச்சயம் (5:9,10)
  - ஆகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் நாம் தேவனிடத்தில் சந்தோஷமாயிருக்கிறோம்.

## J. <u>மனுக்குலத்தின் பிரதானானமான இருவர் (5:12-21)</u>

- எப்படி ஒரு தேசத்தின் விதியானது அதை ஆளக்கூடிய இராஜாவைப் பொருத்துள்ளதோ; எப்படி ஒரு மக்களின் விதியானது அவர்களுடைய தலைவனை சார்ந்துள்ளதோ அதுபோல இம்மனுக்குலத்தின் எல்லா மக்களின் விதியும் இந்த இரண்டு பேருடைய செயல்விளைவுகளை பொருத்தே அமைகிறது.
- ஒரு மனிதன் ஆதாம், மண்ணிலிருந்து வந்தவன் (1கொரி15:47); மற்றொருவர் கிறிஸ்து விண்ணிலிருந்து வந்தவர் (5:15-19; 1கொரி15:47)

1. ஆதாமின் மூலம் பாவிகளான மனுக்குலம் (5:12-14)

**a.** பாவத்தின் மரபு (5:12)

- ஒரே மனுஷனாலே பாவம் உலகத்திலே பிரவேசித்தது.
- ஆதாம் என்பதின் எபிரேய அர்த்தம் ‘‘மனுக்குலம்’’ என்பதாகும்.
- ஆதாமின் பாவத்தினால் மனுக்குலம் தேவனை விட்டு பிரிக்கப்பட்டது. நாம் ஆதாமின் சந்ததியாராய் இருப்பதினால் நாமும் பாவிகளாய் காணப்படுகிறோம்.
- ஆதாம் தன் சாயலாகத் தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் (சேத்) பெற்றான் (ஆதி 5:3)

**b.** பாவத்தின் உண்மை (5:12-14)

- நம்முடைய செயல்கள் மூலமாகவே நாம் பாவிகள் என்று நிர்ணயிக்கப்படுகிறோம்.

**c.** பாவத்தின் விளைவு (5:12)

- பாவத்தின் சம்பளம் மரணம் (6:23); ஆதாமிற்கு தேவனால் இந்த எச்சரிப்பு பாவம் செய்வதற்கு முன்பே கொடுக்கப்பட்டது (ஆதி 2:17)
- மரணம் என்பது முதலாவது ஆவிக்குரிய மரணம் அதாவது தேவனைவிட்டு பிரிவதாகும். இரண்டாவது சரீர மரணமாகும்; இது ஆவிக்குரிய மரணத்தின் விளைவாகும்.

**d.** பாவத்தின் எல்லை (5:12-14)

- ‘‘எல்லாரும் பாவம் செய்து’’...
- நியாயப்பிரமானமானது பாவம் ஒரு மீறுதல் என்றும், அதற்கு கட்டாயம் நாம் கணக்கு கொடுக்கவேண்டும் என்றும் சொல்லுகிறது. ஆதாம் முதல் மோசே வரை மீறுதல் இல்லை; எந்த ஒரு நெறிமுறைக்கான பிரமாணமும் கொடுக்கப்படவில்லை. இருந்தாலும் அக்காலக்கட்டத்திலே பாவம் இருந்தது என்பதை மரணம் உறுதிசெய்கிறது.
- வச.14 - அந்த ஆதாம் கிறிஸ்துவுக்கு முன்னடையாளமானவன்.

2. ஆதாம் முதல் கிறிஸ்துவரை தலையாக (5:15-21)

- மனுக்குலத்தின் நீதிக்கு கிறிஸ்து தலையாக இருக்கிறார். ஆகவே நம்முடைய விசுவாசத்தை இப்போது ஆதாமிலிருந்து கிறிஸ்துவுக்கு நேராக திருப்புவதின் மூலமாக ஆதாமின் பாவத்தினால் ஏற்பட்ட விளைவுகளிலிருந்து மீளலாம்.

**a.** ஆதாமிற்கும் கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்

i) <u>அவர்களின் செயலில் உள்ள வித்தியாசம்</u>

- 5:18 - ஆதாமின் மீறுதல் x கிறிஸ்துவின் நீதியான செயல்
- 5:19 - கீழ்ப்படியாமை (ஆதி 2:17;3:6,11) x கீழ்படிதல் (எபி 10:7; பிலி 2:8)

ii) <u>அவர்களின் செயலினால் ஏற்பட்ட விளைவுகளில் உள்ள வித்தியாசம்</u>

- 5:16,18 - ஆக்கினைத்தீர்ப்பை கொண்டுவந்தது x நீதிமானாக்குகிறது
- 5:17 - மரணம் ஆண்டுகொண்டது x ஜீவனை அடைந்து ஆளுவார்கள்
- 5:19 - பாவிகளாக்கப்பட்டோம் x நீதிமான்களாக்கப்படுவார்கள்
- 5:20 - மீறுதல் பெருகுகிறது x கிருபை அதிகமாய்ப் பெருகிற்று.
- 5:21 - பாவம் ஆண்டுகொண்டது x கிருபை ஆண்டுகொண்டது

**b.** உலகத்தின் நோக்கம்: இருவரின் செயல்கள் அதன் விளைவுகளில்

- இருவரும் எல்லா மக்களுடைய வாழ்க்கையிலும் பாதிப்பை கொண்டுவரமுடியும். ஆதாமினால் எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு
- கிறிஸ்துவினால் எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு

**c.** கிறிஸ்துவின் மேன்மையான வல்லமை

- கிறிஸ்துவினுடைய செயலின் வல்லமையானது ஆதாமுடைய செயலின் வல்லமையிலிருந்து நம்மை மீட்கிறது.

| ஏதேனில் சோதிக்கப்பட்டான். | வனாந்திரத்தில் சோதிக்கப்பட்டார். |
|---|---|
| ஆதாமின் வம்ச வரலாறு (ஆதி 5:1) | இயேசுகிறிஸ்துவின் வம்சவரலாறு (மத் 1:1) |
| அது சாபத்துடன் முடிகிறது (மல் 4:6) | “இனி ஒரு சாபமும் இராது” (வெளி 22:3) |

**d.** இறுதியான பிரிவு

- 5:19 - இது எல்லாருக்கும் அல்ல, ஆதாமினால் பாவிகளானவர்கள் கிறிஸ்துவினால் நீதிமானாக்கப்படுகிறவர்களுக்கு மட்டுமே.
  - ➢ “பாவிகளாக்கப்பட்டதுபோல” - வரலாற்று சம்பவம்
  - ➢ “நீதிமான்களாக்கப்படுவார்கள்” - கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பவர்களுக்கு இன்றைக்கு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது (3:22)
- நம்முடைய தலையாக இருக்கப்போவது யார்? நம்முடைய விதியின் (இலக்கின்) முடிவாக இருக்கப்போவது யார்?
  - ➢ நாம் ஆதாமுக்குள் இருந்தால் மறுபடியும் பிறந்து கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வை பெறவேண்டும்.

❖ ஆதாமில் இருந்து கிறிஸ்துவுக்குள் கொண்டுவரப்படவேண்டும்
❖ நாம் கிருபையில் பெருகவேண்டும்
❖ கிறிஸ்துவுக்குள்ளான அனுபவ வாழ்க்கை விவரிக்கப்படவேண்டும் (5:1-11)

## K. <u>பாவத்திற்கு மரித்தலும், தேவனுக்காக வாழ்தலும்</u> (6:1-23)

- பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று (5:20).
- ஆகையால் என்னசொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமோ? கூடாதே (6:1).
- காரணம் நம்முடைய நிலையிலும் சுபாவத்திலும் மாற்றம் ஏற்பட்டிருப்பதால்...
- பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது (5:21).
- நாம் பாவத்திற்கு மரித்ததினாலே பாவத்தின்மீது நமக்கு அதிகாரமில்லை (6:1,2)
- <u>உ.ம்:</u> நாம் வெளிநாட்டின் குடியுரிமை பெற்று வசிக்கும்போது அந்நாட்டின் சட்டதிட்டங்களுக்கு கீழ்படியவேண்டும். நம்முடைய இந்திய சட்டதிட்டங்களுக்கு மரித்துள்ளோம்.

**A.** மரணத்தின் மூலம் ஜீவனுக்கு (6:1-14)

ஞானஸ்நானமானது மறுரூபமாகுதலுக்கு அடையாளமாயிருக்கிறது.
இரட்சிப்பின் பக்கங்கள்: நமது ஸ்தானம், நமது கடமை, நமது நடைமுறை

a. நமது ஸ்தானம் - நமக்குள்ள அனைத்தும் கிறிஸ்துவுக்குள்.

- கிறிஸ்து நமக்காக மரித்ததுபோல நாம் கிறிஸ்துவுக்காக பிழைக்கிறோம் (2 கொரி 5:15)
- கிறிஸ்து மரித்தபோது நாமும் அவரோடுகூட மரித்தோம் (கலா 2:20)
- கிறிஸ்துவின் மரணம், அடக்கம்பண்ணப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் அனைத்துமே நமக்காகவே (4:25). அதுவே நமக்கு இரட்சிப்பை சம்பாதித்து கொடுத்ததுள்ளது. இதுவே நம்முடைய ஸ்தானமாக இருக்கிறது.
  - ➢ பாவத்தின் ஆளுகைக்கு மரித்துள்ளோம்
  - ➢ உலகத்திற்கு அடக்கம்பண்ணப்பட்டுள்ளோம்
  - ➢ தேவனுக்காக பிழைத்துள்ளோம்

b. நமது உத்தியோகம் - கிறிஸ்துவுடன் நாம் என்னவாக இருக்கிறோம் என்பதை வெளிப்படையாக அறிக்கைசெய்கிறோம்.

- ஞானஸ்நானமானது விசுவாசித்ததுனுடைய வேலையின் அடையாளமாயிருக்கிறது.
- ஞானஸ்நானத்தின்போது நம்முடைய ஸ்தானம் கிறிஸ்துவின் மரணம், அடக்கம்பண்ணப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றோடு உள்ளதாக அறிக்கையிடுகிறோம்.

ஞானஸ்நானமானது கீழ்கண்டவைகளை காண்பிக்கிறது

- ➢ தண்ணீருக்குள் மூழ்குதல் - அடக்கம்
- ➢ தண்ணீரிலிருந்து வெளிவருதல் - உயிர்தெழுதல்

c. நமது நடைமுறை

நமது நடைமுறை வாழ்க்கையில் மூன்று விஷயங்களை நாம் அறிந்துகொள்ளவேண்டும்

1. <u>அறிந்துகொள்ளுதல்</u>
   - கிறிஸ்துவோடு உள்ள நம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை நாம் அறிந்துகொள்ளவேண்டும் (6:3,4)
   - 6,7 வசனங்களில் இது 4 பிரிவுகளாக விளக்கப்பட்டுள்ளது

1. பழைய மனுஷன் *சிலுவையில் அடிக்கப்படுதல்* (6:6; கலா 2:20) என்பது கடந்த நாட்களில் நமது ஸ்தானத்தில் நடந்த முதல் நிகழ்ச்சியாகும். இதனுடைய விளைவு நமது நிகழ்காலத்தில் உள்ள நமது அனுபவமாகும் (2 கொரி 5:14; கலா 5:24).
2. கிறிஸ்துவோடு உள்ள *நமது உயிர்த்தெழுதலை* நாம் அறியவேண்டும் (6:4,5,8,9). இது ஒரு புதிய வாழ்க்கை (6:4). தேவனுக்காக ஜீவிப்பதாகும் (6:10,11)
3. நாம் ̇மரித்தோமானால்…. பிழைத்தும் இருப்போம் (6:5,8)
4. மரணமும், உயிர்த்தெழுதலும் சேர்ந்தே போகிறது
   - இந்த பயிற்சியினுடைய நடைமுறை விளக்கத்தை கொலோ 3:5-9 வரை காணலாம் (8:13)
   - கலாத்தியர் 3ம் அதிகாரத்தில்…
     - ➢ மரணம் (வச.5) மற்றும் ஜீவன் (வச.1)
     - ➢ கலா 3:1,2 – தேவனுக்கு நேரானவைகளையும்
     - ➢ கலா 3:10,17 – புதுவாழ்விற்குறியவைகளையும் காணலாம்

2. <u>எண்ணிக்கொள்ளுதல்</u>
   - நாம் யார் என்பதை எண்ணிக்கொள்ளவேண்டும்
   - ஒரு நாட்டின் பிரதமர் தான் பிரதமர் என்பதையே எண்ணிக்கொள்ள தவறினால் என்னவாகும்.
   - நாம் தேவனுடைய பிள்ளைகள், புது சிருஷ்டிகள் என் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாழியும் எண்ணிக்கொள்ளவேண்டும்.
   - *பாவத்திற்கு மரித்தது போல உணரவேண்டும் என்பது அர்த்தமல்ல. அந்த வேதவசனம் நமது வாழ்வில் உண்மை என உரிமை பாராட்டி நடந்துகொள்ளவேண்டும்.*
   - *நாம் பாவத்திற்கு மரித்துவிட்டு,தேவனுக்கு பிழைத்திருக்கிறோம் என சொல்லிவிட்டு, அதன் அடிப்படையில் நடந்துகொள்ளவேண்டும்.*

3. <u>ஒப்புக்கொடுக்கவேண்டும்</u>
   - தேவனுடைய சேவைக்கும், அவருடைய வருகைக்கும் நம்மை முன்னிருத்திக்கொள்ளவேண்டும்.

- ரோமர் 6:13ல் நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் எடுத்துரைப்பதைக்காணலாம்.

<u>நேர்மறையாக உள்ள காரியங்களில் இரண்டு பகுதிகளைக் காணலாம்.</u>

1. பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்
   ரோமர் 12:1ல் சொல்லப்பட்டதுபோல ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும்.
2. உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.
   ஆயுதங்கள் - இதை இரு வகையில் பயன்படுத்தலாம்.
   மனிதர்களையும் வெட்டலாம்
   காய்கனிகளையும் வெட்டலாம்.

நமது சரீர அவயவங்களை வேறுவழியாகவும் உபயோகப்படுத்த முடியுமா?

- ஒரு விசுவாசியின் சரீரம் தேவனுடைய ஆயுதம் அல்லது கருவி என்கிறார் பவுல். தேவன் அதனை தமது இராஜ்யத்தை கட்டும் பணியில் கருவிகளாகவும், சத்துருக்களை எதிர்க்கும் பணியில் போரிடும் ஆயுதமாகவும் பயன்படுத்த விரும்புகிறார்.
- உதாரணமாக நமது நாவு. இவற்றை இரு வழிகளில் உபயோகப்படுத்தலாம்.
  - கொலோ 3:8 - உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளும்
  - எபே 4:29 - பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.

தேவன் நமது சரீர அவயவங்களை அவருடைய ஊழியத்திற்காக பயன்படுத்த விரும்புகிறார்.

- நமது வாய் அவருக்காக பேசவேண்டும் (10:14)
- கால்கள் அவருக்காக நடக்கவேண்டும் (10:15)
- நமது சரீரம் மற்றும் ஆத்துமாவை ஜீவபலியாக அர்ப்பணிக்கவேண்டும் (12:1,2).

*<u>ஆண்டவர் நமது சரீரத்தை விரும்புவது ஏன்?</u>*

- *ஒரு விசுவாசியின் சரீரம் கர்த்தருடைய ஆலயமாய் இருக்கிறது. அதை அவர் தமது மகிமைக்கென பயன்படுத்த விரும்புகிறார்.(1 கொரி 6:19,20, பிலி 1:20)*

*பாவத்திற்கு தனது சரீரத்தை ஒப்புக்கொடுத்த தாவீது, சரீர அவயவங்கள் முற்றிலும் கழுவப்பட ஒப்புக்கொடுக்கிறான். சங் 51ல் அதனை காணலாம். கண்கள் (3), மனம் (6), செவிகள் (8), உள்ளம் (10), உதடு மற்றும் வாய் (14,15) இவைகளை சுத்திகரிக்க சொல்லி ஜெபிக்கிறார்.*

**B.** பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவனுக்கு அடிமையாகுதல் (6:15-23)
பவுல் இங்கே அடிமைச்சந்தை உவமையை பயன்படுத்துகிறார்.
நம்முடைய எஜமான் மாறும்போது நமக்குரிய செயல், சுபாவம் (வெளிப்பாடு), மற்றும் பலன் அனைத்தும் மாறுகிறது.

**a.** நமது எஜமான்

- நமது பழைய எஜமான் - பாவம். முன்னே நாம் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தோம் (6:17)
- நமது புதிய எஜமான் - நீதியாகிய கிறிஸ்து. இப்பொழுதோ பாவத்தினின்று நீங்கள் விடுதலையாகி, நீதிக்கு அடிமைகளானோம் (6:18,22).

**b.** நமது செயல்

- முன்னே நாம் பாவ-எஜமானிடமிருந்து கட்டளைகளை பெற்றோம். விளைவு... (6:19)
- நமது குணம் - அசுத்தம்; நமது நடத்தை - அக்கிரமம் (பிரமாணத்தை மீறுதல்)
  - நாம் நீதிக்கு நீங்கினவர்கள் ஆகவே நீதியின் எஜமானாகிய தேவனுக்கு கீழ்படியவேண்டிய அவசியம் இல்லை (6:20)
- இப்பொழுதோ தேவனிடமிருந்து கட்டளைகளை பெறுகிறோம் (6:22,19)
- நமது குணம் - பரிசுத்தம்; நமது நடத்தை - கிரமம் (பிரமாணத்தை கடைபிடித்தல்)

**c.** நமது சுபாவம்

- பாவத்திற்கு சேவைசெய்தபோது வெட்கமும், மரணமும்தான் இருந்தது (6:21).
- ஆனால் தேவனுக்கு சேவைசெய்யும்போது பரிசுத்தமும், ஜீவனும் கிடைக்கிறது (6:22)

**d.** நமது பலன்

- பாவம் மரணத்தை தந்தது - இது சம்பளம்

- தேவனோ நித்தியஜீவனை தருகிறார் - இது சம்பளம் அல்ல பரிசு காரணம் இதை நாம் சம்பாதிக்கமுடியாது.
- மட்டுமல்ல பரிசு என்பது தகப்பனுடைய அன்பின் பிரதிபலிப்பாகும். தேவன் நமது தகப்பன்; நாம் அவரது குடும்பத்தில் பிள்ளைகள்.

மாற்றத்தின் சாராம்சம் (6:17)

- உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே…

மாற்றம் உண்மையாக இருக்கவேண்டும்

- இந்த 6ம் அதிகாரத்தில் இரட்சிப்பு என்பது நீதிமானாக்கப்படுவது மட்டுமல்ல பரிசுத்தமாக்கப்படுதலும் ஆகும் என்பதை காட்டுகிறது.
- இரட்சிப்பு என்பது பாவம் மன்னிக்கப்படுதல் மட்டுமல்ல அது பரிசுத்தத்திற்கான வாசலாகவும் இருக்கிறது.
- கிறிஸ்துவின் நீதியானது முதலில் நம்மீது சுமத்தப்படுகிறது (கிறிஸ்துவில் நமது ஸ்தானம்) பின்பு அது நமக்கு கொடுக்கப்படுகிறது (கிறிஸ்துவில் நமது செயல்கள்)

## L. <u>நியாயப்பிரமாணம் - வெற்றியடையாத அறிவுரையாளர் (7:1-25)</u>

- ரோமர் 6ம் அதிகாரத்தில் கிறிஸ்தவ வாழ்க்கையானது பாவத்திற்கு மரித்து தேவனுக்காக ஜீவிப்பதை விளக்குகிறது.
- பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைந்து இப்போழுதோ நீதியினால் தேவனுக்கு சேவை செய்கிறோம்.
  - ➢ *ஒரு விசுவாசி தேவனுக்கு தன்னை எப்படி ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதற்கு 6ம் அதிகாரத்தில் எஜமான்--அடிமை உதாரணத்தை பயன்படுத்தினார்.*
  - ➢ *ஒரு விசுவாசிக்கு நியாயப்பிரமாணத்தோடு உள்ள உறவை விளக்க கணவன்--மனைவி உதாரணத்தை பயன்படுத்துகிறார்.*
- 7:1-6 - கிறிஸ்து மட்டுமே ஒரு மனிதனை நீதிமானாக மாற்றமுடியும்
- 7:7-25 - நியாயப்பிரமாணத்தினால் முடியாது.
- நியாயப்பிரமாணம் நம்மை பாவத்திலிருந்து விடுவிக்கமுடியாது. கிறிஸ்து மட்டுமே விடுவிக்கமுடியும் (7:25; 8:3; யோவான் 8:34,36)
- ஆகவே நாம் நியாயப்பிரமாணத்திற்கு மரித்து கிறிஸ்துக்கு வாழவேண்டும்.

### a. <u>பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு கிறிஸ்துவோடு இணைக்கப்படுதல் (7:1-6)</u>

- ➢ இப்பொழுது நாம் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டுள்ளோம் (எபே 5:26,27) - இதற்காக கிறிஸ்து பாடுபட்டார்.
- ➢ கர்த்தரோடிசைந்திருக்கிறவன், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான் (1 கொரி 6:17)

இதை விளக்க திருமண உறவு உதாரணத்தை பயன்படுத்துகிறார்.

- திருமணபந்தத்தில் கணவனோ அல்லது மனைவியோ மரிக்கும்வரை பிரமாணமானது அவர்களை ஆளுகிறது. இருவரில் ஒருவர் மரிக்கும்போது மற்றொரு நபரை விவாகம் செய்யும்படியாக விடுதலையாகிறார்கள்.
  - ➢ பிரமாணம் மரிக்காது, நாம்தான் மரித்தாகவேண்டும்.
- சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள் (7:4)
  - ➢ கடமையை செய்யவேண்டும் என்ற கட்டாயத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு விருப்பத்தோடு கீழ்படிய ஒப்புக்கொடுக்கிறோம்.
- நியாயப்பிரமாணத்திலிருக்கையில், நம்மிடம் தேவனை பிரியப்படுத்துகிற கனிகொடுக்கிற வாழ்க்கை இல்லாதிருந்தது.
  - ➢ நம்மிடம் மரணத்தின் கனிகளே காணப்பட்டது
  - ➢ மாம்சத்தின் கிரியைகளே காணப்பட்டது (கலா 5:18-19)
  - ➢ மரணத்திற்குப் பாத்திரராயிருந்தோம் (1:32)
- ஆனால் கிறிஸ்துவுக்குள்…
  - ➢ தேவனுக்காக கனிகொடுக்கிற வாழ்க்கை (யோவான் 15:5; பிலி 1:11; கலா 5:22-24)
- கனியுள்ள வாழ்க்கை நம்மை தேவனுக்கென்று வாழ உதவிசெய்கிறது (7:6).
- இந்த கனியுள்ள வாழ்க்கை எழுதப்பட்ட பிரமாணமாகிய பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி - ஆவியானவர் எந்த நேரத்திலும், எந்த சூழ்நிலையிலும் நம்மை நடத்துகிறார்; உதவுகிறார். இதைதான் 8ம் அதிகாரத்தில் காணமுடியும்.

### b. <u>நியாயப்பிரமாணமும், அதன் பலனும் (7:7-13)</u>

- நியாயப்பிரமாணம் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது (7:12). ஆனால் பிரச்சனை பிரமாணத்தில் இல்லை நம்மிடத்தில்தான்.

<u>நியாயப்பிரமாணத்தினால் பலன் என்ன?</u>

1. பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது.(3:20)
   - அறிவு பாவத்தை தடுப்பதில்லை (1:32; 2:18,22,23). அறிவு தீய விருப்பங்களை தூண்டி பாவ இன்பத்தை அனுபவிக்கவைக்கிறது (7:5,8)
2. கற்பனையினாலே பாவம் மிகுந்த பாவமுள்ளதாகிறது (7:13)
   - நியாயப்பிரமாணம் என்கிற நன்மையானதை எடுத்து பாவமானது இவ்வளவு பெரிய விளைவுகளை கொண்டுவருமானால் பாவம் எவ்வளவு கொடுமையாய் இருக்கும்.

- பாவம் என்பது…
  - நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்காதது (2:3)
  - மீறுதல் (5:20)
  - கணக்குகொடுக்கவேண்டியது (5:13)
- இப்பொழுது மனிதன் நியாயப்பிரமாணத்திற்கு முன்பாகவும், தேவனுக்கு முன்பாகவும், தனது மனசாட்சிக்கு முன்பாகவும் குற்றவாளியாயிருக்கிறான்.

3. பாவமானது மரணத்திற்கு நேராக நடத்துகிறது (7:9,10; 6:23)
   - ஒழுக்க நெறியில் மரணம்: ஒரு மனிதன் நீதியான வாழ்க்கை வாழ முடியாத நிலை
   - ஆவிக்குரிய மரணம்: தேவனுடைய உறவு இல்லாத நிலை
   - சரீர மரணம்: தேவனைவிட்டு நிரந்தரமாக பிரிதல்

- நியாயப்பிரமாணம் வாழ்க்கையின் வழியை காட்டுகிறதே தவிர (உபா 30:15-20) வாழ்வை தருவதில்லை (கலா 3:21)
- ஆனால் பரிசுத்த ஆவியானவர் ஜீவனை தருகிறார்.

**c.** <u>நியாயப்பிரமாணத்திற்கும் மாம்சத்திற்கும் இடையேயான போராட்டம் (7:14-25)</u>

- நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது (7:12)
- நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது (7:14)
  - நியாயப்பிரமாணத்தின் மேல் பிரியமாயிருக்கிறேன் (7:22)
  - நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது (7:18). ஆனால் நன்மை செய்யமுடியவில்லை காரணம்…
- பாவத்துக்குக் கீழாகவிற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன் (7:14).
- என் மாம்சத்தில், நன்மைவாசமாயிருக்கிறதில்லை (7:18; கலா 5:19-21)
  - ஒருசில உணவோ அல்லது மருந்தோ சிலருக்கு ஒத்துப்போவதில்லை. அதற்காக உணவோ அல்லது மருந்தோ சரியில்லை என்றல்ல மாறாக அவரது சரீரமானது அதற்கு ஒத்துப்போவதில்லை.
- அதனாலேயே உள்ளான நிலையில் பிரமாணத்தின்படி மனதிற்கும், பாவத்தின்படி மாம்சத்திற்கும் போராட்டம் இருக்கிறது (7:23).

<u>நிர்ப்பந்தமான மனுஷனுடைய கதறல் (7:24)</u>

- நன்மையைச் செய்ய விரும்புகிறேன் ஆனால் விரும்பாத தீமையையே செய்கிறேன் (7:19).
  - இதுதான் நியாயப்பிரமாணத்தின் மூலம் பரிசுத்தமாய் இருக்கவேண்டும் என்று விரும்புகிற மனிதனின் அவல நிலை.
- ஆனால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் வெற்றிவாழ்க்கை வாழமுடியும் (7:25) என்பதை 8ம் அதிகாரம் விளக்குகிறது.

## M. <u>பரிசுத்த ஆவியானவர் தெய்வீக உதவியாளர் (8:1-13)</u>

- பாவத்திற்கு மரித்து தேவனுக்காக வாழ்வது என்பது பரிசுத்த ஆவியானவரின் தெய்வீக உதவியால் மட்டுமே முடியும்.
- பரிசுத்த ஆவியானவர் நமது தெய்வீக உதவியாளராக இருக்கிறார்; அவர் எப்பொழுதும் நம்மோடு இருக்கிறார் (யோவான் 14:16)
  - நம்மால் செய்யமுடியாத காரியங்களில் (பரிசுத்தமாயிருப்பது, நீதியான செயல்களை செய்வது) அவருடைய உதவி நமக்கு தேவை.

**a.** <u>நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவன் செய்தார் (8:1-4)</u>

- இந்த பகுதியின் கருவசனம் - 8:3
- தேவன் நம்மை பாவம் மரணம் என்பவைகளிலிருந்து விடுவித்துள்ளார். இதிலே குமாரனும், பரிசுத்த ஆவியானவரும் ஈடுபட்டிருக்கிறார்கள் (8:2).

கிறிஸ்துவின் செயல் (8:3)

- கிறிஸ்து பாவமாம்சத்தின் சாயலாக வந்தார்
- அவருடைய மரணத்தினாலே நம்முடைய பாவத்தை அவருடைய மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.

- ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து விடுவித்தார் (8:1; எபி 8:12).
  - ➢ பாவத்திலிருந்து விடுவிக்கிறார் (யோவான் 8:34,36)
  - ➢ நித்திய ஜீவனை தருகிறார் (யோவான் 10:28)
  - ➢ பரிபூரண ஜீவனை தருகிறார் (யோவான் 10:10)

பரிசுத்த ஆவியானவரின் செயல் (8:2;4)

- கிறிஸ்துவினாலே நாம் என்ன பெற்றுக்கொண்டோமோ அதை நம்முடைய வாழ்க்கையில் அனுபவங்களாக கொண்டுவருபவர் பரிசுத்த ஆவியானவர்.
- நம்முடைய சுபாவங்கள் மாறும்போது நம்முடைய நடத்தையும் மாறுகிறது. அதுதான் ஆவியானவரின் செயல்.
- நியாயப்பிரமாணம் நமது வாழ்க்கைக்கு நீதி அவசியம் என்பதை காட்டுகிறது (உபா 30:16-20). ஆனால் நியாயப்பிரமாணம் ஜீவனை தருவதில்லை (கலா 3:21).
- ஆனால் பரிசுத்த ஆவியானவர் ஜீவனை தருகிறார்.
- அவர் ஜீவனுடைய ஆவியாய் (உயிர்ப்பிக்கிற ஆவியாய்) இருக்கிறார் (8:2; யோவா 6:63; 2 கொரி 3:6)
- வாழ்க்கை என்பது தேவனுக்காக உயிரோடிருப்பதாகும் (லூக்கா 15:32)
- நாம் ஆவியின்படி நடக்கிறபோது நியாயப்பிரமாணத்தின் நீதி நம்மிடத்தில் நிறைவேறுகிறது (8:4)
  - ➢ ஆவியின் கனியோ, அன்பு… இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை (கலா 5:22,23).
  - ➢ எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப்பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது.
  - ➢ …அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது (13:9,10)

**b.** <u>நியாயப்பிரமாணத்தின்படி அல்ல; ஆவியின்படியான ஜீவியம் (8:4-13)</u>

- மாம்சமானது மனுஷனுடைய சுபாவத்தை கெடுத்தது (ஆதி 6:3,5)
- மாம்சத்தில், நன்மைவாசமாயிருக்கிறதில்லை (7:18)
- மாம்சமானது நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது (8:7)
- மாம்சமானது பாவத்தை பெருக்ககூடிய இடமாக காணப்படுகிறது (கலா 5:19)
- மறுபடி பிறக்காதவர்கள் மாம்ச இச்சையின்படியே நடந்துகொள்கிறார்கள் (எபே 2:3)
  - ➢ ஒரு விசுவாசியின் மாம்சமும் கறைபட்டிருந்தாலும் அவன் மாம்சத்தின்படி வாழ்வதில்லை. ஒரு விசுவாசி மாம்சத்திற்கு எதிரான வாழ்க்கை வாழும்படி பரிசுத்தஆவியானவர் அவனுக்கு பரிசுத்த சுபாவத்தை தருகிறார்.
- மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று விரோதமாய் இருக்கிறது (கலா 5:17). ரோமர் 8:5-8 வரையுள்ள வசனங்கள் இந்த உண்மையை எடுத்துரைக்கிறது.
- இப்போதோ நம்மில் கிறிஸ்துவின் ஆவியானவர் வாசமாயிருக்கிறார் (8:9). நாம் இப்போது மாம்சத்திற்குரியவர்கள் அல்ல ஆவிக்குரியவர்கள்.
  - ➢ 7:23 - பாவத்தில் சிறைபட்டிருந்த வாழ்க்கை
  - ➢ 8:2 - பாவத்திலிருந்து விடுதலை அடைந்த வாழ்க்கை
- மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல ஆனால் ஆவிக்கு கடனாளிகள் (8:12).
- நமது சரீரமானது பாவத்தினாலே மரணத்திற்குரியதானது (8:10,11)
  - ⇨ இது பெலவீனமான, அழியக்கூடிய சரீரம்
  - ⇨ தேவனுக்கு முன்பாக நீதியாய் வாழ்வதற்கு நமது சரீரத்தில் தகுதி இல்லை.
  - ➢ ஆதி 2:17 - நன்மைதீமை அறியத்தக்க கனியை புசிக்கும் நாளில் சாகவே சாவாய்.
  - ➢ ரோமர் 5:12 - பாவத்தினாலே மரணம் உலகத்திலே பிரவேசித்தது
  - ➢ ரோமர் 7:24 - மரணசரீரம்
  - ⇨ இப்படிப்பட்ட இந்த சரீரத்தில்தானே தேவனுக்கு முன்பாக நாம் நீதியை செய்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசம் செய்கிறார் (8:11).
  - ⇨ இது கிறிஸ்து உங்களுக்குள் இருக்கும்பொழுது நடக்கும் (8:10; 7:45).
    - ❖ இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி (8:11)
    - ❖ செத்துப்போனதாக எண்ணப்பட்ட கர்ப்பத்திற்கு ஜீவன் தருபவர் (எபி 11:11,12)
    - ❖ நாமும்கூட தேவனுக்கு முன்பாக நீதியை செய்வதற்கு பெலன் தருகிறார்.
- தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் (8:11) என்பது நம்முடைய சரீரபிரகாரமான உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது (8:23; பிலி

3:20,21; 1 கொரி 15:52,53). ஆனாலும் இந்த பகுதி இப்போதைய நடைமுறைக்கு பொருந்தக்கூடியதாகவே இருக்கிறது (2 கொரி 13:4)

- சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக (6:12).
- உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள் (6:13).

ஆவியானவர் நம்மில் வாசம் செய்தால்....

- நாம் தேவனுடைய பிள்ளை என சாட்சிகொடுக்கிறார். (8:16)
- நமது சரீரம் தேவனுடைய ஆலயமாகிறது.(1கொரி 6:19)
- நமது சரீரம் உயிர்ப்பிக்கப்படும் (8:11)
- ஆவியினால் மாம்சத்தின் செயல்களை அழிக்கமுடியும்.(8:13)
- தேவனுடைய சுதந்திரராய் இருக்கிறோம் (8:17) ஆவிக்குரிய செல்வத்தை அனுபவிக்கும் உரிமை.

c. <u>மாம்சத்திற்கும் (மரணம்) ஆவிக்கும் (ஜீவன்) இடையே உள்ள வித்தியாசம்</u>

| *மாம்சத்திற்குரியவன்* | *ஆவிக்குரியவன்* |
|---|---|
| மாம்சத்தின்படியும், மாம்சத்திற்காகவும் வாழ்கிறான் (8:5) | ஆவியானவரின் காரியங்களில் நாட்டம் கொள்கிறான் (8:5) |
| மாம்சம் அதின் பலனாகிய மரணத்தை (வேதனை) தருகிறது (8:6) | ஆவியானவரோ ஜீவன் தருகிறார் (8:6) |
| மாம்சம் தேவனுக்கு விரோதமான பகையாய் இருக்கிறது (8:6,7) | தேவனிடம் சமாதானம் பெற்றுள்ளோம் (5:1) |
| சுயத்தை பிரியப்படுத்துகிறான்.<br>பாவத்தின் வேர் - என் சித்தம் | தேவனை பிரியப்படுத்துகிறான்.<br>ஆவியின் ஆளுகை – உமது சித்தம். |

- மாம்சத்தின்படி வாழ்தல் என்பது செத்த சரீரத்தைப்போல அல்லது உடைபட்ட கப்பல் போன்ற (1 தீமோ 1:19) கிறிஸ்தவ வாழ்க்கையாகும்.
- உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கையானது செத்த கிரியைகளை (கலா 5:19-21) அழித்து தேவனுக்காக வாழ்வதாகும் (கொலோ 3:5-10)
  - இது ஆவியினால் மட்டுமே முடியும் (8:13)
  - ஆவிக்கேற்படி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள் (கலா 5:16).

<u>பரிசுத்த ஆவியானவர் தெய்வீக உதவியாளர் (பிரிவு – 2)</u>

- பரிசுத்த ஆவியானவர் ஒரு தேவனுடைய பிள்ளையை தேவனோடு நெருங்கிய உறவு கொள்ள உதவியாக இருக்கிறார்.

விசுவாசிகளிடையே பரிசுத்த ஆவியானவர் செயல்படும் நான்கு காரியங்கள்

1. <u>ஆவியானவர் நம்முடைய புத்திரசுவிகாரத்தை அனுபவமாக்குகிறார் (8:14-17)</u>
   - இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் மட்டுமல்ல அவர் முதற்பேரானவருங்கூட..(8:29).
   - கிறிஸ்துவோடு இணைக்கப்படுவதின் மூலமாக நாம் தேவனுடைய பிள்ளைகளாக தத்தெடுக்கப்படுகிறோம் அதாவது நாம் அவருடைய சகோதரர்கள் (எபி 2:11)
   - விசுவாசத்தினாலே நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற உரிமையை பெற்றிருக்கிறோம் (யோவா 1:12; கலா 3:26,27)
   - இதைதான் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய அனுபவமாக்குகிறார்.

a. தகப்பன் ஒரு பிள்ளையை நடத்துகிறதுபோல ஆவியானவர் நம்மை நடத்துகிறார் (8:14)

b. தேவனை அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள் (8:15; கலா 4:6).

- அப்பா (உறவு) - இது அராமிக் வார்த்தை. எபிரேயருடைய வீடுகளில் பிள்ளைகள் தகப்பனை அப்பா என்று அழைப்பார்கள்.
- பிதா (அதிகாரம்) - தேவனுடைய ஸ்தானத்தையும், அவருடைய அதிகாரத்தையும் தகப்பனான நிலையிலும் அறிந்துகொள்வதாகும்.

c. நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார் (8:16).

d. நாம் தேவனுடைய சுதந்தரராக இருக்கிறோம் (8:17).

- கிறிஸ்துவுடனே சுதந்தரராக இணைக்கப்பட்டுள்ளோம் - கிறிஸ்து தேவனோடு எப்படி இருக்கிறாரோ அப்படியே நாமும் இருக்கிறோம்.
- இந்த பூமியிலே கிறிஸ்துவினுடைய பாடுகளில் எப்படி பங்காயிருக்கிறோமோ, அப்படியே பரலோகத்தில் அவருடைய மகிமைக்கும் பங்காளியாயிருப்போம் (1 பேதுரு 1:11; 4:13,14).

- ➢ கிறிஸ்துவின் பணியில் நாமும் பங்காளிகளாக இருக்கிறோம். பவுல் இதனை தனது வாழ்க்கையின் அனுபவமாக்கி கிறிஸ்துவுக்காக எல்லா பாடுகளையும் சகித்தான் (2 கொரி 12:10; அப் 20:22,23)

2. <u>ஆவியானவர் நமது நம்பிக்கையை பெலப்படுத்துகிறார் (8:18-25)</u>

   a. தற்காலத்து பாடுகள் மற்றும் வரப்போகிற மகிமை (8:18; 2 கொரி 4:17,18)
      - ➢ வரப்போகிற மகிமையைக்குறித்து சொல்லும்போது பவுல் கொரிந்தியரில் அதிகமான உரிச்சொல்களை (மிகவும், அதிகமான, நித்திய, கனமகிமையை) பயன்படுத்துகிறார்.

   b. சகல சிருஷ்டிகளும் இந்த மகிமைக்காக மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது (8:19-22).
      - ➢ இப்போது சிருஷ்டிப்பானது மனிதனுடைய வீழ்ச்சியின் விளைவுகளை கொடுத்துக்கொண்டிருக்கிறது (ஆதி 3:17).
      - ➢ ஆனால் பின்போ மகிமையின் பலன்களை மனிதனுக்கு கொடுக்கும் (வெளி 22).
      - ➢ *தேவன் சிருஷ்டிப்பை முடித்தபோது அது மிகவும் நன்றாய் இருந்தது. (ஆதி1:31) ஆனால், இன்று தவிக்கின்ற சிருஷ்டிப்பாய் இருப்பதற்கு காரணம் பாவத்தின் விளைவே! சிருஷ்டிப்பின் நிர்பந்தமான நிலையை பவுல், அழிவு(20), அடிமைத்தனம்(20), மாயை(21), வேதனை(22) ஆகிய பதங்களால் வெளிப்படுத்துகிறார். எனினும் இந்த தவிப்பு ஒருநாளில் மாட்சிமையான தவிப்பாக மாறும். அங்கே புதிய வானமும் புதிய பூமியும் காணப்படும் (ஏசா 65:17-25; 66:22; வெளி 22,23)*
      - ➢ எல்லாவற்றையும் புதுப்பிப்பதற்கு ஒரு நேரம் உண்டு (அப் 3:21)
      - ➢ ஏற்ற நேரத்தில் எல்லாவற்றையும் (பூலோகத்திலுள்ளவைகள் மற்றும் பரலோகத்திலுள்ளவைகள்) அவர் மூலமாய் தமக்கென்று ஒப்புரவாக்கிக்கொண்டார் (5:6; கலா 4:5; கொலோ 1:20).

   c. ஆவியானவர் முதற்பலனாயிருக்கிறார் (மற்ற கனிகள் வெளிப்படுவதற்கு)
      - ➢ நாம் மீட்கப்படுவதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார் அதாவது அவர்தான் முதல் தவணையாக அல்லது முன்பணமாக இருக்கிறார் (எபே 1:13,14; 2கொரி 5:1-5).

<u>நமது நம்பிக்கையை பெலப்படுத்த ஆவியானவர் செய்யும் இரு காரியங்கள்.</u>

- ➢ உத்திரவாதம் - நமது நம்பிக்கைக்கு உத்திரவாதம் தருகிறார்
- ➢ முண்பணம் - பரலோக பேரின்பம் (தீத்து 2:13) நமது விருப்பமாயிருக்க தீவிரப்டுத்துகிறார் (8:23).

<u>ஆகவே அது வருகிறதற்குப் காத்திருப்போம் (8:25).</u>

- ➢ தவிப்புடன் - காரணம் நாம் விரும்புகிறோம் (8:23)
- ➢ பொறுமையுடன் - காரணம் நமக்கு உத்திரவாதம் இருக்கிறது (8:25).
- ➢ ஒருபோதும் நமக்கு ஏமாற்றம் இல்லை (5:2)

ஆவியானவர் நம்முடைய ஜெபங்களில் உதவியாயிருக்கிறார் (8:26-29)

3. <u>நமது பெலவீனங்களில் ஆவியானவர் உதவுகிறார் (8:26).</u>

'உதவி' என்கிற பதமானது கிரேக்கமொழியில் ஒன்றுக்கு மேற்பட்ட (அதோடு சேர்ந்து + எதிராக + தாங்கி) வார்த்தைகளைக் கொண்ட பதமாகும். அதாவது தேவனுக்கு எதிராக ஆவியானவர் நம்முடைய பாரத்தை தாங்கிகொண்டு நம்மோடு இருக்கிறார்.

- ஆவியானவருடைய உதவியில்லையெனில் நம்முடைய ஜெபவாழ்க்கை வீழ்ச்சியடையும்.
  - ➢ நம்முடைய ஆவிக்குரிய விருப்பங்களை வார்த்தையால் விவரிக்க முடியாது அது நமது இருதயத்தினுடைய ஏக்கங்களாக நமக்குள்ளே இருக்கும். உதாரணமாக நமது ஊழியம் மற்றும் தரிசனம் (9:1-3; 2 கொரி 5:2)
  - ⇨ தேவன் நம்முடைய இருதயங்களை பார்க்கும்பொழுது ஆவியின் சிந்தையினாலே நமது யோசனை மற்றும் விருப்பங்களை அறிகிறார் (8:27).
  - ⇨ தேவன் தம்முடைய ஆவியினாலே தேவனுடைய ஆழமான காரியங்களையும் நமக்கு வெளிக்கடுத்துகிறார் (1 கொரி 2:10,11)
  - ➢ இதுபோல வார்த்தையால் சொல்லமுடியாத ஜெபங்களை ஆவியானவர் தேவனிடம் தெரியப்படுத்துகிறார்.
  - ➢ இப்படிப்பட்ட ஜெபங்கள் தேவனுடைய சித்தத்தின்படியே இருப்பதினால், தேவன் அவைகளுக்கு பதில் கொடுக்கிறார் (யோவான் 15:7,16; 1 யோவான் 5:14)

<u>ஜெபத்திற்கான பதில் (8:28,29)</u>

- தேவன் எல்லாவற்றையும் நமது நன்மைக்கு ஏதுவாக நடத்துகிறார் (உ.ம்: யோசேப்பு)
  - ➢ கிறிஸ்துவைப்போல மாறுவதே ஒரு கிறிஸ்தவனுடைய இறுதி நன்மை.
  - ➢ இந்த நோக்கத்திற்காகத்தான் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

⇨ கிறிஸ்து முதற்பேறானவராக இருக்கிறார், நாம் அவரைப்போல இருப்பதற்கு நம்மை தத்தெடுத்திருக்கிறார்.

- ➢ நமது கடைசி இலக்கானது - அவர் வருகையில் நாம் அவரைப்போலவே இருப்போம் (1 யோவான் 3:2)
- ➢ இப்போதும்கூட நாம் அநேக அனுபவங்களுடனேகூட கடந்துசென்று அவருடைய சாயலுக்கு ஒப்பாக மாறுவதற்கு பரிசுத்த ஆவியானவர் உதவுகிறார் (2 கொரி 3:18).

4. <u>ஆவியானவர் தேவனுடைய அன்பை அனுபவிக்க உதவுகிறார் (8:30-39)</u>

பரிசுத்தஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது (5:5)
தேவனுடைய அன்பின் இரண்டு பரிமாணங்களை ரோமர் 5:6-10ல் காணமுடியும்

1. எந்த விதத்திலும் தகுதியில்லாதபோது நம்மை நேசித்தார் - பெலனற்றவர்களாக, அக்கிரமக்காரராக, பாவிகளாக, சத்துருக்களாயிருக்கையில்…
2. நமக்காக மரித்ததினாலே நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.

இங்கே இன்னும் சில பரிமாணங்களை காணலாம்.

a. <u>அவருடைய அன்பு நித்தியமானது (8:30; எபே 1:4-6)</u>

- ➢ கடந்தகாலத்தில் தெரிந்தெடுத்திருக்கிறார்
- ➢ இக்காலத்தில் நம்மை அழைத்து, நீதிமானாக்கி இருக்கிறார்
- ➢ எதிர்காலத்தில் மகிமைபடுத்தியுமிருக்கிறார்.

b. <u>அவருடைய அன்பு அளவில்லாதது (8:32)</u>

- அவருடைய குமாரனை மட்டுமல்ல (யோவான் 3:16) அவருடனேகூட எல்லாவற்றையும் இலவசமாக கொடுத்தார்.
- மனிதன் தனக்கு பிரியமான பொருளையும், பிரியமான மகனையும் தனியே பிரித்து வைத்து கவனிக்கலாம். யாக்கோபு தனக்கு பிரியமான குமாரனை கொடுக்க மனமில்லை (ஆதி 33:2). ஆனால் தேவன் அப்படியல்ல.

c. <u>அவருடைய அன்பு நம்மை பாதுகாக்கிறது (8:31,33,34)</u>

- ➢ எதிர்ப்பு - நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? நமக்காக தேவன் இருக்கிறார் (8:31).
- ➢ குற்றச்சாட்டு - குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவன் நீதிமானாக்குகிறார் (8:33).
- ➢ தண்டித்தல் - ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?
  1. கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்திருக்கிறார் (8:1)
  2. இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் (1 யோவான் 2:1). ஆகவே யாரும் குற்றம்சாட்டமுடியாது.

d. <u>தேவனுடைய அன்பைவிட்டு எதும் நம்மைப் பிரிக்காது.</u>

- உபத்திரவம் தேவனுடைய அன்புக்கு எதிராக சந்தேகங்களையோ அல்லது கேள்வியையோ எழுப்பாது.
  - ➢ உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு (யோவான் 16:33)
    - ⇨ நாம் நம்முடைய எஜமானாகிய கிறிஸ்துவின் வழியை பின்பற்றுவோம். பாடுகளின் வழியாக மகிமை (8:17).
- நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம் (8:37). அவருடைய அன்பின் அனுபவத்தினாலே நாம் உபத்திரவத்தை தடுக்கமுடியும். (5:3-5)

பவுலின் பாடுகளை 2 கொரி 11:24-27ல் காணலாம்.

- ஆனாலும் பவுல் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும் விரும்புகிறேன் என்று கூறுகிறான் (அப் 20:24)
  - ➢ இந்த உலகத்தில் உள்ள எதுவும் தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்காது (8:38,39)
  - ➢ இப்படிப்பட்ட அன்பு ஆவியானவரால் நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது (5:5)

ஒவ்வொரு காலகட்டத்திலும் இரட்சிப்பைக்குறித்ததான தேவனுடைய திட்டம் (ரோமர் 9-11)

- பவுல் தன்னுடைய ஜனத்திற்காக பெரிய பாரம்கொண்டு இரட்சிப்பைக் குறித்து அறிந்து அதை பிரசங்கித்து வருகிறான் (9:1-3; 10:1).
  - வித்தியாசமான கண்ணோட்டத்திலே இந்த இரட்சிப்பைக் குறித்து பவுல் இஸ்ரவேலருக்கு எடுத்துரைக்கிறார்.
  - இரட்சிப்பு மனிதனுடைய தேவை என்பதை 1-3 அதிகாரங்களில் கூறுகிறார்.
  - இரட்சிப்புக்கான தேவனுடைய செயல்பாடுகளை 9-11 அதிகாரங்களில் கூறுகிறார்.
    - ➢ 9-ம் அதிகாரத்தில் அவருக்கு சித்தமானவர்களை அவர் இரட்சிக்கிறார்.
    - ➢ 10-ம் அதிகாரத்தில் கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதே இரட்சிப்புக்கான வழி.
    - ➢ 11-ம் அதிகாரத்தில் கர்த்தர் அவருடைய ஜனங்களை கூட்டிச்சேர்க்கிறார்

## N. <u>இரட்சிப்பு தேவனுடைய இறையான்மையின் உரிமை (9:1-29)</u>

- தேவன் ஒருவரே யாரை இரட்சிக்கவேண்டும், யாரை இரடசிக்ககூடாது, எப்படி இரட்சிக்கவேண்டும் என்கிற முடிவுக்கு வருகிறவர்.
- இஸ்ரவேலர் அநேக சிலாக்கியங்களை கொண்டிருந்தனர். கர்த்தரை அறிந்துகொள்வதற்கான வாய்ப்பு அவர்களுக்கு இருந்தது (9:4,5). ஆனால் இரட்சிப்பு குறிப்பிட்ட ஜனத்திற்கோ அல்லது குறிப்பிட்ட தேசத்திற்கோ அல்ல, அது தேவனுடைய இறையாளுகையின் சித்தமாகும்.

இதனை பவுல் மூன்று முற்பிதாக்கள் மூலம் மேற்கோள் காட்டுகிறார்.

1. ஈசாக்கு - இரட்சிப்பு தேவனுடைய வாக்குத்தத்தமாயிருக்கிறது (9:6-9)

- குடும்பத்தின் உரிமைகளை கொண்டு மனிதன் இரட்சிப்பை பெறமுடியாது.
  - ➢ இஸ்மவேலும் ஆபிரகாமுடைய மகன்தான், ஆனால் ஈசாக்குதான் வாக்குத்தத்தத்தின் பிள்ளையாயிருக்கிறான்.

வாக்குத்தத்தமானது இரு காரியங்களை அடங்கியுள்ளது

1. ஈசாக்கு பிறப்பான் என்பது வாக்குத்தத்தம் (ஆதி 17:19; 18:10; ரோமர் 9:9)
2. ஈசாக்கு உடன்படிக்கையின் வாரிசாயிருக்கிறான் (ஆதி 17:21) வாக்குத்தத்தின் வாரிசு - பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (12:3)

- முதல் காரியமானது தற்போதைய கலந்துரையாடலின் கவனத்தை ஈர்க்கக்கூடியதாக இருக்கிறது.
  - ➢ தேவன் தனக்காக வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவர்கள்தான் தேவனுடைய மக்களானவர்கள் (கலா 4:23,27,28)
- இரண்டாவது காரியமானது புதியஏற்பாட்டில் முக்கியமான கருப்பொருளாயிருக்கிறது.
  - ➢ பேதுரு தன்னுடைய பிரசங்கத்திலே, இஸ்ரவேலர் இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுடைய உடன்படிக்கையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைக் கொண்டுள்ளதாக பிரசங்கிக்கிறார் (அப் 3:25,26).
  - ➢ பவுல் கலாத்தியர் 3ம் அதிகாரத்தில் (வச.16) வாக்குத்தத்தமானது கிறிஸ்துவின் மூலமாக நிறைவேறுகிறதாக குறிப்பிடுகிறார். ஆபிரகாமின் விசுவாசத்தையுடைய புறஜாதிகளுக்கும் இந்த சிலாக்கியம் கிடைத்துள்ளதாக குறிப்பிடுகிறார் (வச. 8,9)

2. யாக்கோபு - இரட்சிப்பு தேவனுடைய தெரிந்தெடுப்பாயிருக்கிறது (9:10-13)

- இரட்சிப்பு உரிமையின்படி அல்ல - யாக்கோபு இளையவன்
- இரட்சிப்பு தகுதியின்படியும் அல்ல - நற்கிரியைகளின் அடிப்படையில் அல்ல
  - ➢ யாக்கோபு பிறப்பதற்கு முன்பே தெரிந்துகொள்ளப்பட்டவன். அவனது செயல்களுக்கு முன்பே அவன் சிநேகிக்கப்பட்டான்.

<u>ஏசா ஏன் வெறுக்கப்பட்டான் (9:13)</u>

- மல்கியா 1:1-4 வரையுள்ள வசனங்கள் ஏசாவின் தனிப்பட்ட வாழ்க்கையை அல்ல தேவனுடைய தெரிந்தெடுப்பிற்கு விரோதமாய் செயல்பட்ட தேசமாகிய ஏதோமைக்குறித்து சொல்லப்பட்டிருக்கிறது (ஏதோமின் செயல்கள்: எண் 20:14-21; எசே 25:12-14; ஆமோஸ் 1:11; ஒபதியா).
- யாக்கோபு (இஸ்ரவேல்) தேவனுடைய தெரிந்தெடுப்பின்படி சிநேகிக்கப்பட்டான். ஏசாவோ அவனுடைய கிரியைகளின்படி வெறுக்கப்பட்டான்.
- இஸ்ரவேல் மேன்மைபாராட்டவோ, ஏசா முறுமுறுக்கவோ எந்த காரணமும் இல்லை. இது தேவனுடைய செயல்.

3. மோசே - இரட்சிப்பு தேவனுடைய இரக்கமாயிருக்கிறது (9:15-18)

- இது மனிதனுடைய சித்தமோ அல்லது மனிதனுடைய முயற்சியினாலோ அல்ல, தேவனுடைய செயலாயிருக்கிறது.
- மோசே தனது சித்தத்தினாலேயும் தனது முயற்சியினாலேயும் தேவனை பிரியப்படுத்தப்பார்த்து தோல்வியடைந்தான் (யாத் 2:11-15)
  - ➢ மோசே கர்த்தருடைய இரக்கத்தை வெளிப்படுத்தும் பாத்திரமாயிருக்கிறான்.

- தேவனுடைய சித்ததிதிற்கு எதிர்த்து நிற்கும் பார்வோனோ, தேவனுடைய வல்லமை மற்றும் கோபத்தை வெளிப்படுத்தும் பாத்திரமாயிருக்கிறான்.

- பார்வோனுடைய இருதயம் கடினப்பட்டது (9:18; யாத் 8:15, 32 - பார்வோன் தன் இருதயத்தை கடினப்படுத்தினான்; 10:20 - கர்த்தர் பார்வோனின் இருதயத்தை கடினப்படுத்தினார்.)

குயவன் மற்றும் களிமண் உவமை (9:19-22)

- தேவன் மனிதனை கிருபாபாத்திரங்கள் மற்றும் கோபாக்கினைப் பாத்திரங்களாக உருவாக்க அவருக்கு உரிமை இருக்கிறது. நாம் கேள்விகேட்க முடியாது காரணம் அது அவருடைய சித்தம் (யோபு 9:12; 33:13).
  - *ஏசா 29:16 – குயவனிடம் கேள்வி கேட்கும் அளவிற்கு குயவனும் களிமண்ணும் சமம் அல்ல.*
  - *ஏசா 45:9 – குயவனோடு வழக்காடும் களிமண்ணிற்கு ஐயோ!*
  - *எரே 18:6-10 – தேவன் களிமண்ணை தமது விருப்பத்தின்படி வனைகிறார்.*
  - *யோபு 9:12 – அவரை கேள்விகேட்க முடியாது. ஏனெனில் தேவன் நம்மைவிட ஞானம் மிகுந்தவர்.*
  - *மத் 20:14,15 – எஜமான் தனது கூலியை தனது இஷ்டபடி கொடுக்க அவனுக்கு உரிமை உண்டு.*
- 9:22 - கோபாக்கினைப் பாத்திரங்கள் (அவிசுவாசிகள்) மீது தேவன் தமது கோபத்தைக் காண்பிக்க அவர்களை படைத்துள்ளார்.
  - 1 பேதுரு 2:8 - அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்.
- 9:22 - கிருபாபாத்திரங்கள்மேல் (விசுவாசி) தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்த அவர்களை படைத்துள்ளார்.
  - எபே 2:2,3 - கோபாக்கினையின் பாத்திரமானது இரக்கத்தை பெற்றுள்ளது.

தேவன் மனிதனோடு இடைபடுதல் (9:22-29)

- தேவனுடைய உரிமையை விளக்கி காட்டிய பவுல், அதை தேவன் அவருடைய சித்தப்படி எப்படி செயல்படுத்துகிறார் என்பதை இப்பகுதியில் கூறுகிறார்.
- கர்த்தர் யூதர்களிடமிருந்தும், புறஜாதிகளிடமிருந்தும் தனது இரக்கத்தை காண்பிக்க ஜனங்களை அழைக்கிறார் (9:23,24).
  தகுதியற்றவர்களாயிருக்கிறவர்களை அவர் அழைத்து...
- 9:25; ஓசியா 2:23 - என் ஜனமல்லாதிருந்தவர்களை நோக்கி நீ என் ஜனமென்றும் சிநேகிக்கப்படாதிருந்தவளைச் சிநேகிக்கப்பட்டவள் சொல்லுவேன் என்கிறார்.
- 9:26; ஓசியா 1:10 - அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்னப்படுவார்கள்.
  - ஓசியாவிலே இஸ்ரவேலருக்கு இருந்த கர்த்தருடைய இரக்கத்தை இங்கே பவுல் 9ம் அதிகாரத்தில் புறஜாதிகளுக்கும் கிடைக்கிறது என மேற்கோள் காட்டி பேசுகிறார். புறஜாதிகள் இப்போது யூதருடன் சேர்ந்து ஒரே நகரத்தாராயிருக்கிறார்கள் (எபே 2:19)
- சிலர் அவர்களுடைய செயல்களினாலே கோபாக்கினையின் பாத்திரங்களாயிருக்கிறார்கள் (எபே 2:2-4). இவர்கள் அழிவுக்காக நியமிக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் தம்முடைய ஜனங்களை கூட்டிச்சேர்க்கும் வரைக்கும் பொறுமையுள்ளவராய் இருக்கிறார் (மத் 13:24-30).
- மட்டுமல்ல கோபாக்கினையின் பாத்திரங்கள் மனந்திரும்பி கிருபாபாத்திரங்களாகவேண்டுமென்று அவர்கள்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (2 பேதுரு 3:9,10; எபே 2:3,4).
- பேதுருவும் தன்னுடைய நிருபத்திலே தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை எடுத்து கூறுகிறார் (1 பேதுரு 2:10).
- சோதோம் கொமேரா பட்டணத்தாரைப்போல யூதர்களும் ஆக்கினைக்குப்பாத்திரவான்களே! (ஆதி 19:24,25). ஆமோஸின் முதல் இரு அதிகாரங்களில் பட்சபாதமில்லாத தேவனுடைய நியாயத்தீர்ப்பை காணமுடியும்.

ஆனாலும் அவருடைய இரக்கத்தினாலே ஒரு சந்ததியை மீதியாக வைக்காதிருக்கிறார். அதை குறித்து 11ம் அதிகாரத்தில் காணலாம்.

## O. <u>இரட்சிப்பின் வழி - கிறிஸ்துவில் விசுவாசம் (9:30-10:21)</u>

1. இரட்சிப்பு நியாயப்பிரமாணத்தின் கிரியையினால் அல்ல (9:30-10:5)

- இஸ்ரவேலருக்கு தேவனைப்பற்றி வைராக்கியமுண்டு (10:2). ஆனாலும் துரதிஷ்டவசமாக அவர்கள் தேவநீதியை அறியவில்லை (10:3) காரணம் இஸ்ரவேலர் தேவநீதியை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினார்கள் (9:31,32)
- நமது வழி தவறாக இருக்கும்போது, வைராக்கியத்தில் எந்த பயனில்லை.

<u>இஸ்ரவேலரின் பிரச்சனைகள்</u>

a. <u>இஸ்ரவேலர் நீதிப்பிரமாணத்தைத் தேடினார்கள் ஆனால் அடையவில்லை</u> (9:31)
நியாயப்பிரமாணமானது நியாயப்பிரமாணத்தின்படி கடைபிடிப்பவனை மட்டுமே நீதிமானாக்குகிறது (10:5; லேவி 18:5; உபா 6:25).
   - ➢ நியாயப்பிரமாணத்திற்கு கீழ்படிவதாக வாக்குகொடுத்தார்கள் (யாத் 19:8; 24:3,7) ஆனால் அதினபடி ஒருவனும் ஜீவிக்கிறதில்லையே! மட்டுமல்ல எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதுமில்லை (3:20).

b. <u>அவர்களின் வைராக்கியம் அறிவுக்கேற்ற வைராக்கியமுமல்ல (10:2)</u>
பழைய ஏற்பாட்டை உண்மையாக அறிந்திருந்தார்களானால் அது இரட்சிப்புக்கேற்ற அறிவை கொடுத்திருக்கும் (2 தீமோ 3:15)
   - ➢ நியாயப்பிரமாணம் என்பது…

ஒழுக்கமான வாழ்க்கை வாழ்வதற்கான அறிவுறைகள் மட்டுமல்ல பாவப்பரிகாரத்திற்கான பலியும் (நிழல்) அடங்கியுள்ளது. நிஜம் - கிறிஸ்து (எபி 10)

c. <u>இஸ்ரவேலர் தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் கிறிஸ்துவின் மூலமாக தேவன் ஏற்படுத்தியுள்ள வழியை புறக்கணிக்கிறார்கள் (10:3</u>).
இது பயனற்ற, அறியாமையுள்ள மற்றும் எதிர்த்து நிற்கிற வழி. இவர்கள் கிறிஸ்துவில் கிடைக்கும் இரட்சிப்பிற்காக கட்டாயம் தேவனிடம் திரும்பவேண்டும்.

> *இஸ்ரவேலர் ஆண்டாண்டுக் காலமாக பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களை அறிந்திருந்தனர். கிறிஸ்துவண்டை வழிநடத்துவதற்கு உபாத்தியாக (கலா 3:24) கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தை கடைபிடித்து வந்தனர். ஆனால் கிறிஸ்து வந்தபோதோ மறுதலித்தனர் (யோவான் 1:11) ஆனாலும் சிமியோன், அன்னாளைப்போல (லூக்கா 2:25-38) அவரை எதிர்நோக்கியிருந்த ஒருசிலர் இருக்கத்தான் செய்தனர்.*

2. இயேசு கிறிஸ்து மூலமாகவே இரட்சிப்பு (9:33; 10:4-13)

1. <u>கிறிஸ்து - சீயோனிலே வைக்கப்பட்ட கல் (9:33)</u>

- விசுவாசிக்கிறவனுக்கு…
   - ➢ மூலைக்குத் தலைக்கல்லாயிற்று (சங் 118:22).
   - ➢ … ஜீவனுள்ள கல் (1 பேதுரு 2:4-8)
   - ➢ பரீட்சிக்கப்பட்டது, விலையேறப்பெற்றது, திட அஸ்திபாரமுள்ளது (ஏசா 28:16)
- விசுவாசியாதவனுக்கோ அது தடுக்கலின் கல் (ஏசா 8:14)

2. <u>கிறிஸ்து - நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (10:4).</u>

- முடிவு என்பது இலக்குவின் நிறைவாயிருக்கிறார்.
   - ➢ நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது (கலா 3:23-26)
   - ➢ பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது (3:20). பலியின்நிமித்தமாகவே பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ளுகிறான் (லேவி 5:17-19).
   - ➢ நியாயப்பிரமாணமும், பழைய ஏற்பாட்டு பலிகளும் கிறிஸ்துவின் பலிகளுக்கு நிழலாயிருக்ககிறது (எபி 10: 1,11,12).
- கிறிஸ்து நமது இலக்குவாயிருக்கிறார் - அதாவது பலிகளின் முடிவு.

3. <u>இரட்சிப்பு விசுவாசத்தினாலும் அறிக்கையிடுவதினாலும் கிடைக்கிறது (10:6-14)</u>

- விசுவாசத்தின் மூலபொருள் கிறிஸ்துவே
- அவர் நமக்கு அருகிலேயே இருக்கிறார் (10:6-8). மோசேயும் இதை குறித்து சொல்லியிருக்கிறார் (உபா 30:11-15).
  - ➢ நாம் பரலோகத்திற்கு ஏறிச்செல்லமுடியாது - அவர் பரலோகத்திலிருந்து இறங்கியிருக்கிறார்.
  - ➢ நாம் பாதாளத்திற்கும் இறங்கிசெல்லமுடியாது - அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருந்திருக்கிறார்.

வேதத்தில் ஏறக்குறைய 307 உருவகங்கள் கிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

i) பவுல் கிறிஸ்துவை வார்த்தையாக சித்தரிக்கிறார்
  - ➢ மோசேயின் காலத்தில் விசுவாசம் வார்த்தையிலும், இன்று கிறிஸ்துவிலுமாய் இருக்கிறது.
  - ➢ இருதயத்தில் விசுவாசித்து, வாயினால் அறிக்கை செய்யவேண்டும் (10:10).

ii) கிறிஸ்து வாக்குபண்ணப்பட்ட மேசியா (10:11)

iii) யெகோவா (10:13; யோவேல் 2:32)

4. <u>கிறிஸ்து - எல்லோருக்கும் கர்த்தர் (10:11-13)</u>

- யாராயிருந்தாலும் (11)
- வித்தியாசமேயில்லை (12)
- யாராயிருந்தாலும் (13)

3. இரட்சிப்பின் நற்செய்தியானது அறிவிக்கப்படவேண்டியது அவசியம் (10:13-21)

a. <u>சுவிசேஷ பணி (10:13-15)</u>

- ஏன் இந்த பணி? - கிறிஸ்து எல்லோருக்கும் வழியாக இருப்பதினாலே (10:12) எல்லோரும் அவரை (அந்த வழியை) அறிந்துகொள்ளசெய்வது கட்டாயமாகும்.
- எதற்கு இந்த பணி? - மக்களை இரட்சிப்பிற்கு நேராக நடத்துவதற்கு.
- சுவிசேஷ பணியின் படிகள் என்ன?
  - ➢ சுவிசேஷகன் அனுப்பப்படவேண்டும் - சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவேண்டும்
  - ➢ ஜனங்கள் கேட்கவேண்டும் - விசுவாசிக்கவேண்டும் - அறிக்கைசெய்யவேண்டும்.

b. <u>சுவிசேஷகன் (10:15)</u>

- கிறிஸ்துவால் அனுப்பப்பட்டார்கள் - சீஷர்களுக்கு கட்டளையாக கொடுக்கப்பட்டது
- பரிசுத்த ஆவியால் அனுப்பப்பட்டார்கள் - அழைப்பும், வழிநடத்துதலும் பரிசுத்த ஆவியினாலே நடக்கிறது (அப் 13:2,4)
- சபையினாலே அனுப்பப்பட்டார்கள் - சபையானது மிஷினரியை அடையாளம் கண்டுகொண்டு, அவர்களை தேவனுடைய கிருபைக்கு ஒப்புக்கொடுக்கிறார்கள் (அப் 13:3; 14:26).

'அவர்கள்மேல் கைகளை வைத்து' என்று சொல்லும்போது: 'மிஷினரியானவர்' சபையின் ஒரு அங்கமாக இருக்கிறார். 'சபை' சரீரமாக இருக்கிறது. ஆகவே மிஷினரி ஊழியத்திற்கு செல்லும்போது சபையும் சேர்ந்து செல்லுகிறது.

ஒரு சுவிசேஷகன் கேட்கிறவர்களுக்கு கிறிஸ்துவையும், இரட்சிப்பின் வார்த்தைகளையும் கொண்டுவருகிறார்.

- நற்காரியங்களின் சுவிசேஷம் (10:15)
- சமாதானத்தின் செய்தி (நாகூம் 1:15)
- இரட்சிப்பின் (செய்தி) பிரகடனம் (ஏசா 52:7)

➢ அவருடைய பிறப்பு மக்களுக்கு ஒரு நற்செய்தி (லூக்கா 2:10)

➢ அவருடைய மரணம் மக்களுக்கு ஒரு நற்செய்தி (ஏசாயா 52: 9,10)

ஒரு சுவிசேஷகனாக இருப்பது எத்தனை அழகு… அது ஒரு சிலாக்கியமாக இருக்கிறது. அவனுடைய பாதங்கள் - அது அநேக இடங்களுக்கு நடந்து, பயணமாக செல்லவேண்டும் (எபே 6:15; யோசுவா 1:3). கிறிஸ்து யாவருக்கும் தூரமானவர் அல்லவே, ஆகவே ஜனங்களை கிறிஸ்துவண்டை நாம் நடத்தவேண்டும்.

ஏன் சுவிசேஷம் அறிவிக்கவேண்டும்?

- இது மேலேயிருந்து வரும் உத்தரவு - நீங்கள் உலகமெங்கும் புறப்பட்டுப்போய் (மாற் 16:15)
- இது கீழேயிருந்து வரும் கதறல் - நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும் (லூக்கா 16:28)
- இது வெளியேயிருந்து வரும் அழைப்பு - வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டும் (அப் 16:9)
- இது உள்ளேயிருந்து வரும் நெருக்குதல் - கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது (2 கொரி 5:14)

c. <u>ஜனங்களின் பிரதியுத்திரம் (10:16)</u>

சுவிசேஷத்திற்கு எல்லோரும் கீழ்படிவதில்லை.
எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?...

- ஏசாயா 53:1 - கிறிஸ்து தீர்க்கதரிசனமாக அறிவிக்கப்பட்டபோது…
- யோவான் 12:37,38 - கிறிஸ்து வாழ்ந்த நாட்களில்…
- ரோமர் 10:16 - கிறிஸ்து பிரசங்கிக்கப்பட்டபோது...
  - ➢ யோவான் 12:37 - அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை.
  - ➢ யோவான் 12:42 - ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

d. <u>தேவன் பேசியிருக்கிறார் - அவர் வெளிப்பாடுகளின் தேவனாயிருக்கிறார் (10:17-21)</u>

தேவன் தம்மைக்குறித்துச் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை (அப் 14:17)
இந்த பகுதி தேவனுடைய சத்தியங்களை வெளிப்படுத்தப்படுகிறது (10:18-21)

1. சிருஷ்டித்தவரின் மகிமை சிருஷ்டிப்பில் வெளிப்படுத்தப்படுகிறது (10:18; சங் 19:1,4)
2. அவர் இஸ்ரவேலை நியாயந்தீர்ப்பதிலிருந்து நீதியுள்ள நியாயாதிபதி என்பது வெளிப்படுத்தப்படுகிறது (10:19; உபா 32:21; எசே 5:15)
3. அவர் புறஜாதிகளை இரட்சிப்பதிலிருந்து அவர் எல்லா மனிதர்களுக்கும் ஆண்டவர் என்பது வெளிப்படுத்தப்படுகிறது (10:20; எசே 65:1; ரோமர் 15:11)
4. தீர்க்கதரிசிகள், கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்கள் மூலமாக அவர் நாள்முழுவதும் ஜனங்களுக்காக காத்திருக்கிறபடியால் அவர் இரக்கமுள்ளவராகவும், நீடிய பொறுமையுள்ளவராகவும் இருக்கிறார் என்பது வெளிப்படுத்தப்படுகிறது (10:21; ஏசா 65:2)
5. பிரசங்கிக்கப்படுகிற வார்த்தைகளினாலே அவர் இரட்சகர் என்பது வெளிப்படுத்தப்படுகிறது (10:15)

தேவன் ஆதிகாலங்களிலிருந்தே பேசிக்கொண்டிருக்கிறார் (ஏசா 48:16)
இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் பேசிக்கொண்டிருக்கிறார் (எபி 1:1,2)

## P. <u>தேவன் எப்போதுமே தம் ஜனங்களை கொண்டுள்ளார் (11:1-36)</u>

வரலாற்றை பார்க்கும்போது தேவன் தமது ஜனங்களை கூட்டிச்சேர்க்கிறார். இரட்சிப்பிற்கான அவருடைய திட்டம் தோல்வியடைவதில்லை. முடிவிலே யூதர்களிலிருந்தும், புறஜாதிகளிலிருந்தும் தம்முடைய ஜனங்களை தமக்கென்று கூட்டிச்சேர்க்கிறார்.

1. இஸ்ரவேல் தேவனுக்கு எதிர்த்து நிற்கும்போதும், ஆவிக்குரிய நலிவு காணப்பட்டபோதும் தமக்கென்று தம்முடைய ஜனங்களை கொண்டுள்ளார் (11:1-10)

- தேவன் ஆபிரகாமை அழைத்து, அவனோடு தம்முடைய உடன்படிக்கையை ஏற்படுத்தினார் (ஆதி 12:2; 17:7).
- தேவன் இஸ்ரவேலை தெரிந்தெடுத்து, தம்முடைய கட்டளைகளுக்கு கீழ்படியவேண்டும் என விரும்பினார் (உபா 10:16; 11:1),
  - ➢ ஆனால் அவர்களோ அதில் தோல்வியடைந்தனர். அதுபோல புறஜாதிகளும் பாவத்தின் கீழாக காணப்பட்டனர் (ரோமர் 3:9), தேவனுக்கு முன்பாக குற்றமுள்ளவர்களாக இருக்கிறார்கள் (3:19). ஆக, தேவன் தாம் தெரிந்துகொண்ட மக்களை புறக்கணித்துவிட்டாரோ? - இல்லை. தேவன் எல்லா நேரத்திலும் தம் ஜனங்களை கொண்டுள்ளார்.

தற்காலத்திற்கான உதாரணமாக பவுல் தன்னை குறிப்பிடுகிறார் (11:1)

- ➢ 1 கொரி 15:8 - ல் அகாலபிறவி (out of due time) என்றும்,
- ➢ 1 தீமோ 1:16 - ல் பிரதானபாவி என்றும் பவுல் தன்னை குறித்து கூறுகிறார்.

ஆனாலும், கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்பதற்கு பவுல் ஓர் சிறந்த மாதிரி.

கடந்த காலத்திற்கு உதாரணமாக எலியாவை குறிப்பிடுகிறார்

- 1 இராஜா 19 -ம் அதிகாரத்தில் எலியா தான் ஒருவனே ஆண்டவருக்காக நிற்பதாக நினைத்தான். ஆனால் அவனைப்போல பாகாலுக்கு முழங்காற்படியிடாத 7000 பேரை தேவன் தனக்கென்று வைத்திருந்தார்.

அதுபோல இப்போதும் மீதியானவர்கள் உண்டு. (புதிய ஏற்பாட்டு காலகட்டத்தில் இஸ்ரவேலர் தேவனுடைய மக்களின் ஒரு பங்காக இருக்கின்றனர்). இந்த புதிய ஏற்பாட்டு காலத்திலும் விசுவாசிக்கிற மீதியானவர்கள் உண்டு என்பதை அறிந்துகொள்ளவேண்டும். இந்த இரட்சிப்பு கிரியையினால் அல்ல, கிருபையினால் உண்டாகிறது (11:6).

இப்போது இஸ்ரவேலர் இரு குழுக்களாக உள்ளனர் (11:7).

- கிருபையை பெற்றுக்கொண்ட தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்
- மற்றவர்கள் கடினப்பட்டவர்கள்

தேவனுக்கு எதிர்த்து நிற்கிற ஜனங்களுக்கு விரோதமாக வேதவசனம் தெளிவாக உள்ளது (11:8-10)

- உபா 29:4 - கர்த்தர் உங்களுக்கு உணரத்தக்க இருதயத்தையும், காணத்தக்க கண்களையும், கேட்கத்தக்க காதுகளையும் இந்நாள்வரைக்கும் கொடுக்கவில்லை.
- ஏசா 29:10 - கர்த்தர் உங்கள்மேல் கனநித்திரையின் ஆவியை வரப்பண்ணி, உங்கள் கண்களை அடைத்து, ஞானதிருஷ்டிக்காரராகிய உங்கள் தீர்க்கதரிசிகளுக்கும் தலைவர்களுக்கும் முக்காடுபோட்டார்.
- சங் 69:22,23 - அவர்களுடைய பந்தி அவர்களுக்குக் கண்ணியும், அவர்களுடைய செல்வம் அவர்களுக்கு வலையுமாயிருக்கக்கடவது. அவர்களுடைய கண்கள் காணாதபடி அந்தகாரப்படக்கடவது; அவர்கள் இடுப்புகளை எப்போதும் தள்ளாடப்பண்ணும்.
- இன்றைக்கும் ஆவிக்குரிய நலிவு மற்றும் இருதய கடினமுள்ள ஜனங்கள் இருக்கத்தான் செய்கிறார்கள், அதற்காக சுவிசேஷம் அதனுடைய பலனை இழந்தது என்று சொல்லமுடியாது. அவர்களின் மத்தியிலும் தேவன் தமக்கென்று தமது ஜனங்களை கொண்டுள்ளார்.

2. தோல்வியடைந்த இஸ்ரவேலர் மூலமாக தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் நடைபெறுகிறது (11:11).

இஸ்ரவேலரின் தோல்வி மேசியாவை சிலுவையில் அறைவதில் முடிவடைந்தது. இதுவே எல்லா ஜாதிகளும் இரட்சிப்படைவதற்கு ஏதுவானது (அப் 3:14,15,17,18). யூதர்களாலே சுவிசேஷம் புறக்கணிக்கப்பட்டதால் அந்த வாய்ப்பு புறஜாதிகளுக்கு சென்றதை அப்போஸ்தலர் நடபடிகளிலே காணமுடியும் (அப் 13:45-48).

ரோமர் 11ம் அதிகாரத்தில் யூதர்களின் தோல்வியால்...

- அது புறஜாதிகளுக்கு இரட்சிப்பாய் மாறியது (11:11).
- அது புறஜாதிகளுக்கு ஐசுவரியமுமானது (11:12)
- அது உலகத்தை ஒப்புரவாக்குதலுக்கு ஏதுவாயிற்று (11:15).

தேவனுடைய திட்டத்திற்கு இஸ்ரவேலர் தோற்றுபோனார்களே தவிர, தேவன் தமக்கென்று ஜனங்களை வைத்திருப்பதின் அந்த திட்டமானது தோற்றுபோகவில்லை. அதற்குபதிலாக இஸ்ரவேலின் தோல்வி தேவனுடையதிட்டத்தின் அதிவேக செயலாக காணப்பட்டது.

3. இரட்சிப்பின் வரலாற்று நிகழ்ச்சியின் முடிவு இஸ்ரவேலின் மீட்பில் உள்ளது (11:12-15)

இஸ்ரவேலின் பின்மாற்றம் ஒரு நிரந்தரவீழ்ச்சி இல்லை அவர்கள் புதுபிக்கப்படுவார்கள்.

இஸ்ரவேலின் புறக்கணிப்பின் முடிவானது புறஜாதிகள் ஏற்றுக்கொள்ளப்படுதலும், உலகத்திற்கு ஆசிர்வாதமுமாயிருக்கிறது. திரும்பவும் இஸ்ரவேல் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும்போது என்ன நடக்கும்?

- அவர்களுடைய தவறு உலகத்திற்கு ஐசுவரியமும், அவர்களுடைய குறைவு புறஜாதிகளுக்கு ஐசுவரியமுமாயிருக்க, அவர்களுடைய நிறைவு எவ்வளவு அதிகமாய் அப்படியிருக்கும் (11:12).
- அவர்களை அங்கிகரித்துக்கொள்ளுதல் மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானதுபோலிருக்கும் (11:15)

- இஸ்ரவேல் ஏற்றுக்கொள்ளப்படும்போது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மற்றும் உயிர்தெழுதல் ஆகியவை ஒரே நேரத்தில் நடைபெறும் (11:26).
- சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்படும் (8:21)

4. ஒலிவமரம் - தேவபிள்ளைகளின் சமுதாயம் (11:16:24)

இந்த பகுதியில் இரு உருவகங்கள் பயன்படுத்தப்படுகின்றன - முதற்பலன், வேர்.

- அறுவடையின் முதற்பலனை கர்த்தருக்கு அசைவாட்டுதல் என்பது அதற்குபின் வருகிற அனைத்து பயிர்களும் தேவனுடையதே என்பதற்கு அது அடையாளமாயிருக்கிறது (லேவி 23:10,11).
- வேரானது தேவனோடு உடன்படிக்கையை ஏற்படுத்தின முற்பிதாவாகிய ஆபிரகாமை குறிக்கிறது. வேரானது பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும் (11:16).
- முதற்பலனானது முற்பிதாக்களாக இருக்கலாம் அதாவது மீந்திருக்கிறவர்கள் அல்லது யூத கிறிஸ்தவர்கள்.
- கிறிஸ்து முதற்பலன் மற்றும் வேர் என்பதும் சாத்தியமாயிருக்கிறது!
- ஒலிவமரமானது தேவபிள்ளைகளின் சமுதாயம். இஸ்ரவேல் ஒலிவமரமாகவும், புறஜாதிகள் காட்டு ஒலிவமரமாகவும் இருக்கிறார்கள் (எபே 2:12)
- சில சுபாவ கிளைகள் முறித்துப்போடப்பட்டு, காட்டொலிவ கிளைகள் ஒட்டவைக்கப்பட்டிருக்கின்றன (11:17).
    - ஒலிவமரமானது கனிகொடுப்பதற்காக அதை புத்துயிரூட்டுகிற வழக்கம் பாலஸ்தீன தேசத்திலே காணப்பட்டது.
- வேருடைய பங்காளி - ஆபிரகாமின் வித்தாக கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கிறோம். புறஜாதிகள் ஆபிரகாமின் பிள்ளைகளாகவும், சுதந்தரராகவும் மாறுகிறார்கள் (கலா 3:14, 27-29).
- ஒலிவமரத்தினுடைய சாரத்தினுடைய பங்காளிகள் - இஸ்ரவேலுக்குரிய ஆசிர்வாதங்கள் இப்போது புறஜாதிகளுக்கும் கிடைக்கிறது.
    - கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார் (உபா 7:6).
    - சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள் (யாத் 19:5).
    - நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் (யாத் 19:6).
    - தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை. இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள் (1 பேதுரு 2:9,10).
- கிளைகள் ஒட்டவைக்கப்படுவதும், முறித்துப்போடபடுவதும் நம்முடைய நற்குணத்தைப் (விசுவாசத்தைப்) பொருத்து, தேவனுடைய அதிகாரத்தில் உள்ளது (11:20-23).
- விசுவாசிக்கிற புறஜாதிகள் ஒட்டவைக்கப்படுகிறார்கள் - இது தேவனுடைய நன்மையை காட்டுகிறது.
- விசுவாசியாத யூதர்கள் வெட்டப்படுகிறார்கள் - இது தேவனுடைய இறையான்மை அதிகாரத்தை காட்டுகிறது.
- புறஜாதிகள் விசுவாசத்தில் நிலைத்திராதிருந்தால் முறித்துப்போடபடுவார்கள் - இது தேவனுடைய இறையான்மை அதிகாரத்தை காட்டுகிறது.
- யூதர்கள் அவிசுவாசத்திலே நிலைத்திராதிருந்தால் அவர்கள் மறுபடியும் ஒட்டவைக்கப்படுவார்கள் (வச.23) - இது தேவனுடைய நன்மையை காட்டுகிறது.
- புறஜாதிகள் பெருமை பாராட்டாதபடிக்கும் (வச.18), மேட்டிமைச் சிந்தையாயிராமல் தேவனுக்கு பயந்திருக்கும்படிக்கும் (வச.20) எச்சரிக்கப்படுகிறார்கள்.

- ➢ உனக்கு நீயே பெருமைபாராட்டாதே - உனக்காக ஒலிவமரம் நிற்கிறது. தேவன் உன்னை ஆபிரகாமுடைய வாக்குத்தத்தத்தின் பங்காளியாக மாற்றியிருக்கிறார்.
- ➢ இஸ்ரவேலை அற்பமாய் எண்ணாதே - இப்போது முறிக்கப்பட்ட அவர்கள் பின்பு ஒட்டவைக்கப்படுவார்கள்.
- ➢ பயந்திரு - ஒட்டவைக்கப்பட்டிருக்கிற நீ அவருடைய தயவில் நிலைத்திராவிட்டால் வெட்டப்படுவாய் (வச.22).

ஒட்டவைக்கப்படுவதும், முறிக்கப்படுவதும் தனி நபரோடு அல்ல, இஸ்ரவேல் தேசத்தோடு சம்பந்தப்பட்டவை.

5. இஸ்ரவேலருக்கும், புறஜாதிகளுக்கும் தேவன் திட்டத்தை வைத்துள்ளார் (11:25-32)

யூதர்களுக்கான திட்டம்

- இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும் (வச.25)
    - ➢ ஒரு பங்கு மட்டுமே! எல்லா இஸ்ரவேலரும் அல்ல
- இன்றைக்கு அவர்களுக்கு இரட்சிப்பின் வழிக்கான கதவு திறக்கப்பட்டிருக்கிறது.
    - ➢ புறஜாதிகளுக்கும் இதே வழி திறக்கப்பட்டிருக்கிறது (11:31; 1:16).
- கர்த்தர் திரும்ப வரும்போது இஸ்ரவேல் ஒரு தேசமாக அவரிடம் திரும்பும் (11:26)
- ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் (ஆதி 17:7) பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக்கிற (11:28) இஸ்ரவேலரிடம் நிறைவேறுகிறது.

புறஜாதிகளுக்கான திட்டம்

புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும், புறஜாதிகளிலிருந்தும் மக்களை கூட்டிச்சேர்க்கிறார் (அப் 15:14; ரோமர் 9:24)

புறஜாதியாருடைய நிறைவு மற்றும் இஸ்ரவேலின் இரட்சிப்பு இதுவே தேவனுடைய திட்டமாயிருக்கிறது (11:25,26)

கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார் (9:28)

6. முடிவுரை

இவையெல்லாவற்றையும் நாம் பார்க்கும்பொழுது தேவன் தம்முடைய ஜனங்களுக்காகவே கிரியை செய்கிறார்.

- ➢ கிறிஸ்துவினாலே பாவிகள் நீதிமான்களாக்கப்படுகிறார்கள்
- ➢ பரிசுத்த ஆவியினாலே புதுவாழ்க்கையில் நடத்தப்படுகிறார்கள்.
- ➢ இரட்சிப்பின் முடிவில் மகிமையானது நமக்குள் வெளிப்படயிருக்கிறது.

தேவனுக்காக ஜனங்களை கூட்டிசேர்ப்பதை வரலாற்று நிகழ்ச்சியில் பார்க்கும்போது, எல்லாவற்றையும் செய்கிற அவருடைய ஞானம் மற்றும் வழிகள் ஆச்சரியமாய் இருக்கிறது. சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென் (11:36)

தேவனுடைய செயலை பார்க்கும்போது அவரை துதிக்காமல் இருக்கத்தான்முடியுமா?

## Q. <u>தேவனுக்குப் பிரியமான ஜீவபலி</u>

- உபதேசத்தைக் குறித்த பவுலின் விளக்கம் ஆராதனையோடு முடித்து, (11:36 - சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்) நடைமுறை புத்திமதிகளையும் ஆராதனையோடு ஆரம்பிக்கிறார் (12:1)
- ஆராதனை என்பது அறிவுசார்ந்ததாக அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. இதற்காக பயன்படுத்தக்கூடிய கிரேக்கப்பதமானது ‘லோகிகோஸ்’.
- ஆராதனை என்பது தேவன் நமக்கு செய்ததற்காக பதில் செய்வதாகும்.
    - ➢ உலக மக்கள் அவர்களுடைய தெய்வங்களை வணங்கும்போது ஏன்? எதற்கு? என அறியாமலேயே வணங்குகிறார்கள். ஆனால் நாமோ அறிவுப்பூர்வமாக அறிந்து ஆராதிக்கிறோம் (2 கொரி 5:14,15).
- நாம் இந்த ஆராதனையை அறிந்துகொள்வதற்கு பழைய ஏற்பாட்டு பலிகள் நமக்கு உதவியாக இருக்கின்றன.

1. ஒப்புக்கொடுக்கவேண்டும்

- தேவனுடைய பாராட்டுதலுக்காகவும், அவருடைய சேவைக்காகவும் நம்மை அவருக்கு முன்பாக சமர்ப்பிக்கவேண்டும்.

- ➢ அவர் நம்மில் பிரியப்பட்டு, அவர் விரும்பும் வண்ணமாக நம்மை உபயோகப்படுத்த நம்மை அவருக்கு முன்பாக சமர்ப்பிக்கவேண்டும்.

2. பலியாக…
   - ஆதியாகமத்திலே பலிகள் தாமாக முன்வந்து செலுத்தும் ஆராதனையாக இருந்தது.
   - லேவியராகமத்தில் முதல் பலியான சர்வாங்கதகனபலியானது ஆராதனையாக இருந்தது (1:3-9).
     - ➢ தோல் தவிர முழு சரீரமும் பலிபீடத்தில் தகனிக்கப்படவேண்டும் (7:8). ஆகவே நம்மை முழுவதுமாக தேவனுடைய பலிபீடத்தில் சமர்பிக்கவேண்டும்.
3. ஜீவ பலியாக…
   - பழைய ஏற்பாட்டு பலிகளிலே மிருகங்கள் மரித்தன மற்றும் அதில் ஒன்றும் மீதியாக வைக்கப்படுவதில்லை (7:15) ஆனால் இந்த பலியோ தேவனுக்காக நாம் வாழ்கிறோம்.
   - ஜீவபலிக்கு ஆசாரியர்கள் நல்ல உதாரணம் (எண் 8:10,11)
     - ➢ அசைவாட்டப்படும் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டவர்கள்.
     - ➢ கர்த்தருக்குரிய பணிவிடை செய்யும்பொருட்டு பிரித்தெடுக்கப்பட்டவர்கள்.
     - ➢ இஸ்ரவேலில் பிறக்கப்போகும் முதற்பிள்ளைகளுக்கு பதிலாக ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள் (எண் 8:16,17).
     - ❖ ஆட்டுக்குட்டியானவராகிய கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட நமக்கு இது உண்மையாயிருக்கிறது…ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம் (ரோமர் 14:7,8).
     - ❖ நீங்கள் உங்கள் அவயவங்களை... நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள் (ரோமர் 6:13).
     - ❖ ரோமர் 10:14,15 -
       - ○ நமது இருதயம் அவரைக்குறித்தே சிந்திக்கட்டும்
       - ○ நமது கைகள் அவருக்காக வேலை செய்யட்டும்.
       - ○ நமது கால்கள் அவருக்காக நடக்கட்டும்.
       - ○ நமது வாய் அவருக்காக பேசட்டும்.
4. பரிசுத்தமும்...
   - பரிசுத்தம் என்றால் பிரித்தெடுக்கப்படுதல் என்பது பொருள்... நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களைவிட்டுப் பிரித்தெடுத்தேன் (லேவி 20:26).
     - ➢ இஸ்ரவேலர் தங்களின் ஒழுக்கம் மற்றும் உணவுமுறையில்கூட பரிசுத்தமாயிருக்க தேவன் விரும்பினார் (லேவி 11).
   - பரிசுத்தமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தல் என்பது நம்முடைய சரீரத்தில் பரிசுத்தமாய் வாழ்வதாகும். பரிசுத்தம் நம் ஒவ்வொரு நடக்கையிலும் காணப்படவேண்டும் (2 கொரி 6:17; 1 பேதுரு 1:14,15)
   - பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே (எபி 12:14).
5. பிரியமுமான...(ஆங்கிலத்தில் - ஏற்கத்தக்கதாக)
   - சொல்லப்பட்ட பிரகாரமாக பலியை செலுத்தும்போது மாத்திரமே அது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாகும் (லேவி 1:9).
   - எப்படி ஜீவபலியாக வாழவேண்டும் என்பதின் விளக்கத்தை இரண்டாம் வசனத்தில் காணலாம்.

**a.** இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்...

- ஒத்துபோகுதல் என்பது வெளித்தோற்றமாக ஒன்றோடு இணைந்துபோவது ஆகும். இதன் அர்த்தமாவது இந்த உலகத்தின் பாவத்தில் தொடர்ந்து ஜீவிக்ககூடாது.
- முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாக... நடந்துகொண்டீர்கள் (எபே 2:1,2).
  - ➢ அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவித்தார் (கலா 1:4)

- கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கவேண்டும் (பிலி 2:15)

- இந்த உலகத்தின் இச்சைகளுக்கு பின்னால் செல்லகூடாது. இச்சை என்பது விரும்பபடாத காரியங்கள் மீது வைக்கும் ஆசையாகும்.
  - ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் (1 யோவான் 2:15-17).
  - வசனத்தைக் கேட்டும், உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட, அதினால் பலனற்றுப்போகிறார்கள். இவர்களே முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் (மாற்கு 4:19).
  - உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள் (1 தீமோ 6:8-10).
  - இந்த உலகத்தின் தரத்தை பின்பற்றக்கூடாது. எப்படிப்பட்ட ஒழுக்கநெறியுடன் வாழவேண்டும் என்பதை 12-15 வரையுள்ள அதிகாரத்திலேயும், மற்றும் கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்திலும் காணலாம்.
  - இந்த உலகத்தின் மனிதர்கள் பெருமையினாலும், சுயத்தினாலும் வழிநடத்தப்படுகிறார்கள். ஆனால் ஒரு கிறிஸ்தவனோ தாழ்மையினாலும், அன்பினாலும் வழிநடத்தப்படுகிறான்.

**b.** உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

- மறுரூபமாகுங்கள் - இதன் கிரேக்கப்பதமான ‘மெட்டமோர்போ’ என்பது முறையாக மாற்றம்பெறும் அடிப்படை மாற்றமாகும்.
  - கூட்டுபுழுவானது மாற்றம்பெறாமல் வண்ணத்துப்பூச்சியாக மாறி பறக்கமுடியாது. மாற்றம் இல்லாதபட்சத்தில் கிறிஸ்தவவாழ்க்கையின் ஒழுக்கநெறிகளும் வீணாக இருக்கிறது.
- இது ஒரு உள்ளான மாற்றம் - மனம் புதிதாகுதல் (சங் 51:7,10; கொலோ 3:8-10)
- இதில் இருதயம் கழுவப்பட்டு சுத்தப்படுவது சம்பந்தப்பட்டிருக்கிறது. புதிய காரியங்கள் சுத்தமான காரியமாயிருக்கிறது.
  - மறுரூபமாகுங்கள் என்பது ஒரு முற்போக்கான ஒரு செயலாகும் (2 கொரி 3:18 - மகிமை மேல் மகிமை அடையும்வரை).
  - மட்டுமல்ல இது ஒரு தொடர்ச்சியான செயலாகும் (2 கொரி 4:16 - நாளுக்குநாள்)
  - ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார் (ரோமர் 8:26).
  - உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம் (யோவான் 15:3).

**c.** தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக...

- நம்முடைய வாழ்வின் எல்லா சூழ்நிலையிலும் தேவனுடைய திட்டத்தை மறுரூபமாக்கப்பட்ட மனதால் மட்டுமே அறிந்துகொள்ளமுடியும்.
- கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தில் முதலாவது இருதயத்தின் நிலையை காணலாம் (மத் 5:1-12)

- நம்முடைய வாழ்க்கையின் பாதையில் அநேக காரியங்கள் வரலாம். நம்முடைய வாழ்வில் தேவனுடைய திட்டத்தின் அநேக கோணங்களை ரோமர் 12-15 வரையுள்ள அதிகாரத்தில் காணலாம்.
- தேவனுடைய பிரசன்னத்தில் புதிதாக்கப்பட்ட மனம் (12:1,2)
- சபையில் புதிதாக்கப்பட்ட ஊழியம் (12:3-13)
- சமுதாயத்தில் புதிதாக்கப்பட்ட வாழ்க்கை (12:14-21)

**R.** <u>சபையின் ஊழியங்கள் (12:3-8)</u>

- அடுத்தபடியாக தனிப்பட்ட முறையில் கர்த்தருக்கென்று அர்ப்பணிப்பதுவும், கிறிஸ்தவ வாழ்க்கையின் மிக முக்கியமானதுவுமாக இருப்பது சபையின் ஐக்கியமும் ஊழியமுமாகும்.
- கிறிஸ்தவ வாழ்க்கையின் வளர்ச்சிக்கு சரியான சூழ்நிலையாக இருப்பது சபை.
- சபையின் அடிப்படை ஒழுங்கு ஐக்கியம் மற்றும் ஊழியம் ஆகும்.
  - அநேகராகிய நாம் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் தனித்தனியே அவயவங்களாயிருக்கிறோம் (12:5; 1 கொரி 12:12-27).

ஊழியத்தின் ஆதாரம் மற்றும் அளவு (12:3,6; 1 பேதுரு 4:10)

  - ஊழியத்தின் ஆதாரம் என்னவென்றால் 'நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்கள்' (12:6)
  - பவுலும் எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது (12:3) என்று சொல்லுகிறார்.
- ஊழியத்தின் அளவு என்னவென்றால் அவனவனுக்கு பகிர்ந்த விசுவாசஅளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும் (12:3).
  - விசுவாசம் கிருபையின் உத்திரவாதமாயிருக்கிறது.
- நமது சுயதற்பரிசோதனையின் நேர்மறை மற்றும் எதிர்மறையான ஆலோசனைகளை 12:3ல் காணலாம்.
  - எதிர்மறையான ஆலோசனை - எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல் அதாவது நம்முடைய பொறுப்புகளில் மிஞ்சிபோகுதல் ஆகும். முதன்மையாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு (3 யோவான் 9,10)
  - நேர்மறையான ஆலோசனை - நம்முடைய சரியான பொறுப்பு மற்றும் ஊழியம் எது என்பதை அறிந்து நிதானமாக செயல்படவேண்டும்.
    - 1 கொரி 12:21 - அதிக முக்கியத்துவமுள்ளது என்றும்
    - 1 கொரி 12:15 - முக்கியமில்லாததென்றும் என்றும் எண்ணக்கூடாது.

ஊழியத்தின் பாதை (திசை) 12:4,5

- நாம் ஒரே சரீரமாயிருக்கிறோம். ஊழியமானது முழு சபையின் வளர்ச்சிக்கு ஏதுவாய் காணப்படவேண்டும் (1 கொரி 12:7).
- ஒவ்வொரு உறுப்பினர்களும் மற்றவர்களுடைய ஒன்றாக இருக்கிறோம். உ.ம்: கண் காலுக்குரியதாயிருக்கிறது.
- குறிப்பிட்ட நபருக்கு என்ன தேவையோ அதை செயல்படுத்தவேண்டும் (1 கொரி 12:23,24).
  - எபே 4:7 - தனக்கு கொடுக்கப்படாத வரங்களை குறித்தும் தலையிடகூடாது. அது சபைக்கு பிரச்சனையை விளைவிக்கும்.
  - அதேசமயம்,எனக்கு எந்த வரமும் கொடுக்கப்படவில்லை என்ற தாழ்வுமனப்பான்மையும் வரக்கூடாது. அது சபையை வளரவிடாது.
- ஆவிக்குரிய வரங்கள் என்பவை விளையாட உதவும் விளையாட்டு பொருளோ அல்லது சண்டையிட உதவும் ஆயுதமோ அல்ல சபையை கட்டியெழுப்ப உதவும் கருவிகளே!
- கொரிந்து சபையிலே தங்களுடைய ஆவிக்குரிய வரங்களை முக்கியப்படுத்திக்காட்டும் மும்மரத்தில் தங்களின் ஆவிக்குரிய குணங்களான அன்பு, சந்தோஷம், சமாதானம் இவற்றை தொலைத்தனர்.

- 1 கொரி 15:10 - ல் பவுல் தனது தனிப்பட்ட சாட்சியை பகிரும்போது, தேவனுக்கே மகிமை செலுத்துகிறார்.

ஊழியத்தின் வகைகள் (12:6-8)

- ஏழு வகையான ஊழியத்தை குறித்து இங்கே பார்க்கிறோம்.

1. தீர்க்கதரிசனம்
   - தீர்க்கதரிசனம் என்பது தேவனுடைய ஆலோசனையை சொல்லுவதாகும். தேவனிடத்திலிருந்து வரக்கூடிய செய்தியாகும்.
   - தேவனுடைய செய்தியானது வெளிப்பாட்டின் மூலமாக கிடைக்கிறது (எபே 3:5).
   - இங்கே தீர்க்கதரிசியின் ஊழியமானது மறைந்திருக்கிற அல்லது அறியாதிருக்கிற சத்தியங்களை மக்களுக்கு வெளிப்படுத்துவதாகும்.
   - அப்போஸ்தலர்களுடைய செய்தியானது எல்லா தலைமுறையினருக்கும் இருக்கும்படியாக, ஸ்தல சபையில் உள்ள தேவனுடைய பிள்ளைகளுக்கு தீர்க்கதரிசிகள் மூலமாக கொடுக்கப்பட்டது.
   - ஒருவன் தீர்க்கதரிசனம் சொல்லும்போது மற்றவர்கள் நிதானிக்கனும் (1 கொரி 14:29).
   - தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன் (ரோமர் 12:6).
   - நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது (part) (1 கொரி 13:9).
   - தீர்க்கதரிசனம் உரைத்தலின் நோக்கமானது மனுஷருக்குப் பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகவேண்டும் (1 கொரி 14:3; அப் 15:32)
2. ஊழியம் (சேவை)
   சேவை என்பதற்கு பொதுவான அர்த்தத்தை 1 கொரி 12:5ல் காணலாம்.
   ஆனால் இங்கு பந்திவிசாரனை செய்வது (அப் 6:2) போன்ற நடைமுறை சேவையாகும் (உ.ம்: 2 தீமோ 4:11 - மாற்கு; ரோமர் 16:1 - பெபேயா)
3. போதித்தல்
   ஆரோக்கியமான உபதேசத்தை போதிப்பதாகும். ரோமருக்கு எழுதின நிருபத்தில் உள்ள பவுலின் போதனைகள் சிறந்த ஒரு உதாரணமாகும்.
   - தர்க்கரீதியான வரிசையில் தலைப்புகள் உருவாக்கப்படுதல்
   - ஆதாரத்திற்காக எழுதப்பட்ட வேதத்தை உபயோகப்படுத்துதல்.
   - உருவகம் மற்றும் உதாரணங்களை பயன்படுத்துதல் (உ.ம்: குயவன்- களிமன்; ஒலிவ மரம்; திருமண உறவு)
4. புத்திசொல்லுதல் (உற்சாகப்படுத்துதல்)
   தனிப்பட்ட கவனம் செலுத்துதல் (உ.ம்: தோட்டக்காரன் திராட்சத்தோட்டத்திலுள்ள அத்திமரத்தை பராமரிக்க பிரயாசப்படுவதுபோல)
   - உற்சாகப்படுத்துதல் (1 தெச 2:11,12 - தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல). பர்னபா (அப் 4:36); யூதா மற்றும் சீலா (15:32)
   - மேத்யூ ஹென்றி - சுவிசேஷத்தின் சத்தியத்தையும், சட்டதிட்டங்களையும் மக்களுக்கு போதிப்பதைவிட, எது நடைமுறையான காரியமோ அதை மக்கள் கடைபிடிக்கும்படியாக அவர்களை உந்துவதே ஒரு போதகரின் வேலையாகும் மேலும் ஒரு ஆசிரியருக்கு தெளிவான சிந்தையும், உற்சாகப்படுத்துகிறவருக்கு வெப்பமான இருதயமும் இருக்கவேண்டும் என்கிறார்.
   - ரோமர் 1-11 அதிகாரங்கள் - உபதேசம்; 12-14 - உற்சாகப்படுத்துதல்.
   - உற்சாகப்படுத்துதல் ஒரு மனுஷனுக்கு அறிவை அல்ல வளர்ச்சியை கொடுக்கிறது.
5. கொடுத்தல் (பகிர்தல்)
   - தேவன் மற்றவர்களை உற்சாகப்படுத்த அறிவு மற்றும் ஞானம் கொடுப்பதுபோல, மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கும்படியாக செல்வத்தையும் கொடுக்கிறார்.
   - மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் இப்படிப்பட்ட கிருபையை கொடுத்திருந்தார் (2 கொரி 8:1-4)
   - பணம் எளிதாக வருவதில்லை, அதற்காக பிரயாசப்படவேண்டும் (எபே 2:28)
6. தலைமைத்துவம் (ஆளுகை - 1 தெச 5:12; 1 பேதுரு 5:2))
   - ஆடுகள் மேய்ப்பனுக்கு பின்செல்லுகிறது (யோவான் 10:4)

7. இரக்கத்தைக் காண்பித்தல்
    - பிரச்சனையில் உள்ளவர்களுக்கு உதவுதல், வியாதியஸ்தர்களை கவனித்தல், முதியவர்களை மற்றும் ஆதரவற்றவர்களை பராமரித்தல் போன்றவை...
    - ஊழியத்தில் சகோதரிகளின் பங்கு (1 தீமோ 5:10 - பிள்ளைகளை வளர்த்து, அந்நியரை உபசரித்து, பரிசுத்தவான்களுடைய கால்களைக்கழுவி, உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவிசெய்து, சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பித்து, இவ்விதமாய் நற்கிரியைகளைக் குறித்து நற்சாட்சி பெற்றவளுமாயிருத்தல்)
    - கர்த்தர் நமக்கு கொடுத்துள்ள கிருபைகளை முழு ஆர்வத்தோடும், உண்மையான இருதயத்தோடும் செயல்படுத்தவேண்டும்.

## S. <u>சமுதாயத்தில் நம் அன்பு மற்றும் நற்குணத்தின் வாசனை (12:9-12)</u>

- சமுதாயத்திலே சகோதரர்கள், அண்டை அயலகத்தார் மற்றும் எதிரிகள் என பலதரப்பட்ட மக்கள் வாழ்கின்றனர் (2 கொரி 2:14, 15)
- நம்முடைய செயல்களாகட்டும் அல்லது எதிர்ச்செயல்களாகட்டும் அது நம்முடைய உண்மையான அன்பினால் உந்தக்கூடியதாக இருக்கவேண்டும்.
- உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக (12:9).

**a.** சகோதரனுடன் அன்பாக இருக்கவேண்டும் (12:10-13)

- சகோதர சிநேகம் சபையின் உபதேசமாக இருக்கிறது. அன்பு என்பது கொடுக்கிறதாயிருக்கிறது. சகோதரனுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.
- மேத்யூ ஹென்றி சொல்கிறார்: மற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதில் நாம் முன்பாக இருக்கவேண்டும். நம்மை நாமே புகழ்வதைவிட மற்றவர்கள் நம்மை குறித்து புகழ்வதை கேட்க விருப்பப்படுவோம்.
- மற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது சோம்பேறித்தனத்திற்கான சாக்குபோக்கு அல்ல (12:11,12).
- நாம் மற்றவர்களை நேசிக்கும்போது நாம் தேவன் மேல் வைத்திருக்கும் அன்பு குறையாது.
- அன்பு மற்றும் மற்ற நல்லொழுக்கங்களான கிறிஸ்தவ குணாதிசயங்கள் சேர்ந்தே செல்லக்கூடியதாக இருக்கிறது (1 கொரி 13:4-7).

அன்பின் நடைமுறை செயல்கள்.

- பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்தல; அந்நியரை உபசரித்தல் (12:13)
- கிறிஸ்து தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? (1 யோவான் 3:16,17).
- திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும்... பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது (யாக் 1:27).
- ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? (யாக் 2:15,16).

**b.** சாதாரண மக்களோடும் இணைந்திருக்கவேண்டும் (12:15,16).

- மக்களின் சந்தோஷத்திலும், துக்கத்திலும் கலந்துகொள்ளவேண்டும் (12:15).
- மற்றவர்களின் உயர்வைப்பார்த்து பொறாமைப்படாமல் அவர்களோடு சந்தோஷமாயிருக்கவேண்டும்.
- மற்றவர்களின் கஷ்டத்தைப் பார்த்து அவர்களை வெறுக்காமல், அவர்களை உற்சாகப்படுத்தி உதவிசெய்யவேண்டும்.

- மேட்டிமையான சிந்தையோடு இருக்கவேண்டாம் (12:6). தாழ்மையான சிந்தையோடும், தாழ்மையான மக்களோடும் இணைந்திருக்கவேண்டும்.
- மேத்யூ ஹென்றி சொல்கிறார்: ஏகாதிபத்திய நகரத்தில் வாழ்ந்த ரோமர்கள் அங்கேயேயிருந்து தங்களை தாங்களே சிறப்பானவர்களாக காண்பிக்கிறதற்கான சந்தர்ப்பங்களுக்காக ஆயத்தமாயிருந்தனர்.
- மேலும் அவர் சொல்லுகிறார்: வானத்திற்கும் பூமிக்கும் உயர்ந்தவராயிருக்கிற தேவன் தாழ்மையானவர்களை நோக்கிப்பார்ப்பதுபோல, நாமும் தாழ்மையானவர்களோடு உரையாடுவதற்கு வெட்கப்படகூடாது. கந்தைதுணியோ அல்லது விலையுயர்ந்த துணியோ உண்மையான அன்பிற்கு மதிப்புள்ளது. தங்கம் சேற்றிலிருந்தாலும் அது தங்கமே.
- நீ உன்னை ஞானியென்று எண்ணாதே (நீதி 3:7) - நான் மற்றவர்களோடு பேசுவதற்கு அவர்கள் என்னுடைய அளவிற்கு சிறந்தவர்கள் அல்ல என்று எண்ணக்கூடாது.

**c.** எல்லா மனிதரோடும் சமாதானமாய் இருங்கள் (12:17,18)

- எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள் (12:17). மனுஷரால் அங்கிகரிக்கப்பட்டவனுமாயிருக்க வேண்டும் (14:18)
  - ➢ ஏத்தின் புத்திரர் ஆபிரகாமை பார்த்து, ‘‘எங்களுக்குள்ளே நீர் மகா பிரபு’’ என்றனர் (ஆதி 23:6)
  - ➢ மோசே எகிப்து தேசத்தில் பார்வோனுடைய ஊழியக்காரரின் பார்வைக்கும் ஜனங்களின் பார்வைக்கும் மிகவும் பெரியவனாயிருந்தான் (யாத் 11:3).
- புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்துகொள்ளுங்கள். அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக (கொலோ 4:5,6).
- கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள் (12:18). இது உங்களை பொருத்தது. உங்களுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவாய் செயல்படவேண்டும்.
- நான் சமாதானத்தை நாடுகிறேன்; அவர்களோ, நான் பேசும் போது யுத்தத்துக்கு எத்தனப்படுகிறார்கள் (சங் 120:7).
- அந்தத் துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள் (1 பேதுரு 4:4).
- நாம் நம்முடைய நிலையில் சமாதானத்தோடும், ஞானத்தோடும் நடந்துகொள்ளவேண்டும். நாம் சரியான நிலையில் இருக்கிறோம் என்று உலகத்தாருக்கு தெரியும்.

**d.** எதிரிகளிடம் நன்மையாயிருத்தல் (12:14,17,19-21)

- நம்முடைய விருப்பத்திற்கு ஏற்றாற்போல் சில ஜனங்கள் இருக்கலாம் ஆனால், நம்மை துன்பபடுத்துகிற (வச.14) மற்றும் தீமைசெய்கிற ஜனங்களும் இருக்கிறார்கள்.
- ஆனால் நம்முடைய பிரதியுத்ரமோ, அவர்களை ஆசீர்வதிப்பதும், அவர்களுக்காக ஜெபிப்பதுவும், நன்மை செய்வதுமாகவே இருக்கவேண்டும். இதுதான் மலைப்பிரசங்கத்தின் பிரதிபலிப்பாக இருக்கிறது (மத் 5:32-48).
- பழிவாங்காமல் இருக்கவேண்டும் (12:19). கிறிஸ்துவைப்போல எல்லா காரியங்களையும் தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும் (1 பேதுரு 2:23).
- நியாயத்தீர்ப்பு, பழிவாங்குதல், கோபம் எல்லாம் தேவனுக்குரியது.
- நம்முடைய எதிராளியானவன் பிரச்சனையிலோ அல்லது தேவையிலோ இருக்கும்போது, அந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு உதவிசெய்யவேண்டும் (12:20).
- தீமையானது நமது சமாதானத்தை குலைக்கும்போது, அது நம்மை ஜெயித்துவிடுகிறது. நமது அன்பை அழித்துவிடுகிறது. நாம் பழிவாங்குவதற்கு

தூண்டுகிறது (12:21). ஆனால் அதே சமயம் பொறுமையோடும், நன்மையோடும் எதிர்கொள்ளும்போது, நாம் அந்த தீமையை ஜெயிக்கிறோம்.

- பரிசுத்த ஆவியானவரின் உதவியால்தான் நாம் பாடுகளின் மத்தியிலும், உபத்திரவத்தின் மத்தியிலும் அதிகமாய் ஜெயங்கொள்ளுகிறவர்களாய் காணப்படுகிறோம் (8:35-37).

**T.** <u>தேசத்தின் சிறந்த குடிமகன் (13:1-14)</u>

**a.** அரசாங்கத்துடன் நமது உறவு (13:1-7)

- கிறிஸ்தவர்கள் சட்டத்திற்கு கீழ்படியக்கூடிய குடிமக்களாக இருக்கவேண்டும். நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர்நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, …அதிகாரிகளுக்கானாலுஞ்சரி கீழ்ப்படியுங்கள் (1 பேதுரு 2:13,14).
- அதிகாரங்கள் தேவனால் நியமிக்கப்படுகிறது (13:1). *நேபுகாத்நேச்சார் இதை கஷ்டமான வழியில் இருந்தபோது கற்றுக்கொண்டான் (தானி 4:17,25,32).*
- அரங்கமானது நமது பொதுவாழ்வில் தீமையை சோதித்து, நன்மையை பற்றிக்கொண்டு நீதியாய் வாழ்வதற்கு தேவனால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும்.
- தேவனால் கொடுக்கப்பட்ட வேலையை அவர்கள் செய்கிறார்கள் (13:4)
  - கிறிஸ்தவ ஊழியமானது அன்பினாலும், பொறுமையினாலும் நன்மைக்கு நேராக நம்மை ஊக்குவிக்கிறது (12:14-21)
  - அரசாங்க ஊழியமானது நியாயத்தீர்ப்பு மற்றும் பட்டயம் ஆகியவை உண்டு என்பதின் மூலம் தீமையிலிருந்து நம்மை விலக்குகிறது (13:3,4).

அரசாங்கத்தோடு தொடர்புள்ள நிலையில் நம்முடைய கடமைகள்

- எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன் (13:1)
- சட்டத்திற்கு நாம் கீழ்படியவில்லையெனில் தேவனுக்கு கீழ்படியாது எதிர்த்துநிற்கிறோம். இது நியாயத்தீர்ப்பை கொண்டுவரும் (13:2).
- நாம் நன்மை செய்யும் பட்சத்தில், அதிகாரத்திற்குப் பயப்பட தேவையில்லை. அதினால் தண்டைனை அல்ல, புகழ்ச்சியே உண்டாகும் (13:3).
- நாம் செய்யக்கூடிய நன்மையை நல்மனசாட்சியோடு செய்யவேண்டும் மாறாக தண்டனைக்கு பயந்து செய்யக்கூடாது (13:5)
  - உலகமக்கள் தண்டனைக்கு பயந்து கீழ்படிகிறார்கள்.ஆனால்,கிறிஸ்தவனோ மனசாட்சிக்கு பயந்து சட்டத்திற்கு கீழ்படியவேண்டும். ஒருவேளை மனசாட்சிக்கு விரோதமான சட்டம் செயல்படுமானால் மனுஷனுக்கு அல்ல, தேவனுக்கே கீழ்படியனும் (தானி 6:7-10; அப் 5:29).
- நாம் அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய வரி மற்றும் அனைத்து கடமைகளையும் தவறாமல் செலுத்தவேண்டும் (13:6,7; மத் 12:17 - இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள்).

அன்பினால் பிரமாணத்தை நிறைவேற்றுதல் (13:8-10)

- மோசேயினுடைய பிரமாணமோ அல்லது ஒரு தேசத்தின் சட்டதிட்டங்களோ, மற்றவர்களுக்கு பொல்லாப்பு செய்யக்கூடாது என்பதையே சொல்லுகிறது.
- கொலை, திருட்டு, விபச்சாரம் ஆகிய பொல்லாங்கான காரியங்கள் தேசத்தின் சட்டதிட்டங்களால் தடைசெய்யப்பட்டிருக்கிறது. சமுதாய நடக்கையை ஒழுங்குபடுத்தும் சிறந்த சட்டங்களாக மோசேயின் பிரமாணமான பத்து கட்டளைகள் காணப்படுகின்றன.
- அன்பின் பிரமாணம் - தேவன் தமது ஜனத்திற்கென்று ‘‘உன்னில் நீ அன்புகூறுவதுபோல் பிறனிலும் அன்புகூறுவாயாக’’ என்கிறதான சிறந்த சட்டதிட்டங்களை வைத்திருக்கிறார் (லேவி 19:18; 13:9)
- அன்புதான் நியாயப்பிரமாணத்தின் சுருக்கமாய் இருக்கிறது (13:9)
- அன்பு நியாயப்பிரமானத்தின் நிறைவேறுதலாய் இருக்கிறது (13:10).
  - எதிர்மறையான சுருக்கம் - பிறனுக்கு தீங்கு செய்யாதே
  - நேர்மறையான சுருக்கம் - பிறனை நேசி
- எங்கு அன்பு காணப்படுகிறதோ அங்கே ஒவ்வொரு சட்டமும் கீழ்படிகிறது. ஒருவனிடம் அன்பு செலுத்தும்போது நாம் அவனுக்கு பொல்லாப்பு செய்யமுடியாது.

- அன்பு பரஸ்பர கடனாக இருக்கிறது (13:8)
  - வரி கட்டுவது அரசாங்கத்திற்குறியது.
  - மரியாதை செலுத்துவது அதிகாரத்திலுள்ள மக்களுக்குரியது.
  - அதுபோல நம் அயலகத்தாரிடம் அன்பு செலுத்துவதும் இருக்கிறது. இதுதான் பரஸ்பர கடனாக இருக்கிறது.
- ஒரு கிறிஸ்தவன் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றென்றிலும் ஒருவனுக்கும் கடன்படகூடாது.

அன்பு நம் உறவில் ஏற்படும் காயத்தை தடுப்பது மட்டுமல்ல, அன்பின் கடன் நமது உறவை வலுப்படுத்துகிறது.

ஒழுக்கமாக நடந்துகொள்ளுங்கள் (13:11-14)

- பிரமாணத்தின் கண்கானிப்பில் வராத நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் காணப்படுகிற சில தீமைகள் இருக்கின்றன. அவைகளில் சிலவற்றை 13:13-ல் காணலாம். 1:29-31-லும் (களியாட்டு, வெறி, வேசித்தனம், காமவிகாரம், வாக்குவாதம், பொறாமை, அநியாயம், துரோகம், பொருளாசை, குரோதம், கொலை, வஞ்சகம், வன்மம், புறங்கூறுதல், அவதூறுபண்ணுதல், தேவனைபகைத்தல், துராகிருதம்பண்ணுதல், அகந்தை, வீம்பு, பொல்லாதவைகளை யோசித்துப் பிணைத்தல், பெற்றாருக்கு கீழ்ப்படியாமை, உணர்வில்லாமை, உடன்படிக்கைகளை மீறுதல், சுபாவஅன்பில்லாமை, இணங்காமை, இரக்கமில்லாமை) சிலவை குறிப்பிடப்பட்டுள்ளன.
- இப்படிப்பட்ட ஜீவியமானது சமுதாயத்தில் சாட்சியில்லாத மோசமான வாழ்க்கையாக இருக்கும். சமுதாயத்தில் நம்முடைய வாழ்க்கையானது ‘‘ஒழுக்கமாக நடந்துகொள்ளுங்கள்’’ என்கிற எளிமையான விதிமுறையின்படி காணப்படவேண்டும்.

ஒழுக்கமாக நடந்துகொள்ளுவற்கான ஊக்கம்

- 13:12ன் படி நாம் இருளிலிருந்து வெளிச்சத்தினிடத்திற்கு வந்துள்ளோம். ஆகவே நமது வாழ்க்கையானது இருளுக்குரிய அந்தகாரத்தின்கிரியைகளாயிராமல் வெளிச்சத்திற்குரிய நற்கிரியைகளால் காணப்படவேண்டும்.
  - ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும் (எபே 5:8,9)
  - பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் (யோவான் 3:20,21)
- நாம் கடைசி காலங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் (13:11). கிறிஸ்துவின் வருகையான புதிய நாட்கள் வெகு சமீபமாயிருக்கிறது (எபி 10:37 - வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார்).
  - இது நாம் பரிசுத்த வாழ்க்கை வாழ்வதற்கான உச்சகட்டத்தின் நேரமாகும் (வெளி 22:10-12).
- ஒழுக்கமாக நடந்துகொள்ளுதல் என்பது இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுதல் ஆகும் (13:14). நம்முடைய குணாதிசயத்திலும், நடக்கையிலும் கிறிஸ்துவை வெளிப்படுத்தவேண்டும்.
  - மாம்ச இச்சைகளுக்கு தீனி போடவேண்டாம்.

## U. <u>கருத்து வேறுபாடுள்ள சகோதரருடனுள்ள உறவு (14:1-15:6)</u>

இந்த அதிகாரத்தில் விசுவாச குறைவுடன் காணப்படும் ஒரு தனிப்பட்ட நபரிடம் நம்முடைய உறவு எப்படி உள்ளது என பார்க்கப்போகிறோம்.

- மன ஐயம் என்பது ‘சந்தேகத்திற்குரிய காரியங்கள்’ என ஆங்கிலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (14:1). சந்தேகத்திற்குரிய காரியங்கள் என்று சொல்வது ஒரு தனிப்பட்ட விசுவாசியின் நம்பிக்கை மற்றும் அவரது கருத்தை பொருத்தது; அது ஆவிக்குரிய கொள்கை அல்ல.

<u>இங்கே பவுல் இரண்டு காரியங்களை குறிப்பிடுகிறார்.</u>

  - சாப்பிடும் உணவு சம்பந்தப்பட்ட காரியம் (14:2)
  - நாட்களை அநுசரிக்கிற காரியம் (14:5)

உணவு சம்பந்தப்பட்ட காரியங்களை குறித்து சொல்லும்போது…

  - மோசேயின் பிரமாணத்தில் தடைசெய்யப்பட்டவைகளை சாப்பிடாமல் இருப்பதும்

➢ விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை ஒதுக்குவதும் (1 கொரி 8) ஆகும். பரிசுத்த ஜீவியத்திற்கு சைவ உணவு வலியுறுத்தப்பட்டது (14:2; தானி 1:8,12).

இந்த உணவு மற்றும் நாட்களை குறித்து பவுல் தனது நிருபத்திலே உபதேசரீதியாக கூறும்போது…

- ➢ விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜனபதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள். தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல. அது தேவவசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும் (1 தீமோ 4:3-5).
- ➢ போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது (கொலோ 2:16,17).

- பவுலை பொருத்தமட்டில் உணவு ஒரு 'சந்தேகத்திற்குரிய காரியம்' அல்ல - ஒரு பொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்லவென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் அறிந்து நிச்சயித்திருக்கிறேன்; ஒருபொருளைத் தீட்டுள்ளதென்று எண்ணிக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு அது தீட்டுள்ளதாயிருக்கும் (14:14).
- இங்கே பவுல் விசுவாசியின் தனிப்பட்ட சுதந்திரத்தைக் குறித்து பேசுகிறார். ஒரு விசுவாசியின் தனிப்பட்ட கருத்துக்கள் நடைமுறைக்கு வரும்போது அது சபையின் ஐக்கியத்தையும், சந்தோஷத்தையும் குலைக்கக்கூடாது. இது உணவு மட்டுமல்ல உடை, நகை, பிறந்த நாள் எல்லாவற்றிற்கும் பொருந்தும்.

<u>இருவகையான விசுவாசிகள் உள்ளனர்</u>

- ➢ விசுவாசத்தில் பெலமுள்ளவன் - தனிப்பட்ட சுதந்திரத்தை நன்கு அறிந்தவன்.
- ➢ விசுவாசத்தில் பெலவீனமுள்ளவன் - இவனை பொருத்தவரை சில காரியங்கள் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு சரியாகாது என்று நினைப்பவன். மட்டுமல்லாது மற்றவர்கள் இப்படிப்பட்ட காரியங்களை செய்யும்போது இடறலடைகிறான்.

விசுவாசிகளான இவர்களுக்குள் நல்லுறவை காத்துக்கொள்ளும் பொறுப்பு இந்த இரண்டுபேருக்கும் இருக்கிறது. இவர்களுக்கு பவுல் ஆலோசனை…

- ➢ பெலமுள்ளவனுக்கு - உன் சகோதரனை அற்பமாயெண்ணாதே (14:3).
- ➢ பெலவீனனுக்கு - உன் சகோதரனை குற்றவாளியாகத் தீர்க்காதே (14:3,13)

- பேதுரு புறஜாதியாரோடு சாப்பிட்டதை சபை விமர்ச்சித்தது. (அப் 11:1-3) ஆனால், புறஜாதியாரையும் தேவன் சேர்த்துக்கொண்டார் என்று பேதுரு விவரிக்கிறார் (அப் 11:15-18). இந்த சத்தியத்திற்கு பேதுரு எப்போதும் நிலைத்திருக்கவில்லை. அந்தியோக்கியாவில் புறஜாதிகளுடன் சாப்பிட்டுக்கொண்டிருந்த பேதுரு பவுலைக் கண்டதும் மாய்மாலம் செய்ததை பவுல் கண்டிக்கிறார் (கலா 2:11-13). பெலமுள்ளவரும் பெலவீனமடைய முடியும் என்பதற்கு இது சான்று.
  - ➢ ஆகவே,பெலவீனரை தாங்கவும், ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். எந்த ஒரு காரியத்திற்காகவும் ஒருவரையொருவர் வாக்குவாதம் செய்வதோ, நியாயம் தீர்ப்பதோ, அற்பமாய் எண்ணுவதோ சரியல்ல ஏனெனில், நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்நின்று தேவனுக்கு கணக்கு கொடுக்கவேண்டும்.

மற்ற சகோதரனுடைய தனிப்பட்ட சுதந்திரத்தை கனப்படுத்தவேண்டும் (14:4-13).

- சகோதரன் ஒருவன் உன்னுடைய நம்பிக்கையை கடைபடிப்பதில்லை என்று குற்றப்படுத்தக்கூடாது (14:4)
  - ➢ உன்னுடைய கட்டளையை பின்பற்றுவதற்கு அவன் உன்னுடைய வேலைக்காரன் அல்ல. அவன் தேவனுடைய வேலைக்காரன், தேவனுக்கே அவன் கணக்கு கொடுக்கவேண்டும். அவனை நீ நியாயந்தீர்க்கும்போது, அவனுக்கு எஜமானனாயிருக்கிற தேவனுடைய விதியை மீறுகிறாய்.
- ஒருவன் அவன் மனதில் முழு நிச்சயமாய் நியமித்திருக்கிறதையே செய்யக்கடவன் (14:5), ஆனாலும் மனதில் எந்த ஒரு சந்தேகமில்லாதவனாக (சமுசயம்) காணப்படவேண்டும் (14:22,23).
  - ➢ நாம் எதைச் செய்தாலும் கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை அறிந்து கொண்டு, கர்த்தருக்காக செய்யவேண்டும் (14:6-8).
- நாமெல்லாரும் கணக்கு கொடுக்க கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போம் (14:10).
  - ➢ சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடைவதற்கு (2 கொரி 5:10),
  - ➢ உன் பார்வைக்கு உன்னுடைய சகோதரன் சரியில்லையென்று கண்டால், அவனை நியாயந்தீர்ப்பதற்கு அதை தேவனிடம் விட்டுவிடு.

- ➢ இந்த விஷயத்தில் அவனை இகந்தாழோ, நியாயந்தீர்த்தாலோ அல்லது குற்றவாளியாக கருதினாலோ நீ தேவனுக்கு முன்பாக கணக்கு கொடுக்கவேண்டும்.

மற்ற சகோதரர்கள் நிமித்தமாக நமது சுதந்திரத்தை ஒரு எல்லைக்குள் (கட்டுக்குள்) வைத்திருக்கவேண்டும் (14:14-15:6).

- எந்த உணவும் சுத்தமுள்ளதே! கிறிஸ்துவும் அதை சொல்லியிருக்கிறார்.
  - ➢ மனுஷனுக்குப் புறம்பே இருந்து அவனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டாது (மாற்கு 7:15)
- ஒருவன் அவனது விருப்பத்தின்படி உணவை தெரிந்தெடுக்க அவனுக்கு உரிமை உள்ளது. நாம் செய்யக்கூடிய அனைத்தும் சகோதரனுடைய சந்தோஷத்திற்காகவே இருக்கவேண்டும் (14:15,16).
- யாருக்காக சில உணவை விட்டுகொடுக்கவிரும்புகிறாயோ, அவனுக்காகவும் கிறிஸ்து மரித்துள்ளார்.
- உன் சகோதரனைக் குறித்த கவலை உனக்கு இல்லையெனில் அவன் இரண்டு வழிகளில் இடறுவதற்கான வழிகள் உள்ளன (1 கொரி 8:10-12).
  - ➢ உன் சகோதரன் தவறாக நினைக்கும் ஒரு காரியத்தை நீ செய்யும்போது அவன் துக்கப்படுகிறான்.
  - ➢ நீ அந்த காரியத்தை செய்வதை அவன் பார்த்து, எதை அவன் தவறாக நினைத்தானோ அதை செய்வதற்கு அவன் இருதயம் கடினப்பட்டுவிடுகிறது.

உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள் (14:16).

- பெலவீனமான சகோதரன் கட்டுபாடில்லாத உங்களின் இந்த சுதந்திரத்தை குற்றப்படுத்தக்கூடும்.
- வெளியிலிருந்து பார்க்கிறவர்கள் 'கிறிஸ்தவ ஐக்கியத்தை ஒரு சண்டையிடும் மக்களாக' தான் பார்ப்பார்கள்.
  - ➢ ஆவிக்குரிய உண்மையான ஆசீர்வாதத்தை சரியாக புரிந்துகொள்ளக்கூடியவர்களாக இருக்கவேண்டும் (14:17-20).
    - ○ தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல (ஆகவே, போஜனத்திற்கு ஒரு விசுவாசி முக்கியத்துவம் தரவேண்டிய அவசியம் இல்லை), அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.
    - ○ இவைகளை செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கிகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான்.
    - ○ சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம் (சகோதரனை இடித்துபோடவல்ல ஊன்ற கட்டவேண்டும்).
    - ○ எந்தப் பதார்த்தமும் சுத்தமுள்ளதுதான்; ஆனாலும் இடறலுண்டாகப் புசிக்கிறவனுக்கு அது தீமையாயிருக்கும்.
    - ❖ எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது (1 கொரி 10:23).
- பவுலின் மாதிரியை பின்பற்றுவதற்கான ஆலோசனையை காணலாம் (14:21)
  - ➢ மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்.
  - ➢ 1 கொரி 8:13 - போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன். பவுல் இதை கடைபிடித்தார்.
- நீ தேவனுக்கு முன்பாக உன்னுடைய மனசாட்சியின்படி இருக்கலாம், ஆனால் அது மற்ற சகோதரன் இடறுவதற்கும், அவன் உன்னை குற்றப்படுத்துவதற்கும் ஏதுவாயிராமல் இருக்கும்படியாக உனக்கும் தேவனுக்கும் மட்டில் இருக்கட்டும் (14:22).
- நாம் எதை செய்தாலும் அது தேவனுக்கு முன்பாக சரியாக இருக்கிறதா என்பதை கருத்தில்கொள்ளவேண்டும் (14:23).

*பிரச்சனைகளின் மத்தியில் நம் கிறிஸ்தவ வாழ்க்கை*

*ஒற்றுமையின்மை, பிரச்சனை என்பது நம் நடுவில் எப்போதும் உண்டு.*

- ➢ *1கொரி 1:10-13 - கொரிந்து சபையில் பிரிவினை இருந்தது.*
- ➢ *1கொரி 6:1-8 - நீதிமன்றங்களில் வழக்கும் தொடுத்தனர்.*
- ➢ *கலா 5:15 - கலாத்தியர் ஒருவரையொருவர் கடித்து பட்சித்தனர்.*
- ➢ *பிலி 4:2 - பிலிப்பி சபையில் இரு பெண்கள் ஒத்துபோகாதிருந்தனர்*

*தாவீது, சங் 133:1ல் சகோதரர் ஒருமித்து வாசம் செய்வது எத்தனை நன்மையும் இன்பமுமாய் இருக்கிறது என்கிறான். இப்படிப்பட்ட பிரச்சனைகளின் மத்தியில் நம் கிறிஸ்தவ வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும்.*

- ❖ *ஆகவே, பெலமுள்ள விசுவாசி தனது அறிவை பெலவீனமுள்ள விசுவாசியிடம் காட்டாமல் அன்பை காட்டவேண்டும். பெலவீனமுள்ள விசுவாசியும் பெலவீனமாகவே இராமல் கற்றுக்கொண்டு அறிவில் வளரவேண்டும்.*
- ❖ *பெலமுள்ள விசுவாசி அன்பிலும், பெலவீனமுள்ள விசுவாசி அறிவிலும் வளரவேண்டும்.*

கிறிஸ்துவின் மாதிரியும், வேதவசனத்தின் பாடமும் (15:1-4)

பாடுகள் மற்றும் நிந்தனைகள் மத்தியிலும் மற்றவர்களுக்கு பிரியமாய் இருக்கவேண்டும். இதுதான் சிலுவையை எடுத்துக்கொள்வது என்பதின் அர்த்தமாகும். 'தேவனுக்கு விரோதமாக நிந்திப்பது' என்பது சில சமயங்களில் மனிதனுக்கு நேராக வந்தடைகிறது விஷேசமாக ஊழியத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு இது சாத்தியமாகிறது (எண் 12:2,7 - மோசே; 1 சாமு 8:7 - சாமுவேல்)

தேவவசனத்தினால் பொறுமை, ஆறுதல், நம்பிக்கை ஆகிய பாடங்களை நாம் கற்றுக்கொள்ளமுடியும் (15:4). ஆபிரகாம், மோசே, யோசேப்பு, தாவீது ஆகியோர் முலமாக இப்படிப்பட்ட பாடங்கள் நமக்கு இருக்கிறது.

பவுலின் ஜெபமும் ஏகசிந்தையாய் இருக்கும்படியான விருப்பமும் (15:5,6)

'ஒருமனம்' என்பது அன்பினாலும், கரிசனையிலும் இணைக்கப்படுதலாகும், இதனுடைய சாராம்சம் ஐக்கியமாக இருக்கிறது (சங் 133:1).

'ஒரே வாயினால்' - இதனுடைய சாராம்சம் ஆராதனை மற்றும் சாட்சியில் இருக்கிறது. இவைகள் தேவனுக்கு மகிமையை கொண்டுவரும்.

ஒருவரையொருவர் பிரியப்படுத்தவேண்டும்: (15:1-7)

15:1,2 -- உண்மையான கிறிஸ்தவ அன்பு தன்னலமற்றது.

- அது மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளவும் மற்றவர்களை மகிழ்விக்கவும் விரும்பும்.
- இளம் கிறிஸ்தவர்களை தூக்கிச் சுமக்கும்.
- மற்றவர்களுக்கு உதவ தனது உரிமைகளையும் விட்டுக்கொடுக்க ஆயத்தமாய் இருப்பான்.இதை பாரமாக அல்ல,ஆசீர்வாதமாக எண்ணுவான்.
  - ➢ ஆதி 13:8 – ஆபிரகாம் லோத்துக்கு சொல்லிய வார்த்தைகள்:"எனக்கும் உனக்கும் வாக்குவாதம் வேண்டாம் நாம் சகோதரர்" என விட்டுக்கொடுக்கிறவனாக இருந்தான்.
  - ➢ 15:3 = சங் 69:9 -- இதற்கு நல்ல எடுத்துக்காட்டு இயேசுகிறிஸ்து.நமக்கு ஊழியம் செய்வதற்கு பெரும் விலைக்கிரயம் செலுத்தினார் என்பதை பவுல் குறிப்பிடுகிறார்.

❖ நாம் செய்யக்கூடிய எந்தஒரு தியாகமும் கல்வாரிக்கு இணையாகாது.

15:5 -- நாம் இணைந்து (ஒருமனப்பட்டு) தேவனை மகிமைப்படுத்தவேண்டும்.

15:6 – நாம் ஏக சிந்தையாய் இருக்கவேண்டும்.

## V. <u>புறஜாதிகளுக்கு சுவிஷேசம் (15:7-33)</u>

தேவனுடைய சபையில் புறஜாதிகளுக்கான இடம் (15:7-14)

புறஜாதிகள் தேவனுடைய மக்களாக ஏற்றுக்கொள்வதை, பகிர்ந்தளிக்கும் சத்தியமாக ரோமர் 9-11 வரையிலான அதிகாரங்களில் கலந்துரையாடினோம். இது சமுதாய பரிமாணமாக இருக்கிறது. நூற்றாண்டுகளாக உருவான இந்த தடைகளை தகர்ப்பது சாதாரண ஒன்றல்ல.

- ➢ கலா 2:22ல் யூத கிறிஸ்தவர்கள் புறஜாதி கிறிஸ்தவர்களோடு அமர்ந்து சாப்பிடுவதை எதிர்த்தனர்.
- ➢ சமுதாயரீதியாக இன்றைக்கும் கிறிஸ்தவர்களிடையே வெள்ளையன் மற்றும் கருப்பன் என்கிற கலர் பிரச்சனை மேலை நாடுகளிலும், உயர்ஜாதி மற்றும் தாழ்ந்தஜாதி என்கிற பிரச்சனை இந்தியாவிலும் இருந்துவருகிறது.

*யூதர்கள் புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை எடுத்துச்சென்றனர் (அப் 8:4)*

*15:9 = சங்18:49 – யூதர்கள் புறஜாதியினர் நடுவில் தேவனை மகிமைப்படுத்தினர்.*

*15:10 = உபா 32:43 -- புறஜாதியினர் யூதர்களுடன் களிகூர்ந்தனர்.*

*15:11 = சங் 117:1 – யூதர்களும் புறஜாதிகளும் சேர்ந்து தேவனை புகழ்கின்றனர்.*

*15:12 = ஏசாயா 11:10 – யூதர்மேலும், புறஜாதிமேலும் கிறிஸ்து ஆளுகை செய்கிறார்.*

- ○ 15:12 - புறஜாதியினர் ஒரு காலத்தில் நம்பிக்கை இல்லாதிருந்தனர்.(எபே 2:12) இப்பொழுதோ நம்பிக்கை மட்டுமின்றி சந்தோஷத்தையும்,சமாதானத்தையும் பெற்றுள்ளனர்.(15:13)
- ○ யூதர் மற்றும் புறஜாதிகள் ஒரே கர்த்தரும், இராஜாவும், ஒரே மேய்ப்பருமானவரை பெற்றிருக்கிறார்கள் (15:12; யோவா 10:16)

- சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும், சகோதரர்களுக்குள்ளே புத்திசொல்லக்கூடிய ஊழியத்திலே புறஜாதி விசுவாசிகள் உற்சாகமாய் இருந்தனர் (15:14). ஆனால் இதற்கு மாறான காரியமாக யூத விசுவாசிகளோ இவைகளில் தேறவேண்டியவர்களாக காணப்பட்டனர் (எபி 5:12).
- பின்நாட்களிலே இந்த புறஜாதி விசுவாசிகள் பொருளாதார நிலையில் யூதவிசுவாசிகளுக்கு உதவகூடிய நிலையில் காணப்பட்டதாக பவுல் குறிப்பிடுகிறார் (15:26,27). பவுல் அவர்களை பெற்றுக்கொள்பவர்களாக மட்டுமல்ல கொடுக்கிறவர்களாகவும் இருக்கவேண்டும் என்று நினைப்பூட்டுகிறார்.
- பவுல் யூதர்களும், புறஜாதிகளும் சபையில் ஒருங்கிணைந்து காணப்படவேண்டும் என்று முழக்கமிடுகிறார். ஆனால் கிறிஸ்து தகர்த்தெரிந்த பிரிவினையாகிய நடுச்சுவர் (எபே 2:14), இன்றைக்கும் நம்மிடத்தில் காணப்படுகிறது.

புறஜாதிகளுக்கு பவுலின் ஊழியம்: (15:15-24)

- பவுல் புறஜாதிகளுக்காக நியமிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாய் இருக்கிறார் (15:15; 1:13-15).
  - அவருடைய இருதயம் இந்த ஊழியத்தினால் நிறையப்பட்டிருந்தது (பிலி 2:17).
  - தேவன் புறஜாதியாரை அங்கீகரிக்கும்படியாக, அவர்களை தேவனுக்கு முன்பாக ஒரு பலியாக ஒப்படைக்கிறார் (15:15).
  - கிறிஸ்துவானவர் அவருடைய கிரியை நிறைவேற்றும்படியாக புறஜாதியாரை பவுலின் வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப்பண்ணினார்.
  - புறஜாதிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கவேண்டும் என்ற ஆர்வத்தில் அவர் அநேக இடங்களுக்கு சென்று அறிவித்தார்.
    - எருசலேமிலிருந்து தென்கிழக்கில் இல்லிரிக்கம் வரை.
    - வடமேற்கில் சிரியா, துருக்கி மற்றும் கிரேக்கம் வரை.

  நாம் ஜனங்களை சந்திக்கவேண்டுமாயின், அவர்கள் எங்கு இருக்கிறார்களோ அங்கு நாம் செல்லவேண்டும்.
- சுவிசேஷம் அறிவிப்பதில் பவுலின் முக்கியத்துவத்தை 15:20-22ல் காணலாம் - கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்.
  - இந்தத் திசைகளிலே இடமில்லாதபடிக்கு அனைத்து இடங்களிலும் அறிவித்துள்ளார் (15:23). இப்போது புதிய எல்லைகளையும், இலக்குவையும் நோக்கிப்பார்க்கிறார்.
  - இத்தாலியில் உள்ள ரோமாபுரி, பின்பு அங்கிருந்து ஸ்பெயின்.
  - எருசலேம் தொடங்கி உலகத்தின் முடிவுபரியந்தம் என்று - அப்போஸ்தலர் நிருபத்தில் சொல்லப்பட்டபடியே (அப் 1:8), பவுல் இந்த பிரதான கட்டளையை சுமந்து சென்றார்.

ஊழியத்தினுடைய கூறுகள் (படிகள்)

- இடங்களுக்கு செல்லவேண்டும் (15:19)
- மக்களை சந்திக்க வேண்டும் (1:14,16)
- சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் (15:16)

பவுலின் திட்டம் (15:25-33)

1. இப்போது பவுலிடம் ஒரு பொறுப்பு இருந்தது (15:25-27). பவுலும் அவரது உடன் ஊழியர்களும் எருசலேமில் கஷ்டப்பட்ட யூதபரிசுத்தவான்களுக்கு உதவி செய்யும்பொருட்டு கிரேக்கத்திருச்சபைகளிலிருந்து ஒரு விசேஷித்த காணிக்கை சேகரித்தனர் (2 கொரி 8,9). ஆகவே பவுல் எருசலேமை நோக்கி பிரயாணப்படவேண்டியதாயிருந்தது.

*இந்த காணிக்கை,*

- *புறஜாதிகள் யூதவிசுவாசிகளிடம் காட்டும் அன்பை வெளிப்படுத்துகிறது.*
- *வறுமையில் இருந்த யூதவிசுவாசிகளுக்கு பெரிய உதவியாக இருந்தது.*
- *சபைக்குள் யூதர்,புறஜாதி என்ற பிரிவு இன்றி ஒற்றுமையை வலுப்படுத்தியது.*
- *யூதர்கள் மூலம் ஞானநன்மையை கண்ட புறஜாதியார் தாங்கள் திருப்பிசெலுத்தும் கடனாக பவுல் காண்கிறார்.*

2. இந்த தர்ம ஊழியத்தை முடித்துவிட்டு, ஸ்பானியா போகும்போது ரோமாபுரி செல்லவேண்டும் என்பது பவுலின் விருப்பமாக இருந்தது (15:28; அப் 19:21).

பவுல் ரோமாபுரியில்…

- அவர்களுடைய ஐக்கியத்தின் சந்தோஷத்தை விரும்பினார் (15:30)
- அவர்களோடு ஊழியம் செய்வதை விரும்பினார் (15:29; 1:11,12,15)
- அவர்களாலே வழிவிட்டனுப்பும்படியாய் விரும்பினார் (15:24)

3. ரோமிலிருந்து ஸ்பானியா (ஸ்பெயின்) - இது பவுலின் ஊழியத்தில் காணப்பட்ட புதிய எல்லைப்பகுதியாய் இருந்தது.

மனிதன் விருப்பத்தை தெரிவித்தலும், தேவன் புறக்கனித்தலும்

எருசலேமில் பவுல் எதற்கு பயந்தாரோ அது நடந்தது (அப் 21:17-36). எருசலேம் தேவாலயத்தில் பவுல் நுழைந்ததும் மிகப்பெரிய குழப்பம் ஏற்பட்டது. பவுல் கைது செய்யப்படுகிறார். அதிகாரிகளுக்கு மேல் அதிகாரிகள், சோதனைக்கு மேல் சோதனை, இடத்திற்கு இடம் என கொடுரமான சோதனைகள் நடைபெறுகின்றன. கடைசியில் ரோமாபுரிக்கு பிரசங்கியாக அல்ல கைதியாக கொண்டுவரப்படுகிறார் (அப் 28:16).

அவருடைய ஊழிய வாஞ்சையான ஸ்பானியாவிற்கு போகவேண்டும் என்பதை குறித்து - அவர் அங்கு சென்றரா? என்பதை நாம் அறிவதில்லை. இருப்பினும் தேவன் தம்முடைய பாதையில் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டுதான் இருக்கிறார்.

- ரோமாபுரி சிறையில் பவுல் யூதர்களிடையே செய்த ஊழியம் (அப் 28:17,29)
- சிறைச்சாலை காவலருடன் தன்னுடைய சாட்சியை பகிர்ந்துகொள்கிறான் (அப் 28:16; பிலி 1:13)
- சிறைச்சாலையிலிருந்து பவுல் நான்கு விலையேறப்பெற்ற நிருபங்களை எழுதினான் (பிலிப்பியர், எபேசியர், கொலோசேயர், பிலமோன்)
- நிறைவான பலனுள்ள ஊழியத்தை கண்டான். நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் (2 தீமோ 4:7).

## W. <u>கிறிஸ்தவ ஐக்கியம்: (16:1-26)</u>

இந்த அதிகாரமானது, வித்தியாசமான இடங்களில் வாழ்கிற கிறிஸ்தவ சமுதாயத்தில் அவர்களுக்குள்ளாக உள்ள உறவை குறித்து முன்வைக்கிறது.

பவுல் கொரிந்து சபையில் உள்ள விசுவாசிகளை எப்படி அழைக்கிறார் என்று பாருங்கள் (1 கொரி 1:2 - கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து). நாம் மந்தை மந்தையாக கூடிவாழும் செம்மறி ஆடுகள். (ஐக்கியம் அவசியம்)

- தன்னுடைய அப்போஸ்தலத்துவத்தை வெளிப்படுத்தும்படியாக இந்த கடிதத்தை எழுதுகிறார்.

தான் ஆரம்பிக்காததும், இதுவரை கண்டிராததுமான ரோமாபுரி சபையில் பவுல் அநேகரை அறிந்து வைத்திருந்தார். ஏறக்குறைய 25க்கும் மேற்பட்டவர்களுக்கு தன்னுடைய வாழ்த்துதலை தெரியப்படுத்துகிறார். அதில் அநேகரின் பெயரை அறிந்திருந்தார். அவர்களில் அநேகர் பெண்கள். பவுல் இவர்களுக்கு வெளிப்படுத்தக்கூடிய வார்த்தைகளை பார்க்கும்பொழுது கிறிஸ்தவ ஐக்கியமானது ஏதோ சாதாரணமாக இல்லாமல் உணர்வுபூர்வமானது.

- கர்த்தருக்குள் எனக்குப் பிரியமான (16:8)
- கிறிஸ்துவுக்குள் நம்மோடே உடன் வேலையாள் (16:9)
- கர்த்தருக்குள் பிரயாசப்படுகிற (16:12)

இந்த அதிகாரம் பவுல் ஆத்தும ஆதாயம் செய்பவராக மட்டுமல்ல நல்ல ஒரு சிறந்த நண்பராகவும் இருந்துள்ளார் என்பதை காட்டுகிறது.

<u>வாழ்த்து பெற்றவர்கள்</u>

பெபேயா (1,2)

சபையில் சில தேவபக்தியுள்ள பெண்கள் உதவிக்காரர்களாக இருந்தனர். இவர்களுடைய ஊழியமானது பொதுவான நிலையில் பிரசங்கிப்பது அல்ல, மாறாக பெலவீனமுள்ளவர்களை சந்திப்பதும், அவர்களுக்கு ஆவிக்குரிய மற்றும் சரீர பிரகாரமான தேவைகளை அறிந்து சேவிப்பதுவுமே இவர்களது ஊழியமாகும்.

புதிய ஏற்பாட்டில் இப்படிப்பட்ட சகோதரர்களையோ, அல்லது சகோதரிகளையோ ஒரு சபையானது மற்ற சபைக்கு அனுப்பும்போது அவர்களை சபையானது ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய ஊழியத்தில் பலனைபெற்றுக்கொள்ள இடமளிக்கவேண்டும்.

- பெபேயா கெங்கிரேயா சபையில் உதவிக்காரியாக இருந்திருக்கவேண்டும். கெங்கிரேயா என்பது கொரிந்து பட்டணத்தின் துறைமுகம். மற்றவர்களுக்கு உதவி செய்யக்கூடிய ஒருவருக்கு, அவர்களுடைய தேவைகளில் கட்டாயம் நாம் உதவவேண்டும்.
- அவள் இக்கடிதத்தை ரோமாபுரிக்கு எடுத்துச் சென்றவள்.

ஆக்கில்லா,பிரிஸ்கில்லா (16:3), (அப் 18:1-3, 18-19, 26)

- பவுலின் உடன் வேலையாட்கள்.
- பவுலுக்காக தங்கள் கழுத்தை கொடுத்தவர்கள்.
- இக்கடிதம் எழுதப்படும்போது ரோமில் இருந்துள்ளனர். மட்டுமல்லாது ரோமாபுரி சபையானது இவர்களுடைய வீட்டில் கூடிவர இடம் கொடுத்தவர்கள்.

எப்பனெத்து (5)

- கிறிஸ்துவுக்குள் பிரியமானவன். அகாயாவில் முதற்பலன்

மரியாள் (6) திரிபேனாள், திரிபோசாள், பெர்சியாள் (12) அம்பிலியா (8) ஸ்தாக்கி (9)

- கிறிஸ்துவுக்குள் பிரியமானவள்
- கர்த்தருக்குள் பிரயாசப்பட்டவர்கள்

உர்பான் (9) தீமோத்தேயு (21)

- பவுலின் உடன் வேலையாட்கள்

அன்றோனீக்கு, யூனியா (7)

- அப்போஸ்தலருக்குள் பேர்பெற்றவர்கள்
- பவுலுக்கு முன்னமே இரட்சிக்கப்பட்டவர்கள்.
- பவுலின் இனத்தார் (சொந்தமோ, கோத்திரமோ இருக்கலாம்)

ஏரோதியோன் (11)

- பவுலுடன் காவலில் இருந்தவர்கள்.

அப்பெல்லே (10)

- உத்தமன்

ரூபு (13)

- தெரிந்துகொள்ளப்பட்டவன்
- அவனது தாய் எனக்கும் தாய்போன்று இருந்தாள்.

வாழ்த்துதலை பெறும் மற்றும் சிலர்: அரிஸ்தொபூலு (10), அசிங்கிரீத்து, பிலெகோன், எர்மா, பத்திரொபா, எர்மேய் (14), பிலொலோக், யூலியாள், நேரேய் மற்றும் அவனது சகோதரி, ஒலிம்பா (15), நர்கீசுவின் வீட்டாரில் இரட்சிக்கப்பட்டவர்கள் (11)

<u>வாழ்த்துச்சொல்லக்கூடியவர்கள் (16:21-23)</u>

தீமோத்தேயு, (21)

- இவன் பவுலுக்கு உத்தம குமாரன்.
- பவுலோடு சேர்ந்து கஷ்டமான இடங்களில் பணிசெய்தவன்.
- பவுலைபோல மனதுள்ளவன் (பிலி 2:19,20)

லூகி, யாசோன், சொசிபத்தர், (21)

- உடன் யூதவிசுவாசிகள்

தெர்தியு (22)

- பவுல் சொல்ல சொல்ல இந்நிருபத்தை எழுதியவன்.

சகோதரனாகிய குவர்த்து, (23)

ஏரஸ்து (23)

- பட்டணத்து உக்கிராணக்காரன்.

காயு (23)

- கொரிந்துவிலே பவுல் தங்கியிருக்க இடம்கொடுத்து பராமரித்தவன். (1கொரி 1:14)

<u>பவுல், தவறான உபதேசத்தை உபதேசிக்கிறவர்களை எச்சரிக்கிறார் (16:17-19)</u>

- அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாதவர்கள்.
- தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்கிறார்கள்.(பிழைப்பிற்காக)
- நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

<u>எச்சரிக்கையும், ஆலோசனையும்</u>

- நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.
- அவர்களை விட்டு விலகவேண்டும்.
- நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்கவேண்டும்.

<u>ஆசீர்வாதம்</u>

பவுல் எழுதியதிலேயே மிக நீளமான முடிவு ஆசீர்வாதம் இதுதான் (16:25-27).

<u>பவுலின் உடன் வேலையாட்களில்...</u>

- தீமோத்தியு போதிக்கிறதிலும்
- தீத்து சபையை ஆளுகைசெய்வதிலும்
- லூக்கா, பவுலின் ஊழிய பிரயாணத்தை கிரமமாக எழுதுவதிலும்
- மாற்கு, பவுலின் சரீரபிரகாரமான தேவையை சந்திப்பதிலும்
- தீகிக்கு, பவுலின் உதவியாளராக இருந்து பவுலின் கடிதத்தை எழுதினதிலும்
- எப்பாப்பிரா மற்றும் எப்பாப்பிராதீத்து, ஸ்தல சபைகளில் குறிப்பிட்ட ஊழியத்தை செய்வதிலும்

இன்னும் சிலர் அவருடைய ஊழியத்திலும், பிரயாணத்திலும் உடன் இருந்தவர்களாக காணப்பட்டனர். இவர்களுக்குள்ளாக இருந்த இந்த உறவை இந்த உலகத்தில் கண்டதில்லை. இவர்களும் அநேக விதங்களில் தனது ஊழிய பங்கை வெளிப்படுத்தினார்கள்.

புகழாரம் (16:24-26)

சுவிசேஷத்தின் சத்தியமானது, பழைய ஏற்பாட்டிலிருந்தே நிழலாகவும், தீர்க்கத்தரிசனமாகவும் இருந்தது. ஆனால் மக்களின் அறிவுக்கு அது எட்டாததாய் இருந்தது. இப்பொழுதோ, அந்த சுவிசேஷத்தின் சத்தியமானது யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அது பழைய ஏற்பாட்டு வசனத்தின் தெளிவான விளக்கத்தாலும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷ பிரசங்கத்தாலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.